ANGLO ASIAN
MINI MART
513 High Road
Wembley,
Middx
Hao 4 ag
Tel: 020 8900 2451
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள், மரக்கறி
வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
Pub.

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

சிறுமுரசு

பிரித்தானியா

Eelamurasu Weekly

முரசு: 7 19 – 25 ஜூலை 2001 முழக்கம்: 340

FORWARD
CONSULTANTS
-CONSULTING FOR PEOPLE-
WE PROVIDE !!!!
*** ANY PURPOSE LOAN ***
*** BUSINESS LOAN ***
*** RESIDENTIAL MORTGAGES ***
CALL US ON 020 8900 9052
1 LANCELOT PARADE, LANCELOT
ROAD, WEMBLEY, MIDDX HAO 2 AJ, UK
info@forwardconsultants. co.uk
www.forwardconsultants.co.uk
Pub.

சிறீலங்காவில் பெரும் அரசியல் நெருக்கடி

பாராளுமன்றம் பலவந்தமாக திறப்பு

(17.07.01)

சிறீலங்காவின் அரசியல் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் கடுமையான நெருக்கடிகள் தற்பொழுது எழுந்து வருகின்றன. பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகளால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை அடுத்து உருவான அரசியல் நெருக்கடிகளை தொடர்ந்து, ஜனாதிபதி சந்திரிகா அதிரடியாகவும் ஏதேச்சதிகாரமான முறையிலும் பாராளுமன்ற கூட்டத்தொடரை இடைநிறுத்தி அடுத்த மாதம் 2ம் திகதி சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றுக்கு உத்தரவிட்டதையடுத்து, பெரும் அரசியல் நெருக்கடிகள் அங்கு எழுந்திருக்கின்றன. சந்திரிகாவின் உத்தரவினை அடுத்து மூடப்பட்ட பாராளுமன்றம் நேற்று ஐக்கிய தேசியக் கட்சி உட்பட்ட 70ற்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களால் பலவந்தமாக திறக்கப்பட்டிருக்கின்றது.

பாராளுமன்றத்தில் ரணில் உரையாற்றுகிறார்

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றத்தை அண்மிக்க விடாமல் பொலிசார் கடுமையான வீதித்தடைகளை போட்டு பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்தியிருந்த போதிலும் எதிர்க்கட்சிகளின் பாராளுமன்ற உறுப்

(☞ 2ம் பக்கம்)

யாழ் நகரில் கிளைமோர் தாக்குதல்

9 படையினர் படுகாயம்

(17.07.01)

யாழ்ப்பாணம் வைத்திய சாலை வீதியும் கோயில் வீதியும் இணையும் சந்தியில் நேற்று காலை 8.30 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றில் 9 சிறீலங்காப் படையினர் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் நால்வரது நிலை கவலைக்கிடமாக உள்ளதாக சிறீலங்கா இராணுவ தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. தாக்குதல் நடாத்தப்பட்ட இடத்திலிருந்து சுமார் 50 மீற்றர் தூரத்தில் சிறீலங்கா படையினரின் காவலரண் பகுதி ஒன்றும் அமைந்துள்ளது. இந்நி

(☞ 2ம் பக்கம்)

இலண்டன் வவுனியங்கம் மாதா யாத்திரையில் தமிழ் இளைஞர்களிடையே மோதல்

(17.06.01)

கிழக்கு இங்கிலாந்தின் வல்ஷிங்கம் பகுதியில் இருக்கும் மாதா கோவிலில் தமிழர்கள் வருடா வருடம் மேற்கொள்ளும் யாத்திரை இவ் வருடமும் நேற்று முன்தினம் நடந்து முடிந்ததன் பின்னர், தமிழ் இளைஞர்களிடையே மோதல் ஏற்பட்டதாகவும் இம் மோதலில் மூவர் படுகாயமடைந்ததுடன் ஒருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரியவருகிறது.

யாத்திரை முடிந்ததன் பின்னர் யாத்திரையாளர்களில் ஒரு பகுதியினர் நோர்போர்க் கடற்கரைப் பகுதியில் பொழுது போக்க சென்றவேளை, இரு இளைஞர் குழுக்களுக்கு இடையேமோதல் ஏற்பட்டு இவ் வன்முறைகள் இடம்பெற்றதாக தெரியவருகிறது.

இம் மோதலில் சுமார் 30 இளைஞர்கள் வரை ஈடுபட்டதாக சம்பவங்களை நேரில் கண்டவர்களை அடிப்படையாக

(☞ 2ம் பக்கம்)

மாணவர்கள் தொடர்ச்சியான போராட்டம்
வடக்கு கிழக்கில் கல்விச் செயற்பாடுகள் முற்றாக ஸ்தம்பிதம்

(16.07.01)

யாழ். பல்கலைக்கழக மாணவன் திவ்வியன் சிறீலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டதுடன், யாழ். பல்கலைக்கழகத்தை இராணுவத்தினர் மூடியமையை அடுத்து மாணவ சமூகத்திற்கும் சிறீலங்கா அரச படை தரப்புக்கும் இடையே கடும் முரண்பாடு கள் வெடித்துள்ளன. இதனை யடுத்து வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள அனைத்து கல்வி நிறுவனங் களும் செயலிழந்து போயுள்ளன.

கடந்த 2ம் திகதி யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் செயலாளர் திவ்வியன் கைது செய்யப்பட்டார். இதை ஆட்சேபித்து 4ம் திகதி முதல் யாழ்பல்கலைக்கழக மாணவர்கள் பகிஸ்கரிப்பில் குதித்தனர். 9ம் திகதி சிறீலங்கா அரசு மற்றும் இராணுவ அழுத்தம் காரணமாக பல்கலைக் கழகம் மூடப்பட்டது. அதைத் தொடர்ந்து வடக்கு - கிழக்கில் உள்ள பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள், உயர்கல்வி அமைப்புகள் யாவும் பகிஸ்கரிப்புப் போராட்டத்தில் குதித்தன. ஆனால் இவை எதனையுமே சிறீலங்கா அரசு மற்றும் இராணுவ தரப்புக்கள் கவனத்தில் எடுக்காதமையை அடுத்து வடக்கு கிழக்கு பகுதிகள் எங்கும் தொடர்ச்சியாக போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இளவாலையில் நான்கு பிள்ளைகளின் தாய் மீது வல்லுறவு

(16.07.01)

யாழ். பண்டத்தரிப்பு - கீரிமலை வீதியில் இளவாலைப் பகுதியில் வசித்து வந்த நான்கு பிள்ளைகளின் தயார் ஒருவர் சிறீலங்காப் படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப் பட்டுள்ளார். கடந்த வாரம் மீசாலை அல்லாரைப் பகுதியில் 42 வயதுப் பெண்மணி ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய சம்பவம் இடம் பெற்று ஓரிரு நாட்களில் சந்திரி

(☞ 2ம் பக்கம்)

தமிழினி
TAMILINI Cash and Carry
பல்பொருள் அங்காடி
195-197 The Broadway,
Southall, Middx Ub1 1LZ
Tel: 020 8606 9900
Fax: 020 8813 8269
• எமக்கு லண்டனில் வேறு எப் பகுதியிலும் கிளைகள் எதுவும் கிடையாது!

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

Siege Social
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.
RCS PARIS
B 399 673 110 (95B01491)
Directeur de la publication:
P. Velupillai
Redacteur: P. Sivaguru
Impression:
IMPRIMERIE PUBLI-HEBDOS 1
27 BERNAY, FRANCE.

நிர்வாகி: ப. வேலுப்பிள்ளை
நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்
ஆசிரியர்: பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-eelamurasu@noos.fr
Web side: www.eelamurasu.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:
பிரான்ஸ்:
Tel.: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64
ஜேர்மனி:
AMUTHASURABI
Rheinische Str-55, 44137 Dortmund.
அமுதசுரபி: 02311206692
அமரன்: 01734242356
டென்மார்க்: அ.ஜெயராகவன்
Sprotoflen - 53 - ST - TH
5800 Nyborg, Denmark.
Tel: 24422634 - Fax: 65302588
சுவிஸ்: தபாற்தொடர்பு
EELA MURASU
Postfach 238, 4313 Möhlin, Swiss.
Natel: 079 635 02 16
பிரித்தானியா:
தபாற்தொடர்பு:
EELAMURASU
5, Saxony Parade,
Hayes, UB3 2TQ.
Fax/Tel: 0208-56 16 877
ஜெயந்தன்: - Tel: 07956908145
கண்ணன் - Tel: 07884051522
பாஸ்கரன் - Tel: 07811040188
இத்தாலி: மக்கள் கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056
நோர்வே:
JAFFNA FOOD - Tel: 22425527
நெதர்லாந்து: தமிழ்நாடு
Tel: 076 5425804
அவுஸ்திரேலியா: "EELAMURASU"
P.O Box S-109, Homebush South
N.S.W 2140, Australia.
Tel: (02) 9649 5795
Fax: (02) 9649 5164
Mobil: 0403095073
E-Mail:tccsydney@one.net.au
கனடா:
Shoppers World Postal Outlet
3003 Danforth Ave., P.O.Box 93618
Toronto, ON., M4C 5R4
Tel: (416) 686-3041
Fax: (416) 686-3041

குறிப்பு:
இவ் இதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிறீலங்காவில்...

பினர்கள் இத்தடைகளை எல்லாம் மீறி பாராளுமன்றத்தில் உட்புகுந்து அங்கு கூட்டம் ஒன்றினையும் நடாத்தியிருக்கின்றனர். இக் கூட்டத்தில ஜனாதிபதி சந்திரிகாவை பதவிநீக்கம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையும் ஐ.தே.க. தலைவரால் முன்வைக்கப்பட்டதை அடுத்து பெரும் அரசியல் நெருக்கடிகள் அங்கு தீவிரமடைந்துள்ளன. சந்திரிகா அரசியலமைப்பிற்கு முரணாக செயற்படுவதால் அவரை உடனடியாக பதவி நீக்கம் செய்யவேண்டும் என்ற கோரிக்கை எதிர்க்கட்சிகளால் எழுப்பப்பட்டிருக்கின்றன. இந்தப் பதவி நீக்க கோரிக்கை பாராளுமன்ற சபாநாயகரின் அங்கீகாரத்தை பெறுமேயானால் மேலும் நிலமை மோசமாகும் என அரசியல் அவதானிகள் தெரிவித்திருக்கின்றனர்.

2005ம் ஆண்டு வரை பதவியில் இருக்க நேரடியாக மக்களின் வாக்குகள் மூலம் சந்திரிகா தெரிவாகியிருப்பதால் எதிர்க்கட்சிகளின் இந்த பதவி நீக்க கோரிக்கை எந்தளவிற்கு சாத்தியப்படும் என்ற ஐயங்களும் எழுந்திருக்கின்ற போதிலும் நிலமை இவ்வாறு தொடர்ந்தால் சிறீலங்காவின் எதிர்க்கட்சிகள் சந்திரிகாவின் பதவி இறக்கத்திற்காக சர்வதேச சமூகத்தின் உதவியை நாடமுற்படலாம் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இளவாலையில்...

காவின் படையினரால் இக் கொடூரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

97ம் ஆண்டு முதல் கணவனைப் பிரிந்து நான்கு பிள்ளைகளுடனும் மீசாலையில் வசித்து வந்த இவர், இடம்பெயர்ந்து இளவாலையில் வாழ்ந்து வந்துள்ளார். கடந்த 11ம் திகதி புதன் கிழமை இரவு வீட்டிலிருந்த போது அங்கு சென்ற படையினர் துப்பாக்கி முனையில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளனர். பாதிக்கப்பட்ட 35 வயதான மேற் படிப் பெண், வைத்திய சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வீரச்சாவை தழுவிய போராளிகள்

(15.07.01)

12.07.2001 அன்று நெடுங்கேணி வெடிவைத்தகல் பகுதியில் தவறுதலான வெடிவிபத்தின் போது வீரவேங்கை மதுசன் (இராசு இராசகுமார் - யாழ்), வீரவேங்கை கயல் காவலன் (சுபிரியல்பிள்ளை நிக்சன் ஜெயசீலன் - நானாட்டான் மன்னார்), 11.07.2001 அன்று மட்டு. தாண்டியடி பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினருடனான எதிர்பாராத மோதலின் போது கப்டன் சுடர்மணி ((யோசெப் எட்வேட் அலெஸ் பிரதீபன் - முல்லைத்தீவு), ஆகிய போராளிகள் வீரச்சாவை தழுவிக்கொண்டனர்.

10.07.2001 அன்று மட்டக்களப்பு பிரதேசத்தில் இராணுவத்தினருடனான மோதலின் போது லெப். நந்தினி (பொன்னையா புனிதமலர் - மட்டு), லெப். செல்விகா (தியாகராஜா வனிதா - மட்டு) ஆகிய போராளிகள் வீரச்சாவை தழுவிக்கொண்டனர்.

09.07.2001 அன்று முகமாலைப் பகுதியில் இடம்பெற்ற எதிர்பாராத மோதலின் போது 2ம் லெப். உதயசூரியன் (சிவலிங்கம் செல்வராசா - மட்டு), 07.07.2001 அன்று கிளாலிப் பகுதியில் தவறுதலான வெடிவிபத்தின் போது வீரவேங்கை அறிவினி (சத்தியநாதன் வளர்மதி - மன்னார்), 24.06.2001 மட்டு. காத்தான்குடி பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரின் சுற்றி வளைப்பின் போது சயனைட் அருந்தி லெப். இனியவன் அல்லது இசைமறவன் (தர்மா சுரேஸ் - அம்பாறை), 04.06.2001 அன்று அம்பாறை மாவட்டம் கஞ்சிகுடிச்சாறு பகுதியில் இராணுவத்துடனான எதிர்பாராத மோதலின் போது லெப். மணியாளன் (தம்பிமுத்து ஜெகநாதன் - மட்டு), கப்டன் முகிலதாசன் (முருகையா சிவராஜ் - அம்பாறை), மேஜர் ஆண்டகன் (தியாகராஜா சந்திரராஜ் - அம்பாறை) ஆகிய போராளிகள் வீரச்சாவை தழுவிக்கொண்டனர். 02.06.2001 அன்று அம்பாறை தம்பிலுவில் பகுதியில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் லெப். ராஜபாண்டியன் (தம்பிராசா யோகேந்திரன் - அம்பாறை) என்ற போராளி வீரச்சாவை தழுவிக்கொண்டார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலண்டன்...

வைத்து பொலிசார் தெரிவித்திருக்கின்றனர். ஒருவருக்கு கையிலும் இன்னொருவருக்கு தலையிலும் காயங்கள் ஏற்பட்ட போதிலும் மார்பில் கத்திக் குத்துக்கு இலக்கான இளைஞரது நிலையே கவலைக்கிடமாக இருப்பதாக தெரிய வருகிறது. இச் சம்பவங்களை அடுத்து மேற்படிக் கடற்கரைப் பகுதி பொலிசாரினால் மூடப்பட்டதுடன் தேடுதல் நடாத்தப்பட்டு சிலர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இலண்டன் நகரில் ஏற்பட்ட தமிழ் இளைஞர்களுக்கு இடையிலான மோதல் ஒன்றில் ஒரு இளைஞர் குத்திக் கொல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இவ் வன்முறைச் சம்பவங்கள் குறித்து பிரித்தானிய வாழ் தமிழர்கள் அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் நகரில்...

லையில் அப்பகுதியில் கிளைமோர் புதைத்து வைக்கப்பட்டு தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது படை தரப்பினரை பெரும் அச்சத்திற்கு உள்ளாக்கியுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மைக்காலமாக யாழ். குடாப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினர் மீது அதிகளவான தொடர்ச்சியான சிறு சிறு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவது விடுதலைப் புலிகள் அதிகளவில் யாழ்குடாவிற்குள் ஊடுருவியுள்ளதை வெளிக்காட்டுவதாக ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

நித்தி வாகன சேவை
உங்களின் மீட்டுத் தளபாடங்களை பெரிய 20M³ வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் ஓர்த், ஜரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

நித்தி:
0148050214 / 0613342518
0607348051 / 0148385825
Pub Fr

AArthi Euro Vision
அனைத்து தமிழ் நாடகங்கள்
(Sun, Raj, Vijay, Jaya, Sun news, Bharathi, other new Channel)
தமிழ் திரைப்படம்
Audio Cd, Video CD, DVD
தொடர்புகளுக்கு: Tel.Fax+49 228 663715
Handy: +49 01738910309
E.Mail: Arthiraj @ Aol.Com

INTEL PENTIUM 4 1,4 Ghz
CARTE MERE ASUS
D RAM 128 Mo PC 133
DISK DUR 20 Go 7200T (WD)
DVD ROM 12X40 PANASONIC
FLOPPY 1.44 Mo
CARTE VIDEO 32 Mo GEFORCE
CARTE SON 128 BITS CREATIVE
MODEM 56 Kbps OLITEC
BOITER MOYEN TOUR ATX
CLAVIER USB
SOURIS PS/2
HP 240 W
ECRAN 17 `` Garantie 3 ans sur site
Garantie 2 ans
Prix 8990 FTTC
LUNE INFORMATIQUE
26 RUE PERDONNET, 75010 PARIS
TEL 0153267670 / FAX 0153260874
LUNE INFORMATIQUE@IFRANCE.COM

ERRANCES TRAVELS
Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc
à partir de
Bombay - 3,900Frs.
Delhi - 3,900Frs.
Bangkok - 3,400Frs.
Colombo - 3,900Frs.
Singapour - 3,950Frs.
Madras - 4,800Frs.
Londres - 790Frs.
New york - 2,300Frs.
Montreal - 2,800Frs.
Oslo - 2,010Frs.
Toronto - 2,800Frs.
Nepal - 4,820Frs.
மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது
Li: 075 95 01 37
(ADV)

திருமலையில் இரு மீனவர்கள் காணாமல் போயுள்ளனர்
சிங்கள முதலாளிகளிடம் கடனாளிகளாக மீனவர்கள்

(15.07.01)

திருமலை திருக்கடலூரில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற இரண்டு மீனவர்கள் கடந்த 9ம் திகதி முதல் மீன்பிடிக்கச் சென்ற வேளை காணாமல் போயுள்ளதாகவும் அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணிகளில் மீனவர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் திருமலை தமிழ் மீனவர் அமையத்தினர் தெரிவித்துள்ளனர். இரண்டு பிள்ளைகளின் தந்தையான தவராசா ஜெயக்குமார் (21), சிங்கராசா ஜெபமாலைநாயகம் (32) ஆகிய இருவருமே இவ்வாறு காணாமல் போயிருக்கின்றார்கள். இவர்களை தேடிக் கண்டுபிடிக்கும் பணியில் மீனவர்கள் இறங்கியுள்ளதாகவும் இதுவரை இவர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறிருக்க திருமலை மீனவர்களை ஒடுக்குவதற்கு சிறீலங்கா அரசு ஏராளமான தமிழ் மீனவர்களை திட்டமிட்ட ரீதியில் கடனாளிகளாக ஆக்கியுள்ளதாக அங்கிருந்து வெளிவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. சிங்கள மீனவர்களுக்கு மீன்பிடிப்பதற்கான வசதிகள், கடன்கள், சலுகைகள் என வழங்கப்படுவதுடன், தமிழ் மீனவர்களுக்கு இவை அனைத்தும் மறுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் சிங்கள மீனவர்களிடம் இவர்களை கடன்களை வாங்கவைத்து இவர்களை கடனாளிகளாக்கி சிங்கள மீனவர்களுக்கு அடிபணியவைத்து வருவதாக தெரியவருகிறது.

இதேவேளை, பாதுகாப்பற்ற இடங்களில் வாழும் இத்தமிழ் மீனவர்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துக் கொண்டே வாழ்கின்றனர். இத் தமிழ் மீனவர்களில் 75 வீதமான வர்கள் கடனாளிகளாகவே இருக்கின்றனர். இவர்களில் அநேகர் 50 ஆயிரம் தொடக்கம் 2 லட்சம் ரூபா வரை சிங்கள முதலாளிமாருக்கு கடன் கொடுக்க வேண்டியவர்களாகவே உள்ளனர். இந்த கடன் காராணமாக தாம் பிடிக்கும் மீன்களை சிங்கள முதலாளிமாருக்கு, அவர்கள் நிர்ணயிக்கும் விலைக்கு கொடுக்க வேண்டிய நெருக்கடி நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர். அது மட்டுமன்றி நாளாந்தம் பிடிக்கும் மீன்களை விற்று வரும் பணத்தில் கிலோ ஒன்றுக்கு 2 ரூபாப்படி ஏற்கனவே பெற்ற கடனுக்கு வட்டியும் செலுத்துகின்றனர். அத்துடன் பெற்ற கடனை முழுமையாக செலுத்தி முடிக்கும் போதும் மீண்டும் முழு வட்டிப்பணத்தையும் செலுத்த வேண்டும் என்றும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இதனிடையே இம் மீனவர்கள் கடலில் தொழிலில் ஈடுபடும் பொழுது படையினரால் தாக்கப்படுவதும் கெடுபிடிகளுக்கு உள்ளாக்கப்படுவதும் அத்துடன் இவர்களின் படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் காணாமல் போவதும் சேதமாக்கப்படுவதும் அன்றாட நிகழ்வுகளாகிவிட்டன எனவும், இவ்வாறு தமிழ் மீனவர்கள் துன்பப்படுவதும் படையினருடன் தமிழ் மீனவரை சுரண்டி வாழும் 50க்கும் மேற்பட்ட சிங்கள முதலாளிமார் திருமலை நகரில் உள்ளதாகவும் தெரியவருகின்றது.

பாராளுமன்ற உறுப்பினர் வீட்டின் மீது குண்டுத் தாக்குதல்

(15.07.01)

சிறீலங்கா பொ.ஐ.மு.வின் கம்பகா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஆனந்த முனசிங்கவின் வீட்டின் மீது கடந்த 12ம் திகதி அதிகாலை கைக்குண்டுத் தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொ.ஐ.மு.வில் இருந்துகொண்டு தற்போதைய அரசின் நடவடிக்கைகளை இவர் எதிர்த்து வந்ததுடன், இவரது இந்நடவடிக்கையினால் இவரும் பத்து உறுப்பினர்களும் எதிர்க் கட்சிகளினால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிப்பார்கள் என்ற சந்தேகம் பொ.ஐ.மு.விற்குள் இருந்தது வந்ததாகவும் இந்நிலையிலேயே இத் தாக்குதல் நடாத்தப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதல் தொடர்பாக ஆனந்த முனசிங்க கூறுகையில், நான் வெளிப்படையாக நாட்டின் உண்மை நிலையைக் கூறுவதை விரும்பாத சிலரே இத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் மக்களின் அவசியங்கள் பற்றிக் கதைப்பதில் பிழையில்லை என நான் நினைக்கிறேன். அது எங்களது கடமை. ஜனாதிபதி பாராளுமன்றத்தை ஒத்தி வைத்து சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த உள்ளார். இதனால் பெரும் செலவு ஏற்படும். இதை நாம் விருப்பவில்லை. தலைவர்கள் தமது சொந்த இலாபத்தைப் பற்றிச் சிந்திக்காமல் நாட்டைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று கூறியுள்ளார். இதேவேளை, தனது பாதுகாப்பு கருதி வெளிநாடொன்றில் இவர் சென்று தங்கியிருக்க தீர்மானித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

முச்சக்கரவண்டி சாரதிகள் மீது படையினர் கடும் தாக்குதல்

(15.07.01)

மட்டக்களப்பு நகரில் உள்ள முச்சக்கர வண்டி சாரதிகள் நான்கு பேர் சிறீலங்கா விசேட அதிரடிப்படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். கடந்த புதனன்று நகரின் முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் நின்ற போது அங்கு சென்ற விசேட அதிரடிப்படையினரால் இவர்கள் அழைத்து செல்லப்பட்டு, சோதனைச்சாவடியில் வைத்து கடுமையாகத் தாக்கப்பட்டதாகவும், தாக்கப்பட்டது குறித்து மேலதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்யக்கூடாது என எச்சரிக்கை செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டதாகவும் முச்சக்கரவண்டிகளின் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

முச்சக்கர வண்டிகளை வாடகைக்கு அமர்த்தும் விசேட அதிரடிப்படையினர், அதற்கு பணம் கொடுப்பதில்லை என்றும், நகரில் பல இடங்களுக்கும் சென்று தமக்கு தேவையான பொருள்களை வாங்கி ஏற்றிச்சென்று விட்டு பணம் கொடுக்க மறுத்து வருவதாகவும், இது தொடர்பாக எழுந்த முரண்பாடு காரணமாகவே இந் நால்வரும் சிறீலங்கா அதிரடிப்படையினரால் அழைத்துச் செல்லப்பட்டு தாக்கப்பட்டதாகவும் முச்சக்கர வண்டி சாரதிகள் சங்க தலைவர் கூறியுள்ளார்.

யாழ். வைத்தியசாலையிலும் அவசர மருந்துகள் இல்லை

(15.07.01)

சிறீலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் உள்ள யாழ். போதனா வைத்தியசாலையிலும் பல்வேறு வகையான உயிர் காப்பு மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக வைத்தியசாலைச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எக்ஸ் கதிர்படத்தை பிரதி எடுக்கும் பொருட்களை வழங்க சிறீலங்கா அரசு தரப்பு மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளதால் எக்ஸ் கதிர் படம் எடுக்கும் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், கர்ப்பிணிப் பெண்களுக்கான பிரசவ வலியைக் குறைப்பதற்காக பயன்படுத்தப்படும் மருந்துகளுக்கும், மகப்பேற்றின் பின்னர் தாய்மாருக்கு ஏற்றப்படும் இரத்தப் போக்கினை நிறுத்த பயன்படுத்தப்படும் மருந்திற்கும், பிறந்த குழந்தைகளுக்கு உடன் ஏற்றப்படும் மருந்துக்கும் தடை விதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ள வைத்தியசாலையின் மருத்துவர் ஒருவர், விசக்கடி எதிர்ப்பு மருந்துகளுக்கும் ஏற்பு தடுப்பு மருந்துகளுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் சத்திர சிகிச்சையின் போது செயற்கை சுவாசத்தை வழங்கும் உபகரணங்கள் இதயத் துடிப்பினைக் கண்காணிக்கும் சாதனங்கள் என்பனவற்றுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் தெரிவித்துள்ளார்.

வன்னிப் பகுதியில் கால்-வாய் நோய்

(15.07.01)

ஐரோப்பாவை பெரும் அச்சத்திற்குள்ளாக்கிய கால்நடைகளுக்கான கால்வாய் நோய் தற்போது வன்னியிலும் பெரும் பாதிப்புக்களை தோற்றுவிப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கூடந்தவாரம் அம்பலப்பெருமாள்குளம் பகுதிகளில் கால் நடைகளுக்கு கால்வாய் நோய் பரவி வருவது கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து இந்த பகுதியில் இருந்து பால் விற்பனை செய்தலும், கொள்வனவு செய்தலும், இறைச்சிக்காக கால் நடைகளை வெட்டுவதும் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதாக தமிழீழ சுகாதார சேவையின் மல்லாவி பிரதேச சுகாதார சேவையினர் அறிவித்துள்ளனர்.

பொருளாதாரத் தடை!
ஒரு பாடசாலையில் மட்டும் 1160 மாணவர்கள் பாதிப்பு

(15.07.01)

சிறீலங்கா அரசும் அதன் இராணுவமும் தமிழ்ச் சமூகத்தின் மீது மேற்கொண்டு வரும் கட்டுப்பாடு மற்றும் பொருளாதாரத் தடைகளால் வன்னியிலுள்ள மாணவ சமூகம் பெரும் பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளது.

வன்னிப் பிரதேசத்தில் உள்ள வள்ளிபுரம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் மட்டும் சுமார் 1160 மாணவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவர்களில் 590 மாணவிகளும், 570 மாணவர்களும் அடங்கியுள்ளனர் என்றும், இவர்களில் 100 மாணவர்கள், போரால் தம் பெற்றோரை இழந்துள்ளனர் எனவும், இதில் 50 மாணவர்கள் தாய் தந்தை இருவரையும், 29 மாணவர்கள் தாயையும், 21 மாணவர்கள் தந்தையையும் இழந்துள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார். இதேவேளை, பொருளாதாரத் தடைகள் காரணமாக ஏற்பட்டுள்ள போசாக்கின்மையால் மாணவர்கள் பாடசாலைகளில் அடிக்கடி மயங்கி விழுவதும் அதிகரித்துள்ளதாக வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

GLENMORE
PROPERTY SERVICES LTD
Sales Lettings Management Mortgage advice
எல்லாவித மோட்கேஜ்களும் செய்து தரப்படும்
If you have tried the rest, now come to the best
810 Harrow Road. Wembley,
Middlesex HAO 3EL
Tel: 020 8904 5040
website: www.glenmoreproperties.co.uk
e-mail: rightmove@glenmoreproperties.co.uk
Fax: 020 8904 5220
your home is at risk if you do not keep up repayment on a mortgage or other loan(s) secured on it.

அல்லாரைச் சம்பவத்திற்கு மட்டு. பொது அமைப்புகள் கடும்கண்டனம்

(15.07.01)

அல்லாரையில் கடந்தவாரம் 42 வயதுப்பெண் ஒருவர் சிறீலங்காப் படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்தை மட்டக்களப்பு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் வன்மையாகக் கண்டித்துள்ளது. தமிழ்ப் பெண்களின் பாதுகாப்பை மீண்டும் ஒரு தடவை கேள்விக் குறியாக்கியுள்ளது இந்தச் சம்பவம் என்று தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுச் சம்பவத்தைக் கண்டித்து 10 தமிழ்க் கட்சிகள் வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பு ஆகிய பகுதிகளில் போராட்டம் நடத்திய கையோடு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஜனாதிபதி அவசரகாலச் சட்டத்துக்குப் பதிலாக பொதுஜன பாதுகாப்புச் சட்டவிதிகளை நடைமுறைப் படுத்திய மறுநாளே இந்தக் கொடூரம் நிகழ்ந்துள்ளது. பாலியல் வல்லுறவு என்பது சர்வதேசக் குற்றமாகிய நிலையில், பொதுஜனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அது நிகழ்த்தப்பட்டிருக்கிறது. ஜனாதிபதி பிரகடனப்படுத்தியது பொதுஜனப் பாதுகாப்புச் சட்டமா அல்லது படையினர் பாதுகாப்புச் சட்டமா என்ற ஐயத்தை தமிழ் மக்கள் மத்தியில் இச்சம்பவம் ஏற்படுத்தியுள்ளது. படையினர் பாலியல் வல்லுறவில் ஈடுபடுவதைத் தடுக்க விசேட சட்டங்கள் ஆக்கப்பட்டு அதியுயர் தண்டனைகள் வழங்கப்படும்வரை இது போன்ற சம்பவங்களை எவராலும் தடுக்கமுடியாது என தெரிவித்துள்ளது.

செம்மணி எலும்புக் கூடுகள் ஹைதராபாத்தில்

(15.07.01)

சிறீலங்கா படையினரால் படுகொலைசெய்து புதைக்கப்பட்டு செம்மணிப் புதைகுழியில் இருந்து தோண்டி எடுக்கப்பட்ட 15 எலும்புக்கூடுகளில் அடையாளம் காணப்பட்ட ஐந்து எலும்புக்கூடுகளின் மரபணுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றுடன் ஒப்பீடு செய்வதற்காக சம்பந்தப்பட்ட ஐந்து எலும்புக்கூடுகளுக்கும் உரியவர்கள் என்று கருதப்படுபவர்களின் உறவினர்கள் எட்டுப் பேரின் இரத்த மாதிரிகள் இந்த மரபணுப் பரிசோதனை நடைபெறும் இந்தியாவின் ஹைதராபாத் ஆய்வுகூடத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாக கொழும்பு நீதிமன்ற நீதிபதி தெரிவித்துள்ளார். இதனையடுத்து இவற்றுக்கான முடிவுகள் வந்ததன் பின்னரே இவ்வழக்கு விசாரணைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்து வழக்கினை செப்டெம்பர் 4ம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

புலிகள் மீது குற்றம் சாட்டுகிறது இராணுவத் தரப்பு

(15.07.01)

ஆறு வயதுக் குழந்தை முதல் 80 வயது மூதாட்டிவரை வயது வெறுபாடின்றி பாலியல் கொடூரங்களையும் பாலியல் வன்முறைப் படுகொலைகளையும் புரிந்து வரும் சந்திரிகா அரசின் இராணுவம், கடந்தவாரம் அல்லாரையில் வயதான தாயாரைத் தாக்கிவிட்டு அவரது 42 வயது மகளை பாலியல்வல்லுறவுக்கு உட்படுத்திய சம்பவத்துக்கு விடுதலைப் புலிகளே காரணம் எனக் குற்றம் சுமத்தியுள்ளது. இராணுவச் சீருடை அணிந்த விடுதலைப் புலிகளே இதனைச் செய்ததாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்ன கூறியதாக சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று வெளியிட்ட செய்தியில் தெரிவித்துள்ளது.

இராணுவச் சீருடை அணிந்த தமிழ் பேசும் இருவர் தாயாரைத் தாக்கி, மகளை வல்லுறவுக்கு உட்படுத்தியதாகவும் சம்பவம் நடந்தபோது அயல் வீட்டார்களுக்கு சத்தம் ஏதும் கேட்கவில்லை எனவும் சம்பவம் பற்றி அந்தப் பெண் அருகிலிருந்த இராணுவமுகாமுக்குத் தெரியப்படுத்தியபோது, பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய அவர் அழைத்துச் செல்லப்பட்டதாகவும், விடுதலைப் புலிகளோ அல்லது இராணுவச் சீருடை அணிந்த வேறு சிலரோ, இராணுவத்தினருக்கு களங்கம் ஏற்படுத்த இதைச் செய்திருக்க வேண்டும் என சனத் கருணாரத்ன கூறியதாகவும் மேலும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச் சம்பவத்தில் ஈடுபட்டதாக மூன்று சிறீலங்கா அரச படைதரப்பினர் அடையாளம் காணப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

புளொட்டால் கடத்திச் செல்லப்பட்டவர்கள் விடுதலை

(15.07.01)

சிறீலங்கா அரசுடன் இணைந்து இயங்கும் புளொட் குழுவினால் கடத்திச் செல்லப்பட்டதாக கூறப்பட்ட இரு இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். கடந்த மாதம் 9ம் திகதி புளொட் குழுவினால் பிடித்துச் செல்லப்பட்டதாக மன்னார் மனித உரிமைகள் ஆணைக் குழுவினரால் தெரிவிக்கப்பட்டு, காணாமல் போயிருந்ததாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்த கறுப்பையா சுந்தரராசா (19), சிவராசா சசிகுமார்(20) ஆகிய இரண்டு இளைஞர்களுமே தற்போது விடுவிக்கப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் இரவு வாகனம் ஒன்றில் கொண்டு வரப்பட்ட இவர்கள், வவுனியா பகுதியில் உள்ள காட்டுப்பகுதி ஒன்றின் குளப்பகுதி ஒன்றில் இறக்கிவிடப்பட்டுள்ளனர்.

புளொட் குழுவினரால் சிறுவர்கள் கடத்திச் செல்லப்பட்டு கட்டாய ஆயுதப் பயிற்சிகள் வழங்கப்படுவதாக மன்னிப்புச் சபை கண்டனம் தெரிவித்திருந்ததுடன் ஏராளமான சிறுவர்கள் புளொட்டின் கட்டுப்பாட்டில் இன்னமும் இருப்பதாக தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசில் புதியவர்கள் நியமனம்

(15.07.01)

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசின் உயர் அரசியல் பீடத்தில் இருந்த வெற்றிடங்களுக்கு புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ரவூப் ஹக்கீமின் பொர்சின் பேரிலேயே இப் புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசில் இருந்துகொண்டு அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவித்து வரும் பேரியல் அஸ்ரப் உட்பட நான்கு பேரில் எவருமே இந்த பதவிகளுக்கு நியமிக்கப் படவில்லை.

அத்துடன் அவர்களின் பொறுப்பிலிருந்த பதவிகளுக்கு புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதுடன், முன்னாள் சிறீலங்கா பிரதி அமைச்சரும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு அதிகாரசபையின் தலைவருமான எம்.எல்.ஏ.எம்.ஹீஸ்புல்லாவுக்கும் எந்தவித பதவியும் வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

செப்ரிசேமியாவினால் மூவர் மரணம்

(15.07.01)

மல்லாவி மருத்துவமனையில் கடந்த மாதம் செப்ரிசேமியாவினால் பாதிக்கப்பட்ட மூவர் மரணமாகியுள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த மாதம் இடம் பெற்ற 13 இறப்புகளில் மலேரியாவினால் இருவரும், செப்ரிசேமியாவினால் மூவரும் இறந்துள்ளதாகவும் வைத்தியசாலை புள்ளி விபரங்கள் விபரம் தெரிவித்துள்ளன. இதேவேளை, இம்மருத்துவமனையில் கடந்த மாதம் வெளி நோயாளர் பிரிவில் 9,923 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

மலேரியாவினால் 750 பேரும் ஏனைய காய்ச்சலினால் 1,101 பேரும், வயிற்றோட்டத்தினால் 123 பேரும் சொறி சிரங்கினால் 419 பேரும் சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்தியசாலையின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

மூதூரில் மின்மாற்றி தகர்ப்பு

(15.07.01)

மூதூரில் கடந்த 9ம் திகதி இரவு 9.00 மணியளவில் மின் மாற்றி ஒன்று குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது. கடந்த சில காலங்களாக மின்மாற்றிகள் இனந்தெரியாதோரால் தகர்க்கப்படுவது நிறுத்தப்பட்டிருந்த நிலையில் மீண்டும் மூதூரில் மின் மாற்றி தகர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஒழுக்கமும் கட்டுப்பாடுடன் சிறந்த ஆளுமையும் உடையவர்கள் புலிகள்

- விடுவிக்கப்பட்ட மிஷன் கப்பல் மாலுமி

(15.07.01)

விடுதலைப் புலிகளிடம் மனிதாபிமானம், ஒழுக்கம் கட்டுப்பாடு போன்ற குணங்கள் நிறைந்திருப்பதோடு அவர்கள் சிறந்த ஆளுமை உள்ளவர்கள் என்பதையும் கடந்த நான்கு வருடங்களில் என்னால் உணர முடிந்தது. இவ்வாறு விடுதலைப் புலிகளால் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யப்பட்ட எம்.வி. மிஷ்ன் கப்பல் மாலுமியான ஜயந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

ஊரவர்களுக்கு நான் செல்லப்பிள்ளை போலவும் விடுதலைப் புலிகள் அமைப்பினருக்கு சகோதரன் போலவும் அன்னியோன்னியமாக பழகி வந்தேன். தென்பகுதி விடயங்களை அறிந்துகொள்ள, விடுதலைப் புலிகள் எனக்கு வானொலி மற்றும் தினசரி சிங்களப் பத்திரிகைகளை கொடுத்து வந்தனர் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மாளிகை முன்பாக ஆர்ப்பாட்டம்?

(15.07.01)

பாராளுமன்றத்தை இரண்டு மாத காலத்திற்கு சந்திரிகா ஒத்திவைத்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் 19ம் திகதி வியாழக்கிழமை ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்த உள்ளதாக ஐ.தே.கட்சி பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார். இவ் ஆர்ப்பாட்டத்தில் சுமார் பத்து இலட்சம் ஆதரவாளர்கள் பங்கு பற்றுவர் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

உலகெங்கும் துரிதகதியில் உங்கள் பணத்தை உரியவர்கட்கு சேர்த்திட

World Wide Money Transfer

IITAG Holding/ Innovative Independent Trust AG

இது ஒரு வரையறுக்கப்பட்ட சர்வதேச கூட்டு நிறுவனம். இவற்றின் கிளைகள் உலகெல்லாம் பரந்துள்ளன.

ஒரு மணித்தியாலத்திலிருந்து மூன்று நாட்களுக்குள் உங்கள் பணம் சேரவேண்டியவர்களிடம் அனுப்பிவைக்கவும், பிரயாண காசோலைகளை பெற்றுக்கொள்ளவும், அனுமதிபெற்ற நிறுவனம். இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா, பிரித்தானியா, ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஒல்லாந்து, டென்மார்க், முதலிய நாடுகளுக்கு சட்டபூர்வமாக அனுப்பிவைக்கவும், பெற்றுக்கொள்ளவும்...

தொலைபேசி இலக்கங்கள்: தலைமை அலுவலகம் சுவிற்சர்லாந்து 0041 81 354 99 11, 354 99 12. ஜேர்மனி 069 24 00 49 80

நீங்கள் உங்கள் இடங்களிலிருந்தே எங்கள் வங்கிக்கணக்கிற்கு பணத்தை செலுத்தி தபால்மூலமோ அல்லது தொலைநகல் மூலமோ பற்றுச்சீட்டையும் பணம் சேரவேண்டியவர்களினுடைய விபரங்களையும் அனுப்பிவைத்தால் குறித்த நேரத்தில் எங்கள் கிளைகளில் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

Head office - New Address - Tele Phone and Fax

சில வங்கிகளின் விபரம், Swiss: UBS AG Chur, 208-929016.06D, Germany: Commerzbank Frankfurt 6030043 00 BLZ 500 400 00, Postbank: 17279-604 BLZ 500 100 60

தொடர்புகட்கு: Iitag Holding/Innovative Independent Trust AG
7002 Chur-Switzerland http//:www/iitag.com, Email:iitag@iitag.com
Tel:++41 81 354 99 11, 354 99 12 Fax: ++ 41 81 354 99 10
அல்லது அந்நாடுகளிலுள்ள எமது கிளைகள் அல்லது பிரதிநிதிகளிடம் தொடர்பு கொள்ளவும்.

Pub

நெற்பயிர்ச் செய்கைக்கு வன்னியில் ஊக்குவிப்பு

(15.07.01)

தற்காப்பு திட்டத்தின் கீழ் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் முல்லைத்தீவு மாவட்டத்தில் நெற்பயிர்ச் செய்கை ஊக்குவிப்புகளை 100 பயனாளிகளுக்கு வழங்கியுள்ளது. 5 இலட்சம் ரூபா இத்திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. முத்தையன் கட்டு, மன்னாகண்டல், கனகரத்தினபுரம், இடதுகரை முத்து விநாயகபுரம், வலது கரை முதலாம் கண்டல், இடது கரை முதலாம் கண்டல், வலது கரை முத்து விநாயகபுரம், இரண்டாம் கண்டல் வலது கண்டல் பண்டாரவன்னி, கற்சிலைமடு மற்றும் ஆறுமுகத்தான்குளம், பூதன் வயல், சுதந்திரபுரம் மத்தி, உடையார்கட்டு, சுதந்திரபுரம் குடியேற்றம் ஆகியவற்றைச் சேர்ந்த 100 பயனாளிகளே தற்போது இதன் மூலம் பயன் பெறுகின்றனர்.

கல்முனையில் இரு முஸ்லீம் மாணவர்கள் பொலிசாரால் சுட்டுக்கொலை

(15.07.01)

மட்டு. கல்முனையில் நேற்று முன்தினம் மாலை சிறீலங்கா பொலிசாரால் இரு முஸ்லீம் மாணவர்கள் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளனர். இதனையடுத்து நேற்று கல்முனையில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதுடன் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பொலிசாருக்கு எதிராக ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். இதனையடுத்து கல்முனை, மருதமுனை, ஆகிய இடங்களில் பொதுமக்களுக்கும் பொலிசாருக்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்டன. இதன்போது பொலிசார் மீது கற்களால் முஸ்லீம் மக்கள் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர். இதனையடுத்து மேலதிக பொலிசார் அப்பகுதிக்கு கொண்டு வரப்பட்டு ஆர்ப்பாட்டங்கள் அடக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

திட்டமிட்ட கைதுகளுக்கு எதிராக குரல் கொடுப்போம்

– வவுனியா வளாக மாணவர்கள்

பல்கலைகழகம் என்பது ஒரு சமுதாயத்தின் உயிர் நாடி. சமுதாயத்தின் வளர்ச்சி கருதி பல செயற்பாடுகளில் பல்கலைக்கழகங்கள் ஈடுபடுவது மரபு. அந்த வகையில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைகளையும் அபிலாசைகளையும் வலியுறுத்தி பல்கலைக்கழக சமுகத்தால் பல போராட்டங்கள் முன்னெடுக்கப் படுகின்றன. 'இவற்றை நசுக்கி ஒடுக்குவதற்காக பேரினவாத அரசு ஆரம்பம் முதலே இராணுவ வல்லாதிக்கத்தைப் பயன் படுத்தி வந்துள்ளது. இதனையடி யொட்டி பல்கலைக்கழக மாணவர்கள் பலர் கைது செய்யப் பட்டு விசாரணைக்கு உட்படுத் தப்பட்டுள்ளார்கள். இதன் தொடர்ச்சியாக அண்மையில் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட 3 ஆம் வருட மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியன் இராணுவத்தால் கைது செய்யப் பட்டு தொடர்ந்து தடுத்து வைக் கப்பட்டுள்ளார். இதனைக் கண் டித்த யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் அவரை விடுதலை செய்யக் கோரி புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டதற் காக, தமிழ் மக்களின் 'உயர் கல்வி நிறுவனமான' யாழ் பல் கலைக்கழகம், தகுந்த காரண மின்றி கால வரையறையற்று இழுத்து மூடப்பட்டுள்ளது. இதனை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். கைது செய் யப்பட்ட மாணவன் திவ்வியன் விடுதலை செய்யப்பட வேண் டும். யாழ். பல்கலைக்கழகம் உட னடியாக திறக்கப்பட வேண்டும். இந்த கோரிக்கைகள் நிறைவே றும் வரை எமது போராட்டம் தொடரும். நியாயத்தின் பாற் பட்ட எமது போராட்டத்திற்கு பொது அமைப்புக்கள், பொது மக்கள் மற்றும் மாணவர்கள் அனைவரினதும் ஆதரவை வேண்டி நிற்கின்றோம்.

மாணவர் சமூகத்தின் எழுச்சியை மழுங்கடிக்கலாம் என்று பேரினவாதம் நினைக்குமாயின் அது பகற்கனவாகவே முடியும்

வவுனியா விவசாய கல்லூரி மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கை

(15.07.01)

தமிழ் மக்கள் இலங்கையில் அடிமைகளாக வாழப்பிறந்தவர்கள் அல்லர். அவர்கள் ஒரு தேசிய இனம். அவர்களுக்கென்று தனியான கலாசாரம், பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்கள் உண்டு. சொந்த தேசம் உள்ளது. அங்கு சுதந்திரமாக வாழ அவர்களுக்கு அனைத்து உரிமைகளும் உண்டு என்பதை இந்த நாட்டின் பேரினவாதம் மட்டுமல்ல, முழு உலகமும் அறியும் வண்ணம் உரத்து முழங்கி, மக்கள் எழுச்சியை ஆரம்பித்து வைத்த பெருமை யாழ். பல்கலைக்கழக மாணவர்களையே சாரும். மாணவர்கள், மக்கள் என்ற இருபெரும் சக்திகளின் எழுச்சியைக் கண்டு வெகுண்ட பேரினவாத அரசு, அதை அடக்கியொடுக்குவதற்காக தனது அடக்குமுறையை பொதுமக்கள், மாணவர்கள் என்ற இருபிரிவினர் மீதும் கட்டவிழ்த்துவிட்டுள்ளது.

இதன் ஓர் அம்சமே யாழ் விஞ்ஞானபீட மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியனின் கைது நடவடிக்கையாகும். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மாணவர்கள் மேற்கொண்ட அகிம்சை ரீதியான போராட்டத்தைச் சாட்டாக வைத்து, யாழ் பல்கலைக் கழகத்தை இழுத்து மூடப்பட் டுள்ளது, கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் மீதான அத்துமீறல்களும், பயமுறுத்தல்களும் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது.

மாணவர்கள் கைதுகளும், ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை மாணவர்கள் இருவரின் கைதுகளும் இதற்கு நல்ல எடுத்துக் காட்டாகும். எமது தமிழ் சமூகத்தில் பேரினவாதிகளினால் அழிக்கப்பட்ட எமது உடைமைகள் போக எஞ்சியுள்ள ஒரே யொரு சொத்து கல்வி மட்டுமே. இதையும் பல்வேறு தடைகளுக்கு மத்தியிலும் ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு கற்ற எம் மாணவர்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளுக்குச் செல்லும் நிலை, உள்ளது. அங்கு சென்ற பின்பும் அவர்களின் கல்வி உரிமை, மனித உரிமைகள் பாதிக்கப்படலும் மறுமுகமான ஓர் அடக்குமுறையின் பிரதிபலிப்பே. மாணவர்களைக் கைது செய்தல், அச்சுறுத்தல், பல்கலைக் கழகங்களை மூடுதல் போன்ற வன்முறைகளினால் மாணவர் சமூகத்தின் எழுச்சியையோ, அவர்களின் தேசிய அபிமானத்தையோ மழுங்கடிக்கலாம் என்று இந்த நாட்டின் பேரினவாதம் நினைக்குமாயின் அது வெறும் பகற்கனவாகவே முடியும்.

ஒன்றுபட்ட மாணவர், மக்கள் சக்தியின் முன்பாக எந்த அடக்குமுறையும் செல்லுபடியாகாதென்பதை பேரினவாத அரசு முற்றாக மறந்து விட்டதா? யாழ். பல்கலைக்கழக மாணவன் கைது செய்யப்பட்டுள்ளதும், யாழ். பல்கலைக்கழகம் மூடப் பட்டுள்ளதும் போன்ற செயற் பாடுகளும் ஏனைய பல்கலைக் கழகங்கள், கல்லூரிகளுக்கும் தொடரலாம். ஆகவே மாணவர் சமூகமாகிய நாம், ஒன்றுபட்டு இந்த அடக்குமுறைச் செயலை எதிர்ப்பதன் மூலமே இதுபோன்ற அத்துமீறல் நிகழ்வுகளைத் தடுக்க முடியும். கைது செய்யப்பட்டுள்ள மாணவன் திவ்வியனை விடுதலை செய்ய வேண்டும். யாழ். பல்கலைக்கழகத்தை உடனடியாகத் திறக்க வேண்டும். இதற்காக வடக்கு கிழக்கு பிரதேச கல்விச் சமூகம் நடத்தி வரும் போராட்டத்திற்கு எமது பூரணமான ஆதரவைத் தெரிவிக்கும் அதேவேளையில், இனிமேலும், இதுபோன்ற அடக்குமுறைகள் இடம்பெறாவண்ணம் இருப்பதற்கு அனைவரும் தமது ஆதரவை வழங்க முன்வர வேண்டும்.

ஜனநாயக ரீதியில் போராடும் மாணவர்களின் குரலை இராணுவத்தை ஏவி அடக்க முனைய வேண்டாம்

– கிளி. பல்கலைக்கழக மாணவர் பெற்றோர் சங்கம்

1995ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இராணுவம் நிலை கொண்டதைத் தொடர்ந்து அங்கு இராணுவத்தினரால் நடாத்தப்பட்ட மனிதாபிமானமற்ற அநீதியான கொடூரச் செயல்கள் அளப்பரியன. அந்த வரிசையில் இடம் பெற்ற மனித உரிமை மீறல் செயலாகவே மேற்படி மாணவனின் கைதையும் நாம் நம்புகின்றோம். சந்தேகம் என்ற போர்வையில் அப்பாவி மனிதர்கள் சட்ட விரோதமாக கைதாவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். கைதானவர்களை உடனடியாக நீதிமன்றத்தில் நிறுத்துவதே இராணுவத்தின் கடமை. சந்தேக நபரை விசாரித்து தண்டனை வழங்குவது நீதிமன்றத்தின் பொறுப்பாகும். ஆனால் இராணுவம் மேற்படி மாணவனை இதுவரை சட்ட விரோதமாக தடுத்து வைத்து துன்புறுத்தி ஒப்புதல் வாக்குமூலத்தை பெறுவதற்கு முயற்சிப்பதாக நாம் அறிகின்றோம். ஜனநாயக ரீதியில் போராடும் உரிமை அனைவருக்கும் உண்டு. அந்த வழியில் போராடும் மாணவர்களின் உரிமைக் குரலை இராணுவத்தை ஏவி அடக்க முனைய வேண்டாம். கிருஷ்ணசாமி திவ்வியனை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். அல்லது நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்று நீதியின் பெயரால் தங்களை கேட்டுக் கொள்கின்றோம். இராணுவ அச்சுறுத்தலினால் பயப்பிராந்தியில் வாழும் அப்பாவி மாணவர்களுக்கு எதிர் காலத்தில் இது போன்ற அநீதிகளை இழைக்காது இருக்கும் படியும் வேண்டிக் கொள்கின்றோம்.

இராணுவ அடக்குமுறை என்பது காலாவதியாகிவிட்ட ஒரு மார்க்கமாகும். புதிய ஜனநாயக சிந்தனைகளும் நாகரிகமான அணுகு முறைகளும் இன்றைய நவீன உலகில் தோற்றம் பெற்றுள்ளன. மனிதாபிமான அடிப்படையில் நாகரிக வழிமுறைகளை கையாண்டு பிரச்சினைகளை தீர்க்க முன்வர வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம். இராணுவத்தையும் ஆயுதத்தையும் நம்பி அரசியல் நடத்த இன்றைய புதிய உலகம், நீண்ட நாட்களுக்கு இடம் கொடுக்காது என்பதை தங்கள் கவனத்திற்கு கொண்டு வரும் அதே வேளையில், யாழ். பல்கலைக்கழக மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியனின் விடயத்தில் நீதியான தீர்வு ஒன்றினைத் தரும்படி பெற்றோர்கள் சார்பில் வேண்டிக் கொள்கின்றோம்.

(15.07.01)

வவுனியா இரணைஇலுப்பைக் குளம் முன்னணிக் காவலரண் பகுதியில் இருந்து முன்னேறி விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடாத்துவதற்கு பதுங்கியிருந்த படையினர் நடாத்திய தாக்குதலில் விமானப்படையைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். கடந்த 9ம் திகதி இரவு 9.15 மணியளவில், படையினர் பதுங்கித் தாக்குதலுக்கு தயாராக இருந்தவேளை, விமானப் படையினரும் இன்னொரு பகுதியில் பதுங்கித் தாக்குதலுக்கு தயாராக இருந்துள்ளனர்.

இதன்போது புலிகள் என நினைத்து படையினர் விமானப் படையினர் பதுங்கியிருந்த பகுதி மீது தாக்குதல் நடாத்தியுள்ளனர். இதன்போதே விமானப்படைச் சிப்பாய் ஒருவர் பலியாகியுள்ளார்.

பதுங்கியிருந்த படையினரின் தாக்குதலில் விமானப் படைச் சிப்பாய் பலி

உங்கள் வீடுகள், வர்த்தக நிலையங்களில் சகல விதமான திருத்த, வேலைகளுக்கும் காத்திருக்கின்றார்கள்

VICTOR SARL

கட்டட, மின்சார, தண்ணீர், கழிப்பறை திருத்த வேலைகளை மிகக் குறைந்த கட்டணத்துடன் திறமையான தொழிலாளர்களைக்கொண்டு அமைத்துக்கொள்ள

VICTOR SARL - 25bis, Rue des Chaufourniers, 75019 Paris. Tel: 01 42 06 59 19 Fax: 01 42 06 61 19

நீதிகேட்கும் கல்விச் சமூகத்தை கொன்றொழிப்பது அரசின் வழமையான நடவடிக்கையாகிவிட்டது

– மல்லாவி பிரதேச வெகுசன அமைப்புகளின் ஒன்றியம்

தமிழீழ நிலப்பரப்பில் 25 ஆண்டுகளைக் கடந்த உயர் கல்வி நிலையமாகிய யாழ் பல்கலைக்கழகம் அரசாங்கத்தினால் மூடப்பட்ட செய்தி, உலக வாழ் தமிழ் மக்களின் மனங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. 70களில் ஆரம்பித்த தமிழின மக்கள் மீதான கல்வி ஒடுக்குமுறையானது மாறி மாறி அரசு பீடமேறிய பேரினவாத ஆட்சியாளர்களினால் காலத்துக்கு காலம் மிக கொடுமையாக ஒடுக்கப்பட்டு வந்திருப்பதை உலகம் உன்னிப்பாக அவதானித்திருக்கும். எதிர்கால சந்ததியினரின் சுதந்திரத்துக்காக உரிமைக் குரல் எழுப்புவதைத் தவறாகப் புரிந்து கொண்டுள்ள சிறீலங்கா அரசு, எமது சுயநிர்ணய உரிமையை மறுத்து வருவது தெரிந்ததே. நீதிகேட்கும் அறிவியல் சார்ந்த எமது கல்விச் சமூகத்தை கைது செய்வதும், சித்திரவதை செய்வதும், கொன்றொழிப்பதும் அதன் வழமையான நடவடிக்கைகளாகிவிட்டன. இந்தச் செயற்பாடுகள்தான், பிரச்சினைகளுக்குத் 'தீர்வு காணும்' அரசாங்கத்தின் வழியாகத் தெரிகின்றது. இதன் மூலம் எம்மினத்தின் இளைய தலைமுறையை அழிப்பதே இவ்வரசின் குறியாக உள்ளது என்பது வெளிக்காட்டப்பட்டுள்ளது.

அத்தோடு உயர் கல்விச் சாலையையும் கால வரையறை இன்றி பூட்டுவதை, எம்மை ஓர் அறிவிலிகளான இனமாக உருவாக்க நீண்ட காலமாக திட்டமிட்டுச் செய்யும் கொடூரத்தனமாகவே கருதுகின்றோம். இந்த நடவடிக்கையானது சிறீலங்கா அரசின் தமிழினம் மீதான கல்வி ஒடுக்குமுறையின் பரிணாம வளர்ச்சியின் உயர் நிலையாக நாம் உணர வேண்டியுள்ளது. இந்நிலையைப் போக்க தமிழ் மக்கள் அனைவரும் பல்கலைக்கழக மாணவரின் உரிமைக் குரலுக்கு உறுதி கொடுத்து, அவர்கள் பாதையில் அணிதிரண்டு தமிழின உணர்வுடன் செயற்பட முன்வர வேண்டும். சர்வதேச மனிதநேய அமைப்புகளும் இந்த அநீதியை தட்டிக் கேட்கத் தவறக்கூடாது. உலக வாழ் தமிழ் மக்கள் அனைவரும் உரிமைக் குரல் கொடுத்து சர்வதேச சமூகத்தின் பார்வைக்கு இந்த செயலை தெரியப்படுத்துவதன் மூலம், கைது செய்யப்பட்ட மாணவனை விடுதலை செய்யவும் தமிழ் மக்களின் உயர் கல்விப் பீடமாகிய யாழ் பல்லைக் கழகத்தைத் திறக்கவும் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் வேண்டுகின்றோம்.

கடற்படையினரின் சூட்டுக்கு மீனவர் பலி

(15.07.01)

மன்னார் சிலாவத்துறை கடற் பகுதியில் மீன்பிடி வள்ளங்கள் மீது சிறீலங்கா கடற்படையினர் கடந்த 12ம் திகதி காலை நடாத்திய தாக்குதலில் நான்கு பிள்ளைகளின் தந்தையான ஜோசப் தாசன் குரூஸ்(36) என்பவர் அவ்விடத்திலே பலியாகியுள்ளார். கற்பிட்டிக் கடற்படைத் தளத்திலிருந்து சென்ற சிறீலங்கா கடற்படையினரின் ரோந்துப் படகிலிருந்த படையினரே மீன்பிடி வள்ளங்கள் மீது சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் இதனால் அங்கு மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் கரையை நோக்கி உயிரைப்பாதுகாக்க ஓடியதாகவும் இதன்போதே சூடுபட்டு மேற்படி மீனவர் பலியாகியதாகவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச சமூகத்தை அறைகூவி அழைக்கின்றோம்

– கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

சர்வதேச நாடுகளில் உள்ள எமது தமிழ்ச் சகோதரர்கள் மாணவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தமிழ் மாணவர் சமூகத்தின் மீது தொடர்ந்துள்ள எதேச்சாதிகார அடக்குமுறைகளையும் இராணுவ ஒடுக்குமுறைகளையும் தகர்த்தெறிய தார்மீக ஆதரவை வழங்குவதுடன், 16.07.2001 திங்கட்கிழமை நடைபெற உள்ள ஒன்றிணைந்த மாணவர் உரிமைப்போராட்டத்தில் இணைந்து கொள்வதுடன் நீங்கள் வசிக்கும் நாடுகளில் ஜனநாயக ரீதியான போராட்டங்களில் ஈடுபட்டு எம்மீதான அடக்குமுறைக் கெதிரான குரலை ஓங்கி ஒலிக்கச்செய்வோம்.

எரிந்து கொண்டிருக்கும் பேரினவாத நெருப்பில் சிக்கி கருகிக்கொள்ளும் எம்தமிழ் சமுதாயம் சாம்பல்மேடுகளாக குவிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் இத் தருணத்திலும், புத்துயிர்பெற்று விழிப்படையும் தமிழ் மாணவர் சமுதாயத்தின் எழுச்சியை பொறுத்துக்கொள்ள முடியாத சிறீலங்கா அரச பயங்கரவாதம் தமிழ் மாணவர் சமூகத்தின் மீது காலத்திற்கு காலம் தனது படைகளின் மூலம் கட்டவிழ்த்து விடும் கொடுமைகளானது 'விசித்திரமாக பார்க்கப்பட வேண்டிய ஒன்றல்ல.' இன்று தமிழர்களின் வாழ்வியலில் குற்றுயிராகவேனும் எஞ்சிநிற்கின்ற கல்விச் சமூகத்தை சிறுகச்சிறுக சிதறடிக்கும் படலத்தின் இன்னொரு வடிவமே, யாழ். பல்கலைக்கழக மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியன் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்படுவதாகும்.

இதனை சர்வதேச சமூகத்தின் செவிகளுக்கு உரத்துக் கூவ பல்கலைக்கழக மாணவர்கள் முற்பட்டபோது, சிறீலங்கா அரசு பல்கலைக்கழகத்தையே மூடியுள்ளது. இன்று யாழ். பல்கலைக்கழகம் முற்றுமுழுதாக சிறீலங்கா இராணுவத்தினரால் முற்றுகையிடப்பட்டு எம் தமிழ் மாணவர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டுள்ளார்கள். திறந்த வெளிச்சிறைச்சாலையான யாழ். வீதிகளில் எம்மாணவர்கள் எந்தவித உயிர் உத்தரவாதமும் இன்றி நிர்க்கதியாக்கப்பட்டு நிற்கின்றனர். அவர்களில் இன்னும் எத்தனை பேரை அரச பயங்கரவாதம் தலைமறைவாக்கப் போகின்றது என்பதை நினைத்து பதறிப்போகின்றோம். இனி தமிழ் மாணவ சமூகத்தின் பாதுகாப்பு எவ்வாறானதாக அமையப்போகிறது என்ற கேள்விக் குறி எம்மத்தியில் எழுப்பப்பட்டுக்கொண்டிருக்கிறது. எம் இனத்தினதும் மாணவர் சமூகத்தினதும் துடிப்புக்களை நாடிபிடித்தறிய முனையும் அரச பயங்கரவாதமானது, அடுத்த கட்டமாக என்ன செய்யப்போகிறது என்பது சந்தேகத்திற் கிடமில்லாமல் தெளிவாக்கப்படுகிறது.

இந்நிலையில் யாழ். மாணவர்களுடன் கிழக்கு பல்கலைக் கழக மாணவர்களாகிய நாமும் கரம்கோர்த்து செல்கிறோம். ஆனால் எம்மீது திணிக்கப்பட்டுள்ள இராணுவ அரசியல் அழுத்தங்களை தனித்து நின்று தகர்த்தெறிவதிலுள்ள நடைமுறை சார்ந்த சிக்கல்களை நாம் உணர்கின்றோம். இதனால் வடகிழக்கில் உள்ள சகல பாடசாலைகள், கல்விக்கல்லூரிகள், தொழில் நுட்பக்கல்லூரிகள், ஆசிரிய பயிற்சிக்கலாசாலைகள், சகோதர பல்கலைக்கழகங்கள் போன்ற தமிழ் மாணவர் சமூகங்கள் விழித்தெழுந்து ஒரணியில் திரண்டு அனைவரும் எமது கரங்களை இறுகப்பற்றிப்பலப்படுத்துமாறு அறைகூவி அழைக்கின்றோம்.

அழிந்து போகும் தமிழ் மாணவர்களின் கல்விக்கு குரல்கொடுப்போம்

– வவுனியா மாணவர் சமூகம் –

யாழ். பல்கலைக்கழக மாணவன் திவ்வியனை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். யாழ். பல்கலைக்கழகம் தாமதமின்றி திறக்கப்பட வேண்டும். தமிழ் மாணவர்களின் கல்வியையும், பாதுகாப்பையும் சிறீலங்கா அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்ற மூன்று கோரிக்கைகளை முன்வைத்து வவுனியா மாவட்ட மாணவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து 15ம் திகதி முதல் பாடசாலைகளைப் பகிஸ்கரிக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன், அழிந்து போகும் தமிழ் மாணவர்களின் கல்விக்கு குரல் கொடுப்போம் என்ற தலைப்பில் வவுனியா மாணவர் சமூகத்தினால் துண்டுப்பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அதில் தெரிவித்துள்ளதாவது, தமிழினத்தை அழித்தொழிக்க வேண்டும் என்ற நோக்குடன் தொடர்ந்து ஆட்சிபீடமேறும் சிங்கள பேரினவாத அரசாங்கங்கள் தமிழ் மக்களின் கலை கலாசாரத்தைத் தொடர்ந்து அழித்து வருகின்றன. இந்த வகையில் தமிழ் மக்களின் மூலாதாரமான கல்விக்கு வித்திட்ட யாழ். நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது தொடக்கம் இன்றைய காலம் வரையில், தமிழர்களின் ஒரே சொத்தாக விளங்கும் 'கல்வி அழிக்கப்பட்டு வருகின்றது. யாழ். பல்கலைக்கழக மாணவன் திவ்வியன் கைது செய்யப்பட்டது, தொடர்ந்து யாழ். பல்கலைக்கழகம் மூடப்பட்டது, தமிழ் மாணவர்கள் பல்வேறு வடிவங்களில் அழிக்கப்படுகின்றனர். இந்த நடவடிக்கைகள் தொடர்வதை அனுமதிக்க முடியாது. நாம் வேற்று நாட்டவர்களல்ல. அநாதைகள், அகதிகளல்ல. வேற்றாரிடமிருந்து கைப்பற்றப் பட்ட யுத்த கைதிகளுமல்ல. எனவே, இந்த அடக்குமுறைகளுக்கு எதிராக அனைவரும் ஒத்துழைப்பதுடன், 15ம் திகதி முதல் காலவரையறையின்றி, கோரிக்கைகள் வென்றெடுக்கப்படும் வரையில் போராட முன்வர வேண்டும்.

சித்தாண்டி தாக்குதலில் இரு படையினர் பலி - மூவர் படுகாயம் காயம்

(15.07.01)

மட்டு. சித்தாண்டியில் வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த சிறீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய கிளைமோர் தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், மூவர் படுகாயமடைந்தனர். மட்டு - வாழைச்சேனை பிரதான வீதியில் நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் இத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இராணுவ வாகன தொடரணி மட்டக்களப்பிலிருந்து வெலிக்கந்தை நோக்கி செல்வதற்கு முற்பாதுகாப்பு வழங்கும் முகமாக வீதிச்சோதனைகளை தீவிரப்படுத்தியிருந்த போதே இக் கண்ணிவெடி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களை நசுக்கிவிட வேண்டும் என்ற நோக்கில் அரசும் படைகளும் செயற்படுகின்றன

- ரெலோ செல்வம் அடைக்கலநாதன் -

கடந்த 2ம் திகதி யாழ்ப்பாணம் உரும்பிராயில் வைத்து பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன் கிருஸ்ணசாமி திவ்வியன் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை பயங்கரவாதத் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவர் பலமான சித்திரவதைக்கும் உட்படுத்தப்பட்டுள்ளார். இக் கைது, மாணவர்கள் மத்தியில் பெரும் விசனத்தையும், எதிர்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது. இவர் எதற்காகக் கைது செய்யப்பட்டுள்ளார் என்ற காரணம் இதுவரை தெரிவிக்கப்படவில்லை. இவர் குற்றம் இழைத்திருந்தால் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இவரின் கைதின் பின்னர் எழுந்துள்ள தற்போதைய சூழலைச் சமாளிப்பதற்காக இவருக்கு எதிராகக் குற்றங்கள் சோடிக்கப்படுவதாக எண்ணத்தோன்றுகிறது. பல்கலைக்கழகம் ஒரு உயர்கல்வி நிறுவனமாகும். அரசாங்க நிறுவனமான இதில் கல்வி பயிலும் மாணவர்களை படையினர் சந்தேகக் கண்கொண்டு நோக்குவது கண்டனத்துக்குரியதாகும். அத்துடன் இவ்வாறான கைதுகளின் மூலம் அமைதியாகத் தமது கல்வியைத் தொடர்ந்து கொண்டிருக்கும் மாணவர்களைக் குழப்பம் விளைவிக்கப் படையினர் தூண்டுகின்றனர்.

மாணவன் திவ்வியனின் கைதைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் வகுப்புப் பகிஸ்கரிப்பில் ஈடுபட்டனர். ஆனால் மாணவர்களின் கோரிக்கைகளை கவனத்தில் எடுக்காத அரசு, உயர் கல்வி அமைச்சு மூலமாகப் பல்கலைக்கழகத்திற்கு மூடுவிழா நடத்தியுள்ளது. இது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய செயலாகும். இதனால் தற்போது நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது. பல்கலைக்கழகங்கள் மதிக்கப்பட வேண்டிய ஒரு புனிதம் நிறைந்த இடமாகும். இவ்வாறான உயர் தரத்திலுள்ள இந்த நிறுவனத்தைச் சிறீலங்கா அரசின் படைகள் கேலிக்குரியதாக மாற்றுவதுடன், மாணவர்களைத் தொடர்ந்து இவ்வாறு கைது செய்வதன் மூலம் அவர்கள் மத்தியில் அச்சத்தையும் பீதியையும் உண்டாக்கிக் வடக்குக் கிழக்கில் கல்வி நடவடிக்கைகளை நசுக்கி, அழிக்க முற்படுகின்றனர். இதை நாம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

பல்கலைக்கழகம் என்பது சிந்தித்து செயல்படக்கூடிய பிரஜைகளை ஒரு சமூகத்தில் உருவாக்கும் நிறுவனமாகும். தற்போது தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களை வெளியுலகுக்கு எடுத்துக் காட்டும் முயற்சியில் பொங்குதமிழ் போன்ற சாத்வீகப் போராட்டங்களில் பல்கலைக்கழக மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர். இது ஜனநாயக நாட்டில் உள்ள உரிமையாகும். ஆனால் இவ்வாறான போராட்டங்கள் புலிகளின் பின்னணியில் நடைபெறுவதாகப் படையினர் சித்தரிக்கின்றனர். இதன் மூலம் பல்கலைக்கழகங்களைப் புலிகளின் முகாம்களாக வர்ணித்து கொச்சைப்படுத்துகின்றனர். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். மீண்டும் இந்த சமூகம் தனது சுயமரியாதையைப் பற்றியும் தன்மானத்தைப்பற்றியும் அழிந்து போயுள்ள எமது இறைமையைப் பற்றியும் சிந்திக்கத் தொடங்கி விட்டது. அந்த சிந்தனையைப் பூண்டோடு அழிக்க வேண்டுமானால் அதன் ஊற்று மூலமான வடகிழக்கிலுள்ள பல்கலைக்கழகங்களை நசுக்கிவிட வேண்டும் என்ற நோக்கில் அரசும் படைகளும் செயற்படுகின்றனர். இந்தக் கெடுபிடிகளால் எம்மையும் எமது தன்மானச் சிந்தனைகளையும் என்றுமே அழித்துவிட முடியாதென்பதை சிறீலங்காவின் ஆட்சியாளர்களுக்கு இங்கு இடித்துரைக்க விரும்புகிறேன். பல்கலைக்கழக மாணவர்கள் படையினரால் கைது செய்யப்படுவது மாணவர்களைப் புலிகள் என்ற முத்திரை குத்தும் செயலாகும்.

யாழ். பல்லைக்கழக மாணவன் திவ்வியனை அரசு உடனடியாக விடுதலை செய்ய வேண்டும், காலவரையறையின்றி மூடப்பட்டுள்ள பல்கலைக்கழகத்தைத் திறக்க வேண்டும். அத்துடன் இனிமேலும் மாணவர்களை அநாவசியமாகக் கைது செய்யும் நடவடிக்கையைப் படையினர் நிறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இது சாத்தியப்படாதவிடத்து வடக்குக் கிழக்கில் மேலும் மாணவர்களின் போராட்டங்கள் தொடரும், அதற்கு எமது தமிழ்க் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்கும் என்பதையும் நான் இங்கு கூறிவைக்க விரும்புகிறேன். வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இடம் பெறும் படையினரின் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எமது தமிழ் சமூகம் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டிய கட்டாயம் இன்று ஏற்பட்டுள்ளது. இவ்வாறான எதிர்ப்பின் மூலமே எமது ஒன்றுபட்ட உணர்வையும் எமது கோரிக்கைகளையும் சிறீலங்கா அரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் கொண்டுவர முடியும். எனவே இந்த விடயத்தில் அரசும், உயர் கல்வி அமைச்சும் ஒரு தீர்க்கமான முடிவை எடுப்பதுடன் எதிர்காலத்தில் படையினரின் இச் செயல்களைத் தடுத்து நிறுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பல்கலையை மூடியது கவலைக்குரிய விடயம்

- மனித நேய அமைப்புகள்

(15.07.01)

யாழ்.பல்கலைக்கழக மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியன் விடுதலைக்கு சுமூகமான தீர்வைக் காணாது பல்கலைக்கழகத்தை காலவரையறையின்றி முடிவைத்த செயல் கவலைக்குரிய விடயமாகும். இந்த விடயத்தில் நல்லதொரு முடிவை ஏற்படுத்தும்படி சம்பந்தப்பட்டவர்களைக் கோருகின்றோம் என யாழ்மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது. அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, யாழ்.பல்கலைக்கழக மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியனின் கைதை அடுத்து பல்கலைக்கழக மாணவர் மத்தியில் பலத்த குழப்பம் ஏற்பட்டுள்ளது. இந்தக் குழப்பம் யாழ்.மாவட்டத்தின் பல்வேறு மட்டங்களில் பரவி மேலும் இலங்கையின் பல பாகங்களுக்கும் பரவிப் பெரும் அமைதியின்மை ஏற்படக்கூடிய சூழ்நிலையைத் தோற்றுவிக்கலாம். இப்படியான சூழ்நிலை எழாமல் தவிர்க்கப்பட வேண்டும் என்பதை கண்டிப்பாக சம்பந்தப்பட்டவர்களிடம் நாம் கோரி நிற்கின்றோம். இவ்விடயத்தில் மனித உரிமைகள் மீறப்பட்டாலும் மாணவரின் கல்வி எந்த வகையிலும் பாதிக்கப்படாத வகையிலும் சுமூகமான ஒரு முடிவை ஏற்படுத்துவதற்கு, சம்பந்தப்பட்ட யாவரையும் ஒத்துழைக்கும்படி வேண்டுகின்றோம் எனக் கூறப்பட்டுள்ளது.

சுகபோகங்கள், பதவிகளுக்காக மௌனிகளாக இருக்கும்வரை கொடூரங்கள் தொடரவே செய்யும்

அல்லாரை சம்பவத்திற்குப் பல்கலை மாணவர் ஒன்றியம் கண்டனம்

(15.07.01)

அற்பசொற்ப சுகபோகங்களுக்காக, சலுகைகளுக்காகவும், பதவிகளுக்காகவும் நாம் அரசுக்கு முண்டு கொடுத்துக்கொண்டு வாய்மூடி மௌனமாக இருக்கும்வரை, சிறீலங்காப் படையினரின் பாலியல் வல்லுறவுக் கொடூரங்கள் மற்றும் அடாவடித்தனங்கள் தொடரவே செய்யும்.

குடாநாட்டு மக்களே! தன்மானத்தோடு தலை நிமிர்ந்துவாழ நீங்கள் எழுச்சி கொண்டால், நாளையே விடிவு கிடைத்துவிடும். இது குறித்துச் சிந்தியுங்கள், செயற்படுங்கள்! அல்லாரையில் இடம்பெற்ற பாலியல் வல்லுறவுக் கொடூரத்தைக் கண்டித்து யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தென்மராட்சியில் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அல்லாரைப் பகுதியில் கடந்த 7ம் திகதி சனிக்கிழமை இரவு பெண்ணொருவர் படையினரால் பாலியல் வல்லுறவுக் கொடுமைக்கு இரையானது குறித்து கண்டனங்கள் ஒருபுறம் வந்து கொண்டிருந்தன. மறுபுறம் ஆயுதப் படையினரின் மிலேச்சத்தனமான செயற்பாடுகளும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. செவிடன் காதில் ஊதிய சங்கு போன்றே எமது குரல்கள் பயனற்றுப்போகின்றன. பலாத்கார யுத்தம் மூலம் குடாநாட்டு மக்களைச் சிறைப்பிடித்தது போன்று கையகப்படுத்திய அப்பாவிப் பொதுமக்களை, கொடுமையான வல்லுறவுகள் மூலம், 'எமது சீர்மையையும் இறப்பையும் மாண்பையும் சீரழித்து' வருகின்றனர் சிறீலங்காப் படையினர். தென்மராட்சி இன்று மக்கள் வாழ முடியாத சுடுகாடாகக் காட்சியளிக்கின்றது. மனித சஞ்சாரமற்ற மனித நேய அமைப்புக்களின் நடமாட்டம் இல்லாத சூனியப் பிரதேசத்தில் மக்களை வந்து குடியேறுமாறு வற்புறுத்தி அவ்வாறு அங்கு செல்லும் மக்களின்மீது தமது பசியைப் போக்க அரச படைகள் முயன்று வருகின்றமையை அண்மைய நிகழ்வுகள் காட்டுகின்றன.

தென்னிலங்கையில் இதே போன்று தமிழ்ப் பெண்கள்மீது மேற்கொள்ளப்பட்ட பாலியல் பலாத்காரத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பத்துத் தமிழ்க்கட்சிகள் ஒன்று திரண்டு மேற்கொண்ட ஹர்த்தாலின் எதிரொலி அடங்குவதற்குள், மீண்டும் அதேவகையான கொடூரம் நடந்தேறியிருக்கின்றது. சிறீலங்காவில் ஜனாதிபதியாக இருப்பவர் ஒரு பெண் வர்க்கத்தைச் சேர்ந்தவராக இருந்த போதிலும், பெண்களுக்கு இழைக்கப்பட்டு வருகின்ற கொடூரங்களைக் கண்டும் காணாதது போல் நடந்து கொள்வது மிகவும் கவலைதருகின்ற விடயமாகும். எமது மக்களே நன்றாகச் சிந்திக்கவேண்டிய தட்டத்தில் உள்ளார்கள். நாம் அற்பமான வசதி வாய்ப்புக்களுக்காக எமது தேசியத்தை மறந்து, தனித்துவத்தை இழந்து, கௌரவத்தைப் பறிகொடுத்து, சுதந்திரத்தைத் தொலைத்துவிட்டு மந்தைகள் போல் அடிமைகளாக வாழ்ந்து வருகின்றோம். சுகபோகங்களுக்காகவும், பதவி மோகங்களுக்காகவும் அரசிடமும் அதன் அடிவருடி கட்சியிடமும் முண்டு கொடுத்து நிற்கும்வரை இவ்வாறான கொடூரங்கள் தொடர்ந்த வண்ணமேயிருக்கும். குடாநாட்டு மக்கள் அனைவரும் தன்மானத்தோடு தலைநிமிர்ந்து நிற்பார்களாயின், தமிழர்களின் அடிமை வாழ்வுக்கு நாளையே விடிவு கிடைத்துவிடும். இதுகுறித்து சிந்தியுங்கள், செயற்படுங்கள்!. இவ்வாறு அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Studio வாடகைக்கு தேவை

பாரிசில் குசினி, குளியல் அறை வசதிகளுடன்
Studio அவசரம் தேவைப்படுகிறது.
வாடகை குறைவானால் விரும்பத்தக்கது.

தொடர்புகட்கு:
தொலைபேசி: 01 42 67 54 36 அல்லது 06 99 05 88 84

லண்டனில் தமிழர்கள் விரும்பிச் செல்லும் தனித்துவமான உணவகம்

சுவை அருவி

உங்கள் திருமண, பிறந்தநாள், மங்கலகரமான வைபவங்களுக்கு சுவைமிக்க உணவு வகைகள் குறித்த நேரத்தில் தயாரித்துக்கொடுக்கப்படும்.

ஒருமுறை விஜயம் செய்துபாருங்கள்!
மீண்டும் மீண்டும் வரத்தூண்டும் இடம்!!

Suvai Aruvi
96, High Street,
Colliers Wood
London SW19 2BT

Srilankan & South Indian Restaurant

Tel: 020 8286 6677/020 8543 6266

கருணாநிதி கைதான ஒளிபரப்பு நாடாவை தொலைக்காட்சி நிறுவனங்கள் வெளியிட உத்தரவு

தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதி கைது செய்யப்பட்ட போது தமிழக காவல்துறையினரால் பிடிக்கப்பட்ட ஒளிபரப்பு நாடாக்களை அனைத்து தொலைக்காட்சி நிறுவனங்களும் ஒளிபரப்பவேண்டும் என தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இவ் ஒளிநாடாக்களை ஒவ்வொரு ஒளிபரப்பு நிலையங்களுக்கும் அனுப்பி வைத்துள்ள தமிழக அரசு, அத்துடன் கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

அரசு தயாரித்து அனுப்பியுள்ள இவ் ஒளிநாடாவை தங்களது ஒளிபரப்பில் பொதுமக்களுக்கு போட்டுக்காட்டுமாறு கேட்கப்பட்டுள்ளதுடன்; இதனை பொதுமக்கள் கண்டு பயன்பெறும் வகையில் அரசிடம் இருந்து அடுத்த உத்தரவு வரும்வரை, தினமும் 'குறைந்தது 6 தடவைகள்' ஒளிபரப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். அத்துடன் ஒளிபரப்பிய நாள், நேரம் குறித்த விபரங்களையும் எமக்கு தந்துதவுமாறும் கேட்டுக்கொள்கின்றோம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முஷாரப்பிற்கு இராணுவ மரியாதையுடன் வரவேற்பு

பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப்பின் இந்தியப் பயணம் இடம்பெறுமா என்ற பலரது சந்தேகங்களுக்கு மத்தியில் அவர் கடந்த 14ம் திகதி காலை 8 மணியளவில் புதுடெல்லியை வந்தடைந்தார். இவரை பிரதமர் வாஜ்பாய், ஜனாதிபதி கே.ஆர். நாராயணன் உட்பட பல முக்கிய அமைச்சர்கள் விமான நிலையம் சென்று வரவேற்றுள்ளனர்.

புதுடெல்லி வந்த முஷாரப் பிற்கு குடியரசுத் தலைவர் மாளிகையில் இராணுவ மரியாதையுடன் வரவேற்பு நிகழ்வளிக்கப்பட்டது. அதனையடுத்து, உள்துறை அமைச்சர் அத்வானி, பாதுகாப்புத்துறை மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த் சிங், காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி மற்றும் பலரையும் அன்றைய தினமே சந்தித்து பேச்சுக்களை நடாத்தியுள்ளார். இச்சந்திப்பின்போது, காஷ்மீர் குறித்த பேச்சுவார்த்தை, 'ஆக்ரா லாகூர்' உடன்படிக்கையின் கீழேயே இடம்பெறவேண்டும் என சோனியாகாந்தி முஷாரப்பிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

மூன்றுநாள் பயணத்தை முடித்துக்கொண்டு திங்களன்று முஷாரப் மீண்டும் பாகிஸ்தான் பயணமானார்.

தாவூத் இப்ராகிமை ஒப்படைக்குமாறு கோரிக்கை

மும்பை தொடர் குண்டு வெடிப்பில் முக்கிய சூத்தரவாளியாக அறிவிக்கப்பட்டுள்ள மும்பை நிழல் உலக தாதா தாவூத் இப்ராகிமை இந்தியாவிடம் ஒப்படைக்கவேண்டும் என்று இந்தியா வந்துள்ள பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பிடம் மத்திய உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானி வலியுறுத்தினார். குடியரசுத் தலைவர் மாளிகையில் அத்வானியை முஷாரப் சந்தித்தார். இதன்போதே இக் கோரிக்கையை விடுத்தார்.

கராச்சியில் தலைமறைவாக உள்ள தாவூத் இப்ராகிமை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் 'இந்தியன் ஏர் லைன்ஸ்' விமானத்தை கண்ட காருக்கு பாகிஸ்தான் தீவிரவாதிகள் கடத்திச் சென்றது குறித்தும் அத்வானி முஷாரப்பிடம் எடுத்து விளக்கியுள்ளார்.



கொளத்தூர் மணி விடுதலை

கொளத்தூர் மணி வியாழக் கிழமை நிபந்தனை பிணையில் விடுதலை செய்யப்பட்டார். வீரப்பன் பற்றிய தகவல்களைத் தெரிவிக்க மறுப்பதாகக்கூறி கொளத்தூர் மணி கடந்த ஜூன் 25ம் திகதி கியூ பிரிவு பொலிசாரால் மேட்டூரில் கைதுசெய்யப்பட்டு, சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

அவரை பிணையில் விடுவிக்கக் கோரி உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் எஸ்.துரைசாமி, இளங்கோவன், வழக்கறிஞர்கள் அன்பு, எம். கே. அர்ச்சுனன், அறிவுச்செல்வி, சிவகுமார் உள்ளிட்டோர் சேலம் கூடுதல் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். மனுவை விசாரித்த நீதிபதி ரவீந்திரன், தினமும் சேலம் கியூ பிரிவு அலுவலகத்தில் கொளத்தூர் மணி கையெழுத்திட வேண்டும் என்ற நிபந்தனையுடன் வியாழக்கிழமை அவரை பிணையில் விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

இந்தியாவிற்கு புதிய அமெரிக்க தூதர்

இந்தியாவிற்கான புதிய தூதரை அமெரிக்க செனட் சபை தீர்மானித்துள்ளது. இந்தியாவின் புதிய தூதராக ரபாட்டி பிளாக் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அடுத்த மாதம் இந்தியா வந்து தனது பொறுப்பை ஏற்கவுள்ள அவர், ஜோர்ஜ் புஷ் அதிபராக இருந்த காலத்தில் அமெரிக்க வெளியுறவு மற்றும் பாதுகாப்பு கொள்கைகளின் நிபுணராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பொங்குதமிழ்

பலம் கொண்டெழுந்திடுவோம்!

இத்தாலி

காலம்: காலம்: 22.07.2001 ஞாயிற்றுக்கிழமை

நேரம்: மாலை 5.00 மணி

இடம்: Spasimo அரங்கில்

சென்ற ஆண்டு நடைபெற்ற மண்டபம்.

சுவிற்சர்லாந்து

காலம்: 28.07.2001

மாலை 16.00

இடம்: Bea Espo bern

பிரான்ஸ்

காலம்: 29.07.2001

மாலை 4.00

இடம்: L.S.C -La Plaine St.Denis

✸ சுயநிர்ணய உரிமை

✸ மரபுவழித் தாயகம்

✸ தமிழ்த் தேசியம்

தமிழரின் தேசிய அபிலாசையை வலியுறுத்தும் 'பொங்குதமிழ்'

உலகப் பரப்பில் விரிந்து கிடக்கும் ஈழத் தமிழரின் இதயக் குரலாய் 'பொங்குதமிழ்'

இரு கைகளும் இரு கால்களுமின்றிச் சாதனை

பிறப்பிலேயே இரண்டு கைகளும், இரு கால்களும் இன்றிப் பிறந்த கோவையைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி என்பவர் 800 இசைக் கச்சேரிகளை நடாத்தி சாதனை படைத்துள்ளார். 56 வயதாகும் இவர் கால்கள் இன்றி 2 1/2 அடி உயரமாகவே இருக்கின்றார். எனினும் தனது விடாத முயற்சியால் கர்நாடக சங்கீதத்தை கற்றுத் தேர்ந்துள்ள இவர், சகோதரர்களின் உதவி மூலம் அஞ்சல் வழிக்கல்வி மூலம் இந்தி, ஆங்கிலம், கன்னடம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளை கற்றுத் தேர்ந்துள்ளார். இதனைவிட ஆச்சரியமான விடயம், இவரது கச்சேரியில் உள்ள மிருதங்க கலைஞரும், வயலின் கலைஞரும் கண்பார்வையற்றவர்கள் என்பது ஆகும்.

சரத்குமார், எஸ்.எஸ் சந்திரன் போட்டியின்றி தேர்வு?

தமிழக மாநிலங்களவைக்கான ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான தேர்தல் 23ம் திகதி நடைபெறவுள்ளது. இத் தேர்தலில் தி.மு.க சார்பில் சரத்குமாரும், அ.தி.மு.க சார்பில் எஸ்.எஸ்.சந்திரன் உட்பட ஆறு பேர் போட்டியிடுகின்றனர். எனினும் இவர்கள் ஆறு பேரினதும் வேட்புமனுக்களை எதிர்த்து இதுவரை வேறுயாரும் வேட்பு மனுத்தாக்கல் செய்யாததையடுத்து, இவர்கள் ஆறுபேரும் போட்டியின்றி தெரிவாகியுள்ளதாகவும், எனினும் கடந்த 5ம் திகதி திங்கட்கிழமையின் பின்னரே முடிவுகள் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முஷாரப் வருகைக்கு சிவசேனா-உ.பி. காங்கிரஸ் எதிர்ப்பு

பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப்பின் இந்திய வருகைக்கு சிவசேனாக் கட்சி கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன், பாகிஸ்தான் கொடிகளை எரித்து ஆர்ப் பாட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர். இவ் ஆர்ப்பாட்டம் தொடர்பாக கருத்துக்கூறிய, சிவசேனா, கட்சியின் ஆக்ரா பகுதி தலைவர் சாகிப்சிங், தமது போராட்டம் தொடரும் எனவும், முஷாரப்பின் கொடும்பாவியை எரிப்பதுடன் கறுப்பு பலூன்கள் பறக்கவிடப்பட்டு, முஷாரப் செல்கின்ற பகுதிகளுக்கு தண்ணீர் தெளித்து சுத்தம் செய்வோம் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முஷாரப்பின் வருகைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ள உத்தரப் பிரதேச காங்கிரஸ் கட்சி, இந்திய இராணுவத்திற்கு பாகிஸ்தான் இழைத்த கொடுமைகளுக்காக முஷாரப் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.



காணாமல் போகும் கிணறுகள்

கேரள மாநிலத்தில் பெய்து வரும் கடும் மழை காரணமாக ஏராளமான கிணறுகள் காணாமல்போகும் அதிர்ச்சியான சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடும்மழை காரணமாக கேரளா மாநிலத்தில் உள்ள கும்பளங்காட்டை சேறுபுழா, காயாப்பள்ளி பகுதிகளில் உள்ள கிணறுகள் நிறைந்துள்ளன. ஆனால் திடீரென பூமிக்கு அடியில் பெரும் சத்தங்கள் கேட்டதாகவும் ஒரு சில நிமிடங்களில் கிணற்று நீர் அனைத்தும் வற்றிப் போய்விடுவதுடன், கிணறுகள் இடிந்து தானாகவே மூடிக்கொள்வதாகவும், இதுவரை சுமார் 200 வீட்டுக் கிணறுகள் இவ்வாறு மூடப்பட்டுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன. இச் சம்பவத்தால் அப்பகுதி வாழ் மக்கள் பெரும் பீதி அடைந்துள்ளதாக தெரியவருகிறது. இதேவேளை, இச் சம்பவத்திற்கான காரணங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

கருணாநிதி கைது அரசியல் விரோதமல்லவாம்! - ஜெயலலிதா

தி.மு.க. தலைவர் கருணாநிதியை கைதுசெய்தது அரசியல் முன் விரோதம் காரணமாகவல்ல. மாநகராட்சி ஆணையாளர் கொடுத்த புகாரின் பேரிலேயே என தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார். தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உலகின் மிகப்பெரிய நிறுவனங்களில் நான்கு இந்தியாவினுடையவை

உலகின் மிகப்பெரிய நிறுவனங்கள் என பட்டியலிடப்பட்டுள்ள 500 நிறுவனங்களில் நான்கு நிறுவனங்கள் இந்தியாவினுடையதாக இடம்பெற்றுள்ளன.

இந்தியன் ஒயில் நிறுவனம் 112வது மிகப்பெரிய நிறுவனமாகவும், பாரத் பெட்ரோலியம் நிறுவனம் 302வது இடத்திலும், ஸ்டேட் பாங்க் ஒப் இந்தியா 401வது இடத்திலும், றிலையன்ஸ் இன்டஸ்ரீஸ் நிறுவனம் 469வது இடத்திலும் உள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது. அமெரிக்க போர்ப்ஸ் இதழ் இக் கணிப்பை மேற்கொண்டு செய்தி வெளியிட்டுள்ளது.

EURO MINI BUS வாகன சேவை

நீங்கள் உல்லாசப் பயணங்களை மேற்கொள்ள குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனசேவை.

தொடர்புகளுக்கு: 01 48 40 82 31
06 14 12 84 70

தொலைநகல்: 01 48 40 95 64

லூரட்ஸ் செல்லும் பக்தர்களுக்குத் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

NÆRKØB TRAVELS Ltd
MONEY & TRANSFER





* Colombo
* Madras
* Singepor
* Canada
* London

இந்த நாடுகளுக்கு பயணம் செய்யும் எமது வாடிக்கையாளர்களுக்கு மிக மலிவான முறையில் விமானச் சீட்டு வழங்குகிறோம்.

★ உலகில் எப்பாகத்துக்கும் விமானச்சீட்டுக்களைப் பெற நாடவேண்டிய ஸ்தாபனம் NÆRKØB TRAVELS LTD (15 நாட்கள் தங்குமிட வசதியுடன்)
★ சென்னை சுற்றுலா: வருடாவருடம் சென்னை சுற்றுலா விமானப்பயணம் ஒருவருக்கு 9.955 Kr (அண்ணளவாக)மட்டுமே. வருகிறவருடத்துக்கான ஆசனங்களை இப்பொழுதே பதிவுசெய்து கொள்ளுங்கள்.
★ NÆRKØB TRAVELS LTD _ Korskenvej. 104 _ 7000 Fredericia _ Dannmark
★ தொலைபேசி _ 75 91 58 40 _ 75 91 58 05 / 75 91 58 41 _ 75 91 58 04 _ தொலைநகல்: 75 91 58 42

NÆRKØB இருந்துசேவை | ஒருவழி | திருவழி
Danmark _ London _ 540 Kr _ 890 Kr
Danmark _ Paris _ 540 Kr _ 865 Kr
Danmark _ Hamburg _ 205 Kr _ 327 Kr

பாரிசில் இருக்கும் டிஸ்னிலாண்ட் & லூட்ஸ் கோயில் புனித பயணத்திற்கும் பேருந்து விசேடமாக உள்ளது.

உடன் பணமாற்று சேவை

உலகில் எப்பாகங்களுக்கும் உடன் பணத்தை கொடுக்கவோ / எடுக்கவோ நாடவேண்டிய ஸ்தாபனம் NÆRKØB LTD

★ கொடுத்து 30 நிமிடங்களுக்குள் உங்கள் உறவுகள் கைக்குக் கிடைக்கும் என்பது நிச்சயம்.

Pub

உலகச் செய்திகள்

லிபியத் தலைவரின் சிம்பாபே விஜயம்

(15.07.01)

ஆபிரிக்க நாடான சம்பியா பகுதியில் நடைபெற்ற ஆபிரிக்க நாடுகளின் உச்சி மாநாட்டில் பங்கேற்ற லிபியத் தலைவர் கடாபி, அம்மாநாட்டை முடித்துக்கொண்டு சிம்பாபேக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார். பெண் மெய்ப்பாதுகாவலர்களின் பாதுகாப்பு உதவியுடன் 80 வாகனங்கள் சகிதம் சுமார் 550 கிலோ மீற்றர் பயணம் செய்த லிபியத் தலைவர், சிம்பாபேயைச் சென்றடைந்தார். சிம்பாபே வந்தடைந்த கடாபிக்கு உலங்குவானூர்திகள் பாதுகாப்பு வழங்கியிருக்கின்றன. 59 வயதான கடாபிக்கு சிம்பாபே பெரும் வரவேற்பினை அளித்தது.

கடாபியின் வாகனத் தொடரணி பயணம் செய்த வீதியின் இரு மருங்கிலும் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் கடாபிக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர். பின்னர் சிம்பாபே மக்களிடையே உரையாற்றிய கடாபி, சிம்பாபே அரசினால் பின்பற்றப்படும் காணிச்சீர்திருத்தக் கொள்கைகளை வரவேற்றதுடன், இவ்விடயத்தில் அமெரிக்காவும் பிரித்தானியாவும் சிம்பாபேயின் உள்விவகாரங்களில் தலையிடுவதாகவும் குற்றம் சுமத்தினார்.

கடந்த வெள்ளியன்று சிம்பாபே ஜனாதிபதி முஹாபேயை சந்தித்த கடாபி இரு தரப்பு ஒத்துழைப்புக்கள் குறித்தும் விரிவான பேச்சுக்களை நடாத்தியிருக்கின்றார். 38 வருடங்களுக்கு முன்னர் ஆபிரிக்க நாடுகளின் ஒன்றியம் உருவாக்கப்படுவதற்கு கடாபி மிகப்பெரிய பங்களிப்பு வழங்கியிருந்ததுடன் அவ் அமைப்பின் செயற்பாடுகளுக்கும் மிகப்பெரிய ஒத்துழைப்பையும் வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

2008 ஒலிம்பிக் போட்டிகள் சீனா தெரிவாகியுள்ளது

(15.07.01)

2008ம் ஆண்டு எந்த நகரம் ஒலிம்பிக் போட்டிகள் நடாத்தப்படும் தகுதியை பெற்றுக்கொள்ளும் என்ற ஊகங்கள் கடந்த வெள்ளிக்கிழமை 13ம் திகதி சர்வதேச ஒலிம்பிக் குழுவினால் முடித்து வைக்கப்பட்டிருக்கின்றது. பாரிஸ், ரொரன்ரோ, இஸ்தான்புல், பெய்ஜிங், ஒசாக்கா ஆகிய நகரங்கள் 2008ம் ஆண்டின் ஒலிம்பிக் போட்டிகளை நடாத்துவதற்கான அனுமதியைப் பெறுவதற்கு கடுமையாக போட்டியிட்ட போதிலும், இறுதி வாக்கெடுப்பில் சீனத் தலைநகரான பெய்ஜிங்கிற்கு அந்தத் தகுதி கிடைத்திருக்கின்றது.

2008ம் ஆண்டு ஒலிம்பிக் பொட்டிகளுக்காக பெய்ஜிங் தெரிவு செய்யப்பட்டதாக அறிவித்த அடுத்தகணமே, சீனாவில் பெரும் கொண்டாட்டங்கள் ஆரம்பமாகின. வாணவேடிக்கைகளும் ஆரவாரங்களும் பெய்ஜிங் நகரையே ஆட்கொண்டன.

முன்னதாக ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் ஒலிம்பிக் குழுவினால் நடாத்தப்பட்ட இரண்டாம்கட்ட இரகசிய வாக்கெடுப்பின்போது பெய்ஜிங் 56 வாக்குகளையும், ரொரன்ரோ 22 வாக்குகளையும், பாரிஸ் 18 வாக்குகளையும் இஸ்தான்புல் 9 வாக்குகளையும் பெற்றுக்கொண்டன. வெற்றியடைவதற்கு தேவையான வாக்குகளை விட 3 அதிகப்படியான வாக்குகளையும் பெய்ஜிங் நகரம் பெற்றுக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சீன அதிகாரிகள் 2008 ஒலிம்பிக் போட்டிகளுக்கான ஏற்பாடுகளை மும்முரமாக கவனிக்கத் தொடங்கியுள்ளனர். 20 பில்லியன் அமெரிக்க டொலர் செலவீனத்தில் இவ் ஒலிம்பிக் ஏற்பாடுகள் நடத்தப்பட இருக்கின்றன. 10ற்கும் மேற்பட்ட ஒலிம்பிக் அரங்குகள் போக்குவரத்து வசதிகள், சுற்றாடல் சுத்திகரிப்பு ஆகியன ஒலிம்பிக் செயற்திட்டத்தில் பிரதான இடம் வகிப்பதாக சீன அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். நீண்டகாலமாகவே பெய்ஜிங் நகரம் ஒலிம்பிக் போட்டிகளை நடாத்த அனுமதி கோரிவந்த போதிலும், இம்முறை அந்த தகுதி கிடைத்தால் சீனர்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். 2008 ஒலிம்பிக் போட்டிகளை நடாத்துவதற்கு பாரிஸ் நகரமும் கடுமையான போட்டிகளை மேற்கொண்டிருந்த போதிலும் 2004ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் ஐரோப்பிய கண்டத்தின் கிரீஸ் தலைநகரான ஏதென்சில் நடைபெறுவதால், 2008ற்கான அனுமதி பாரிசுக்கு கிடைக்கவில்லை எனக் கருதப்படுகிறது.

பாலஸ்தீன போராளிப் பிரமுகர் கார்க் குண்டுவெடிப்பில் பலி

(15.07.01)

இஸ்ரேலினால் வைக்கப்பட்டிருந்த கார்க்குண்டு ஒன்று வெடித்ததில் பாலஸ்தீன போராளிப் பிரமுகரான பாவாஸ் வாடன் கொல்லப்பட்டிருக்கின்றார். மேற்குக்கரை நகரான துல்க்கரம் பகுதியில் இக்குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது. இலத்திரனியல் உபகரணங்கள் விற்கும் நிலையம் ஒன்றுக்கு முன்னால் இப்பிரமுகர் நின்றபோது கார்க்குண்டு வெடித்ததாக ஹமாஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இக்குண்டு வெடிப்பை அடுத்து இஸ்ரேலிய இராணுவ நிலைகள் மீது பாலஸ்தீன போராளிகள் துப்பாக்கி பிரயோகத்தினை மேற்கொண்டிருக்கின்றனர்.

துல்க்கரம் பகுதியின் ஹமாஸ் பிரமுகர் இக்குண்டு வெடிப்பு பற்றி தெரிவித்தபோது, இஸ்ரேலே இக் கார்க்குண்டு வெடிப்புக்கு காரணம் எனக் குற்றம் சாட்டியிருக்கின்றார். எனினும் இஸ்ரேல் தரப்பிடம் இருந்து இக்குண்டு வெடிப்பு பற்றி எந்த அறிவிப்புக்களும் வெளிவரவில்லை.

அமெரிக்க அனுசரணையுடன் பாலஸ்தீன — இஸ்ரேல் தரப்புக்களிடையே யுத்த நிறுத்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்ட போதிலும், இரு தரப்பும் மாறி மாறி தாக்குதல்களை நடாத்துவதால் அவ் யுத்த நிறுத்தம் ஏறக்குறைய முறிவடைந்ததாகவே கருதப்படுகிறது. இது ஒருபுறமிருக்க, இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் சறோனின் மகனான ஒம்ரி, கடந்தவாரம் பாலஸ்தீனத் தலைவர் யாசீர் அரபாத்தை சந்தித்துப் பேச்சுக்களை நடாத்திய தாக தெரிவிக்கப்படுகின்ற போதிலும் இப்பேச்சுக்களின் விபரங்கள் எதுவும் தெரியவரவில்லை.

இணையத்தளப் பாவனைக்கு தலிபான் தடை

(15.07.01)

இணையத் தளங்களினால் மக்களிடையே விகாரங்களும் நம்பிக்கையீனங்களும் முஸ்லீம் மதத்திற்கு எதிரான கருத்துக்களும் பரப்பப்படுவதனால், ஆப்கானிஸ்தானின் இணையப்பாவனை தடை செய்யப்படுவதாக தலிபான் அரசின் வெளிவிவகார அமைச்சர் மோபில் பீ ரக்கீ அகமட் தெரிவித்திருக்கின்றார். தலிபான்கள் இணையத் தளங்களுக்கு எதிரானவர்கள் அல்ல எனவும், ஆனால் இத்தளங்களினால் விகாரங்களும், முஸ்லீம் கருத்துக்களுக்கு எதிர்க்கருத்துக்கள் பரப்பப்பட்டு வருவதாலும் இத்தளங்களை எமது நாட்டில் தடைசெய்ய வேண்டிய அவசியம் எழுந்துள்ளதாக சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

இணையத் தளங்களுக்கான தடை, அரச திணைக்களங்களுக்கும் மற்றும் நிர்வாக பாவனைகளுக்கும் உள்ளடங்கும் எனத் தெரிவித்த அவர், இத் தளங்களுக்கான கட்டுப்பாட்டை மேற்கொள்வதில் தலிபான் அரசு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் சுட்டிக்காட்டியிருக்கின்றார். ஆப்கானிஸ்தானில் இருந்து பாகிஸ்தான் தொலைபேசி இணைப்புக்கள் ஊடாக இத்தளங்கள் ஊடுருவுவதால் அவற்றை கட்டுப்படுத்துவதும் மிகுந்த சிரமம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய முகவரியில்
கீபோட் வகுப்புகளின் ஆரம்பம்
ஆசிரியர் S.S. தில்லைச்சிவம்
22, Rue Chouveroux, 93000 Aubervilliers.
Mº: Aubervilliers Quatre Chemins
Tel: 01 48 34 60 15 / 06 20 31 24 90

Experienced Tamil Jeweller in London
western Jewellers
வெஸ்டன் ஜுவல்லர்ஸ்
230 Upper Tooting Road
London SW 17 7EW
Tel: 020 8767 3445
Opening hours,
Mon-Sat 10 a.m-6.30 p.m Sun 11 a.m-5.30 p.m
வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும்

'பிறெட் போர்ட்' சம்பவங்கள்! ஆராய அமைச்சர் குழு

(15.07.01)

பிரித்தானியாவின் பிறட் போர்ட் நகரில் பாகிஸ்தான் — பங்களாதேஷ் மக்களுக்கும் வெள்ளையர்கள் குழுக்களுக்கும் இடையே அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்கள் குறித்து ஆராய அமைச்சரவைக் குழு ஒன்று அமைக்கப்படும் என பிரித்தானிய உள்துறை அமைச்சகம் தெரிவித்திருக்கின்றது. கடந்த வாரமும் புதிதான வன்முறைச் சம்பவங்கள் இப்பகுதியில் இடம் பெற்றிருக்கின்றன. உடமைகள் மீதான தாக்குதலும் பொலிசாரின் மீதான கல்வீச்சு சம்பவங்களும் இதில் குறிப்பிடத்தக்கன. கைத்தொழில் நகரான பிறெட் போர்ட்டில் இவ்வாறான வன் முறைகள் அடிக்கடி நிகழ்வது மிகுந்த கவலைக்குரியது என உள் துறை அமைச்சகம் அறிவித்தி ருக்கின்றது.

இப்பகுதியில் இடம்பெற்ற வன்முறைகளுக்கான அடிப் படைக் காரணம், மற்றும் சமூக நிலமை தோன்றுவதற் கான வழிவகைகள் குறித்து அமைச்சர்குழு ஆராயும் என வும் உள்துறை அமைச்சகம் தெரிவித்திருக்கின்றது.

செரப்ரெனிகா படுகொலைகள் முஸ்லீம்கள் நினைவு கூர்ந்தனர்

(15.07.01)

பொஸ்னியாவின் செரப்ரெ னிகா பகுதியில் 1995ம் ஆண்டு சேர்பியப் படையினரால் ஆயி ரக்கணக்கான முஸ்லீம்கள் படு கொலை செய்யப்பட்டதன் ஆறா வது ஆண்டு நினைவு கடந்த 11ம் திகதி செரப்ரெனிகாவில் ஆயி ரக்கணக்கான முஸ்லீம்களால் கூரப்பட்டுள்ளது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஐரோப்பாவில் இடம்பெற்ற பாரிய படுகொலை என வர் ணிக்கப்படும் செரப்ரெனிகா படுகொலைகள், பொஸ்னிய முஸ்லீம் சமூகத்தை பெரிதும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருந்தது. ஆறு வருடங்களுக்கு முன்னர் நெதர்லாந்தின் ஐ.நா. துருப்புக் கள் கடமையில் ஈடுபட்டிருந்த பகுதி ஒன்றில் சேர்பிய இராணு வத்தால் சுமார் 8000 முஸ்லீம்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். இவ்வாறு அழைத்தச் செல்லப் பட்ட முஸ்லீம்களே பின்னர் படு கொலை செய்யப்பட்டனர்.

இந்தப் படுகொலைகளை ஆண்டுதோறும் பொஸ்னிய முஸ் லீம்கள் நினைவு கூர்ந்து வருகின் றனர். கடந்த 11ம் திகதியும் செரப் ரெனிகா பகுதியில் கூடிய சுமார் 3500 முஸ்லீம்கள் ஐ.நா பொலிசாரின் உதவியுடன் இந்த நினைவுகூர்தலை செய்திருக்கின் றனர்.

அமெரிக்க ஏவுகணை தடுப்புச் சோதனை

கிறீன்பீஸ் எதிர்ப்பு

(15.07.01)

சுற்றுச் சூழல் பாதுகாப்பு சர் வதேச அமைப்பான 'கிறீன் பீஸ்' உறுப்பினர்களின் கடுமையான எதிர்ப்பையும் மீறி அமெரிக்க பாதுகாப்பு அமைச்சகம் தனது ஏவுகணை தடுப்புச் சோதனையை தப்படுத்தப்பட்டது: எனினும் இரவு 10.40 மணியளவில் இக் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள் ஏவப்பட் டன.

இவ் ஏவுகணைகள் ஏவப்பட்ட பின்னர், இவ் ஏவுகணைகளைத் தடுக்கும் தொழில்நுட்ப சோத னைக்காக அதன் இலக்குகள் தயார்படுத்தப்பட்டன.

திட்டமிட்டபடி அவ் ஏவு கணைகள் இவ் விலக்குகளில் மோதி தமது திட்டத்தை வெற் றியடையச் செய்ததாக அமெ ரிக்கா அறிவித்துள்ளது.



செச்சினியாவில் ரஷ்யத் துருப்புக்களின் வன்முறையை உயரதிகாரி ஏற்றார்

(15.07.01)

செச்சினியாவில் இடம்பெற்ற ரஷ்ய துருப்புக்களின் நடவடிக் கைகளின்போது ரஷ்யப்படையி னர் குற்றச் செயல்களைப் புரிந் ததை ரஷ்ய உயர் இராணுவ அதிகாரி ஏற்றுக்கொண்டிருக் கின்றார். இரார்—ராஸ் செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்தி ஒன்றில், உயரதிகாரி ஜெனரல் பிளாடுமீர் மொல்ட்டனஸ்கீ, ரஷ்யத் துருப்புக்களின் குற்றச் செயல்களை ஏற்றுக் கொண்ட தாகவும் அச்சம்பவங்கள் குறித்து குற்றவியல் விசாரணைகளை நடத்த நடவடிக்கை எடுக்கப்படு வதாகவும் தெரிவித்திருக்கின்றார். கடந்த இரு வருடங்களாக ரஷ் யத் துருப்புக்கள் செச்சினிய பிரதேசத்தில் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து பல மனித உரிமை அமைப்புக் கள் எதிர்ப்புக்குரல் கொடுத்து வரும் இவ்வேளை, ரஷ்ய இரா ணுவ உயரதிகாரி இக்கருத் தினை தெரிவித்துள்ளது குறிப் பிடத்தக்கது.

ஐ.நா மாநாட்டில் இழுபறி

சிறிய ஆயுத தளபாடங்களின் விற்பனையைக் கட்டுப்படுத்து வது தொடர்பாக நடைபெற்ற ஐநா மாநாட்டில் இழுபறி நிலை எழுந்துள்ளது. சட்டபூர்வமாகத் தயாரிக்கப்படும் ஆயுதங்களின் விற்பனையை கட்டுப்படுத்தக் கூடாது என அமெரிக்கா கடு மையாக வாதிட்டதை அடுத்து ஐநா. அதன் இலக்கினை எட்ட முடியாது இழுபறி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. சிறிய ஆயு தங்களின் காரணமாக சுமார் 1000 பேர் நாளாந்தம் பலியாகி வருவதால் சிறிய ஆயுத தளபா டங்கள் விற்பனையை கட்டுப் படுத்த ஐநா இம்மாநாட்டைக் கூட்டியது. சிறிய ரக ஆயுதங் களை ஏற்றுமதி செய்வது தொடர்பாக கடுமையான கட் டுப்பாடுகளை விதிப்பது அவசி யமென ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதியும் பெல்ஜிய வெளியு றவு அமைச்சரும் வாதிட்டபோ தும் அமெரிக்கா அவ்வாறான கட்டுப்பாட்டிற்கு கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

வட அயர்லாந்து பேச்சுக்கள் மந்த நிலை

வட அயர்லாந்து சமாதானம் குறித்த எவ்வித அறிகுறிகளுமி -ன்றி பிரித்தானிய பிரதமர் ரொனிபிளேயரும், அயர்லாந்து பிரதமர் பேற்றியகேனும் இரண் டாவதும் இறுதியுமான வட அயர்லாந்து சமாதானப் பேச் சுக்களில் கடந்த பத்தாம் திகதி கலந்துகொண்ட போதிலும் பேச் சுக்களில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை எனத் தெரிவிக் கப்படுகிறது. இதேவேளை சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் கத்தோலிக்கர்களை வெற்றி கொண்ட புரட்டஸ்தாந் தவர்க ளின் போர்வெற்றியை குறிக்கும் வகையில் புரட்டஸ்தாந் அவர் கள் நடாத்திய பேரணியில் எதிர் பார்த்தது போல வன்முறைகள் வெடித்துள்ளன. கத்தோலிக்கர் களின் பகுதியூடாக புரட்டஸ் தாந் அவர்களின் பேரணி சென்ற போது இந்த வன்முறைகள் வெடித்திருக்கின்றன.

ஆபிரிக்க ஒன்றியம் உதயம்

ஆபிரிக்க ஒருமைப்பாட்டு அமைப்பு ஆபிரிக்க ஒன்றிய மாக உருவெடுத்துள்ளது. ஆபி ரிக்க ஒன்றியத்தின் புதிய செய லாளர் நாயகமாக ஐவரிக் கோஸ் நாட்டின் வெளியுறவு அமைச்சர் தெரிவாகியிருக்கின் றார். ஆபிரிக்க ஒருமைப்பாட்டு அமைப்பினை ஆபிரிக்க ஒன்றி யமாக மாற்றும் ஆவணங்களை அதன் 37 அங்கத்துவ நாடுகளும் அங்கீகரிப்பை ஏற்றுக்கொண்ட தையடுத்து ஆபிரிக்க ஒன்றியம் உதயமாகிக்கொண்டிருக்கின்றது. ஐரோப்பிய ஒன்றியத்தின் கட் டமைப்பினை தழுவிய விதத் தில் ஆபிரிக்க ஒன்றியமானது ஒருநிறைவேற்று குழு, மத்திய வங்கி, நாணைய நிதியம், பாரா ளுமன்றம் மற்றும் நீதிமன்றம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமையவுள்ளது. கடந்தவாரம் லுசாக்கா நகரில் நடைபெற்ற மகாநாடு ஒன்றிலேயே இப் பெயர் மாற்றம் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றது.

வோல்த்தம்ஸ் ரோவில் புதிய நகைமாளிகை

ATN Jewellery

37, Palmerston Road, Walthamstow E17 6PR

Tel: 020 8521 9767

தமிழர் தங்க நகைத் தேவைகளையும் உயர் ரக வேலைப்பாடுகளுடன் எண்ணம்போல் தெரிவு செய்ய நாடவேண்டிய இடம் ATN Jewellery. இங்கு உலக தரத்தின் சின்னமான 916 ATN பொறிக்கப்பட்ட உத்தரவாத தங்க நகைகள் கிடைக்கும். என்றும் உங்கள் எண்ணம்போல் தெரிவு செய்ய நாடவேண்டிய நிறுவனம் ATN!!

வாரம் ஏழு நாட்களும் காலை 11.30 முதல் மாலை 7 மணி வரை திறந்திருக்கும்

Pub.Lon.

SML
Royal Jewellery
287. High Street North
East Ham. Manor Park, London E12 6SL
Tel - 020 8472 5500 - Fax - 020 8472 5687

Leama GmbH
உங்கள் மொத்த, சில்லறைப் பொருட்கொள்வனவுக்கு...
மக்கள் கடை
Duisburger Str-168/170
46049 Oberhausen
Tel: 02082053650
Marienkirch Platz_5
41460_ Neuss
Tel: 02131546311
Rotebühl Str-139
70197_ Stuttgart

உங்கள் நிறைவான தேர்விற்கு...
V.G Supermarket
165, Forest Road
Waltham Stow,
London E 17 6He
T.P & Fax - 020 8531 7459

உங்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றிட
Katpakam cash & Carry
36. Loampit Hill
Lewisham Se 13 7SW
Tel - 020 86 94 88 10
ஞாயிற்றுக்கிழமைகளில் பங்கு ஆட்டிறைச்சி பெற்றுக்கொள்ளலாம்.

Millennium Super Market
உங்களின் வீடியோ, ஓடியோ, சீடிக்களின் தேர்வுகளிற்கும்
உங்கள் இல்லத் தேவைகளுக்கும் நாடவேண்டிய இடம்.
21, Plumsted Road
Woolwich
Tel - 020 8316 7105
Mobil - 07958305466

சீலன்ஸ்
இலங்கை, இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட உடன் மரக்கறி, கடலுணவு, பலசரக்குகள் நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்வதோடு, மிகக்குறைந்த விலையில் தொலைபேசி அட்டைகளையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.
Seelans
332 & 334. High Street North
East Ham, London E 12-6Ph
Tp & Fax- 020 8471 5733

Palm Beach
RESTAURANT
10%OFF
ALL TAKE
AWAY ORDERS
P.Sivarupan
Proprietor
17 Ealing Road,
Wembley
Middlesex HA0 4AA
Tel: 020 8900 8664
Mobile: 079 3958 7338
Home: 020 8900 1990

புதிய நிர்வாகத்தின் கீழ்
AMIRTHAAM
முற்பணமாக £20 செலுத்துபவர்கட்கு ஒரு நேர உணவு ஏழு நாட்களுக்கும்.

OPENING HOURS:
Monday-Thursday - 12 noon- 3.00 pm 6.00 pm 11.00 pm
Friday/Saturday - 12.00 noon- 12.00 midnight
Sunday - 12.00 noon - 11.00 pm
200B Alexandra Avenue, South Harrow, Middlesex HA2 9BU,
Tel: 020 8423 9666/ 020 8864 3636

TRAVEL AIR
உங்கள் பிரயாணத் தேர்வுகளை உங்கள் வசதிக்கேற்றவாறு கணினி வலையூடாக தேர்வு செய்யலாம்.
www.travel-air.de
LUISEN STR-46, 42103 WUPPERTAL.
Tel: 0202/4936921/0202/2443104-05
Fax: 0202/2443106
Handy: 0173-2650639

ஈழமுரசின் இசை முரசு 2001

சிறந்த பாடகர் தெரிவுப் போட்டி

08.09.2001 சனிக்கிழமை

விண்ணப்பப் படிவம்:

1. முழுப்பெயர்: .....
2. பிறந்த நாள்: .....
3. பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயர்: .....
4. முகவரி: .....
   .....
5. தொலைபேசி எண்: .....
6. பங்குபற்றும் போட்டி: **தனிக்குரல்** ☐ / **இணைகுரல்** ☐ **பாடற்போட்டி**
7. தனிக்குரல் பாடற்போட்டியாயின்:
   பங்குபற்றும் பிரிவு: **கீழ்ப்பிரிவு** ☐ / **மத்தியபிரிவு** ☐ / **மேற்பிரிவு** ☐ / **அதிமேற்பிரிவு** ☐
   பாடவிரும்பும் பாடலின் பெயர்: 1 .....
   பாடவிரும்பும் பாடலின் பெயர்: 2 .....
   பாடவிரும்பும் பாடலின் பெயர்: 3 .....
   இடம்பெற்றுள்ள ஒலித்தட்டு அல்லது ஒளிப்பேழையின் பெயர்: 1- .....
   2- ..... 3- .....
8. இணைகுரல் போட்டியாயின்,
   I. இணைந்து பாடுபவர் பெயர்: .....
   முகவரி: .....
   II. பாடவிரும்பும் பாடலின் பெயர்: .....
   இடம்பெற்றுள்ள ஒலித்தட்டு அல்லது ஒளிப்பேழையின் பெயர்: .....
   .....

நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது எனவும் அதனை முழுமனதுடன் ஏற்பேன் என்றும் இத்தால் உறுதிசெய்கின்றேன்.

....
பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஒப்பம் திகதி விண்ணப்பதாரரின் ஒப்பம்

பங்குபற்றுவோருக்கான விதிகள்:

1. இதுவரை வெளியாகியுள்ள தமிழீழ விடுதலைப்பாடல் தொகுப்புக்களில் இருந்து மாத்திரமே போட்டிக்கான பாடல் தெரிவு செய்யப்படவேண்டும்.
2. போட்டியாளர் போட்டியின்போது ஒரு பாடல் மாத்திரமே பாடலாம். ஆனால் 3 பாடல்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும்.
3. இணைகுரல் பாடற்போட்டி, தனிக்குரல் பாடற்போட்டி என இரு வகைப் போட்டிகள் நடாத்தப்படும்.
4. தனிக்குரல் பாடல் போட்டி பின்வரும் பிரிவுகளாக நடாத்தப்படும்.
   கீழ்ப்பிரிவு - 8 வயது - 01.01.93 இற்குப் பின்பு பிறந்தவர்கள்
   மத்தியபிரிவு - 9 - 14 வயது - 01.01.92 - 31.12.87
   மேற்பிரிவு - 15 19 வயது - 01.01.86 - 31.12.82
   அதிமேற்பிரிவு - 20 வயது - 31.12.81 இற்கு முன்னர் பிறந்தவர்கள்
5. இணைகுரல் பாடற்போட்டிக்கு வயதெல்லை இல்லை. தெரிவு செய்யும் பாடல் இணைகுரல் பாடல்களாக இருத்தல் வேண்டும்.
6. முதலாவது இடத்தைப் பெறுபவர் தங்கப் பதக்கமும், இசை முரசு 2001 இற்கான விருதும் வழங்கி சிறப்பிக்கப்படுவர்.
7. விண்ணப்பம் செய்வதற்கான இறுதி நாள்: 15.08.2001
8. விண்ணப்பம் செய்ய வேண்டிய முகவரி:

TCC,
P.O.Box - 65, 7400 Herning.

குறிப்பு: போட்டியாளர்களுக்கான இசையுடன் பாடுவதற்கான பயிற்சி வழங்கப்படும். இது குறித்து மேலதிக விபரங்களுக்கு 97217649 எனும் அலுவலக தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்

ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

அதிகார வெறியின் அதிரடிகள்

தமிழர் தாயகத்தின்மீது பிரயோகித்து ருசி கண்ட அதிகார வெறியினை இன்று சந்திரிகா தனது தேசத்தில் இன்று பிரயோகித்திருப்பதானது அவரது பதவி மோகத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாகிறது. எதிர்க்கட்சிகள் கொண்டுவர முயன்ற நம்பிக்கையில்லாப் பிரேரணையினை பாராளுமன்றத்தில் சந்திக்க அஞ்சிய சந்திரிகா அரசு இன்று அதிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக பாராளுமன்ற அமர்வுகளையே அதிரடியாக ஒத்திவைத்து தனது தேசத்து மக்களுக்கு அதிர்ச்சி வைத்தியம் ஒன்றினை அளித்திருக்கின்றார். தமிழர் தாயகத்திற்கு நச்சு விதைகளை விதைப்பனவாக சிறீலங்காவின் எதிர்க்கட்சிகள் இருந்தபோதிலும் தமது தேசத்தின் அரசொன்றிற்கு ஜனநாயக வழியொன்றில் எதிர்ப் பொன்றினைக் காட்ட முற்பட அதற்கு பதிலாக சந்திரிகாவிடமிருந்து இந்த அதிரடிகள் வெளிப்பட்டுள்ளன. இன்று சிறீலங்காவின் அரசிய லமைப்பைச் சுற்றிச் சுற்றி எழுப்பப்பட்டுக்கொண்டிருக்கும் கேள்விகள் அனைத்தினதும் அடித்தளம் தமிழ் மக்களுக்கு எதிரான சிங்கள பேரினவாதத்தின் மமதையின் இருப்புத்தான்.

1972, 1978 ஆகிய ஆண்டுகளில் சிறீலங்கா முன்வைத்த அரசியல் அமைப்பில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் யாவும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டன. தனது அதிகார வெறியினை மென்மேலும் தக்க வைத்துக் கொள்வதற்காக தமிழர் வாழ்வில் பெரும் அவலங்களை விதைத்த கிழநரி ஜே. ஆர். 1978ம் ஆண்டு புதிய அரசியல் அமைப்பு ஒன்றின் மூலமாக தனக்கு நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவியொன்றினை பெற்றுக்கொண்டார். அந்தப் பதவியின் ஊடாக அன்று ஜே. ஆர். தமிழ் மக்களுக்கு அள்ளி விதைத்த அவலங்களை நாம் சொல்லித்தான் தெரியவேண்டிய அவசியம் ஒரு பாமர தமிழ் குடிமகனுக்குக் கூட இருக்க முடியாது. தமிழ் மக்களின் தாயகத்தை சூறையாடுவதற்கெனவே அவசர காலச் சட்டம், பயங்கரவாதச் சட்டம் போன்ற கொடிய சட்டங்களை ஜே. ஆர் அன்று கையில் எடுத்ததும் தமிழர் வரலாற்றில் பதிவாகியிருக்கும் ஒரு அம்சம். அன்று தென்னாபிரிக்காவின் நிறவெறி கொண்ட அரசு வைத்திருந்த பயங்கரவாதச் சட்டத்தை உள்வாங்கி அதில் மேலும் கொடிய அம்சங்களைச் சேர்த்து ஜே. ஆர். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை உருவாக்கியதை யாரும் மறந்திருக்கமுடியாது. உலகம் முழுவதும் அன்று எதிர்த்த தென்னாபிரிக்காவின் பயங்கரவாதத்தை தமிழர்களை அழிப்பதற்காக எந்த சாத்தானுடனாவது கூட்டுச் சேருவேன் என வெறிக்கூச்சல் போட்ட ஜே. ஆர். தன்னுள் உள்வாங்கியதும் இங்கு கோடிட்டுக்காட்டவேண்டியது.

ஆனால் இன்று ஜே. ஆரின் வழி வந்த வழித் தோன்றல்கள் தாம் கட்சி ரீதியில் பிரிந்து நின்றாலும், அதே பயங்கரவாதத்தை அட்சரம் பிசகாமல் உருப்போடுவது இன்னும் நின்றபாடில்லை. இன்று சந்திரிகாவை சர்வாதிகாரி எனச் சாடும் இதே ஐ.தே.க. அன்று தமிழ் மக்களுக்கு தந்த கொடுங்கோன்மை தமிழ் மக்களின் மனதில் என்றும் பசுமரத்தாணி போல நிற்கின்றது. இதேவேளை தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்த்துவைப்பேன் என கண்ணீர் வடித்து ஆட்சியைப் பிடித்த சந்திரிகாவும் இன்று ஐ.தே.க.வின் அதே பயங்கரவாதத்தை இன்னும் விரிவாக்கி ஐ.தே.க.வே வியந்து நோக்கும்படி தமிழர் தாயகத்தில் பிரயோகிப்பது தமிழ் மக்களின் நெஞ்சில் கனன்றுகொண்டுதான் இருக்கின்றது. எது எப்படியோ தமிழர் தாயகத்திற்கு சிங்கள தேசம் விதைத்த இன்னல்கள் இன்று மறுதலையாக அவர்களையே அவர்களது ஆட்சியாளர்களது வடிவத்தில் மிரட்ட ஆரம்பித்திருப்பதானது சிங்கள மக்களுக்கு தங்களது தேசத்தின் யதார்த்த நிலை என்ன என்பதை தெளிவாக்குமா என்பது ஒரு கேள்விக்குறியான விடயம்தான்.



சித்திரவதைக்கு எதிரான முறைப்பாடுகளை, விசாரணைகளை தடுக்கும் முயற்சியில் படையினர்

அசோக்குமார் திருமலையை அடுத்துள்ள பாலையூற்று கிராமத்தில் வசித்து வரும் ஒரு இளைஞன். ஆட்டோ சாரதியாகத் தொழில் பார்த்து வருகிறார். கடந்த ஆண்டு டிசம்பர் மாதம், வெள்ளை வானில் வந்த சிலரால் கைது செய்து கொண்டு செல்லப்பட்டு, பல நாள் சித்திரவதையின் பின்னர் விடுவிக்கப்பட்டார். கைது செய்தவர்கள் சிவில் உடையில் வந்த சிறீலங்கா கடற்படையினர் என்று பின்னர் கூறப்பட்டது. இவ்வாண்டு மார்ச் மாதம் அளவில் திருமலை நகரின் மடத்தடிச்சந்தியில் ஆட்டோவுடன் அசோக்குமார் என்ற இன்னொரு இளைஞன் காத்திருந்த போது, அங்கு வந்த சிறீலங்காப் பொலிசார் அவனது ஆட்டோவில் ஏறிக் கொண்டனர். வாடகைக்கு தனது ஆட்டோவை பொலிஸ் காரர் அமர்த்தியதாக அசோக்குமார் எண்ணிக் கொண்டான். ஆனால் அவன் நினைத்தது தப்பாக போய்விட்டது. ஆட்டோவுடன் அசோக்குமார் உப்புவெளிப் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டான். அங்கு சில தினங்கள் தடுத்து வைக்கப்பட்டு, பின்னர் திருமலை நீதிமன்றத்தில் ஆஜர் செய்து விடுவிக்கப்பட்டான். இந்தளவுடன் தொந்தரவு முடிந்து விட்டது என்று அவன் எண்ணினான். ஆனால் மீண்டும் அவனைப் பொலிசார் கைது செய்தனர். இம்முறை அவன் திருமலை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டான்.

சித்திரவதையை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. அவனின் முதுகில் மின்சார இஸ்திரிக்கைப் பெட்டியினால் சுடப்பட்டது. இதனால் அவனின் முதுகு நிறைந்த எரிகாயங்கள் காணப்பட்டன. முப்பதிற்கும் மேற்பட்ட எரிகாயங்கள் அவன் முதுகில் இருந்தன. அதன் பின்னர் அவன் விடுவிக்கப்பட்டான். விடுதலையான அசோக்குமார் திருமலையில் உள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பிராந்திய அலுவலகத்தில் உள்ள பிராந்திய ஒருங்கிணைப்பாளரிடம் முறையிட்டான். பிராந்திய ஒருங்கிணைப்பாளர் ஒரு சிங்களவர். அசோக்குமாரை பிராந்திய ஒருங்கிணைப் பாளர் தமது காரில் ஏற்றிக் கொண்டு திருமலை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார். அங்கு மாவட்ட வைத்திய அதிகாரியின் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தினார். மாவட்ட வைத்திய அதிகாரியும் ஒரு சிங்களவர். அதனிடையில் அசோக்குமாரின் முதுகில் உள்ள எரிகாயங்களை மனித உரிமை அதிகாரி படம் பிடிக்க ஏற்பாடு செய்தார். அதன்படி படமும் பிடிக்கப்பட்டது. அசோக்குமாரை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்திய வைத்திய அறிக்கையை பெறுவதற்கு மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர். ஆனால் மாவட்ட வைத்திய அதிகாரி தமது வைத்திய பரிசோதனை அறிக்கையைக் கொடுக்கவில்லை.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகத்திற்கு, மாவட்ட வைத்திய அதிகாரி அழைக்கப்பட்டார். அதன்படி மாவட்ட வைத்திய அதிகாரி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகத்திற்கு வந்தார். அவரிடமிருந்து வாக்குமூலம் பெறப்பட்டது. அவ்வாக்குமூலம் அசோக்குமார் சித்திரவதை செய்யப்பட்டார் என்பதை உறுதிப்படுத்துவதாக அமைந்திருந்தது. இதனை அறிந்த பொலிசார் மாவட்ட வைத்திய அதிகாரியைக் கொண்டு, அவ் வாக்குமூலம் பலவந்தமாகவும் பயமுறுத்தியும் பெறப்பட்டதாக தாங்கள் வைத்திய அதிகாரியிடம் இருந்து வாக்கு மூலத்தை வாங்கினார்கள். இத்துடன் நிற்கவில்லை அந்த வைத்திய அதிகாரியை திருமலை பொலிஸ் நிலையத்திற்குச் சென்று தம்மிடம் வாக்குமூலம் பெற்ற மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பிராந்திய ஒருங்கிணைப் பாளருக்கு எதிராக முறைப்பாடும் செய்ய வைத்தனர். அச்சுறுத்தல் காரணமாகவே தாம் அசோக்குமார் சித்திரவதைக்கு உட்படுத்தப் பட்டிருந்தார் என்று வாக்குமூலம் அளித்ததாக மாவட்ட வைத்திய அதிகாரி தமது முறைப் பாட்டில் கூறியிருந்தார்.

அதனை அடுத்து, வாக்கு மூலத்தைப் பதிவு செய்த மனித உரிமை அதிகாரி, பொலிஸ் நிலையம் வரும்படி அழைக்கப்பட்டார். அவர் அதனை ஏற்று பொலிஸ் நிலையம் சென்று தனது நிலையை தெரிவித்தார். மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தமக்குள்ள அதிகாரங்கள் பற்றி பொலிசாருக்குத் தெரிவித்தார். இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி பொலிசாருக்கு ஒரு வாக்குமூலத்தை அளித்தார். அந்த மனித உரிமை அதிகாரி அத்துடன் நிற்கவில்லை. கொழும்பில் உள்ள தமது தலைமைக் காரியாலயத்திற்கும் அறிவித்தார். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமைக் காரியாலயமும் இச்சம்பவம் பற்றி விசாரித்தது. சித்திரவதை பற்றிய முறைப்பாடு குறித்து விசாரணை நடத்தும் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஒரு உயர் அதிகாரிக்கு எதிராகவே பொலிசாரும் அரசாங்க வைத்திய அதிகாரியும் இவ்வாறு செயல்படுவது குறித்து மனித உரிமை ஆணைக்குழுவின் தலைமைப் பீடம் கடுமையான விசனங்களை கொண்டுள்ளதுடன், நடவடிக்கை எடுக்ககவும் தயாராகி வருகின்றது என்று ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

பொதுமக்கள் செய்யும் சித்திரவதை முறைப்பாடுகளை விசாரணை செய்யும் அதிகாரத்தைக் கொண்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு எதிராக 'பொலிசாரும்', அதற்கு உடந்தையாக சித்திரவதைக்குள்ளான வர்களை வைத்திய பரிசோதனை செய்யும் 'அரசாங்க வைத்திய அதிகாரிகளும்' செயல்பட ஆரம்பித்துள்ளமை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைமைப்பீடத்திற்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பிட்ட திருமலை மாவட்ட வைத்திய அதிகாரிக்கும் வைத்திய அதிகாரியின் முறைப்பாட்டைப் பதிந்து, மனித உரிமை அதிகாரியை விசாரணை செய்த திருமலை பொலிஸ் அதிகாரிக்கும் எதிராக கொழும்பு உயர்நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்வதற்கு மனித உரிமை ஆணைக்குழுவின் தலைமை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தற்போது தெரியவந்துள்ளது.

– திருமலையில் இருந்து நாதன்

பலவந்தமாகத் திறக்கப்பட்ட பாராளுமன்றமும் சந்திரிகாவின் பதவிநீக்கக் கோரிக்கையும்

சிறீலங்காவின் அரசியல் களத்தில் முன்னொரு போதும் இல்லாத வகையில் தற்பொழுது பலப்பரீட்சைகள் ஆரம்பமாகிவிட்டன. ஜனாதிபதி சந்திரிகாவிற்கும், எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையே ஏட்டிக்குப்போட்டியான நகர்வுகள் ஆரம்பித்துவிட்டதால் இவர்கள் அனைவரையும் தமது வாக்குரிமை மூலம் தெரிவுசெய்த பொதுமக்களுக்கு பரபரப்புக் காட்சிகள் தற்பொழுது இலவசமாகக் கிடைக்க ஆரம்பித்துவிட்டன. கடந்தவாரம் சிறீலங்காவின் அரசியல் வரலாற்றில் முதல்முறையாக தனது அதிகாரங்களை ஒரே தடவையில் சந்திரிகா பயன்படுத்தியதற்கு இன்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பதிலடி ஒன்றினைக் கொடுத்திருக்க பரபரப்பு உச்சமாகியிருக்கிறது.

எதிர்க்கட்சிகளினால் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றத்தில் கொண்டுவருவதற்கான சாத்தியக் கூறுகள் தென்பட்டவுடனேயே சந்திரிகா தனது அதிகாரத்தை தக்கவைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடத்தொடங்கி அதன் உச்சக் கட்டமாக அதனை அதிரடி என்று கூடச் சொல்லலாம். ஒரு நடவடிக்கையை எடுத்தார். பாராளுமன்றக் கூட்டத்தொடரை ஒத்தி வைப்பதற்கும் சர்வஜன வாக்கொன்றினை நடாத்துவதற்குமாக சந்திரிகாவின் இந்த அதிரடி அமைந்தது. கடந்த 10ம் திகதி நள்ளிரவில் விசேட வர்த்தமானி ஒன்றின் ஊடாக பாராளுமன்றத்தின் கூட்டத்தொடர் எதிர்வரும் செப்டெம்பர்மாதம் 7ம் திகதி வரை ஒத்திவைக்கப்படுவதாகவும் ஓகஸ்ட் 21ம் திகதி புதிய அரசியல் அமைப்பை ஏற்றுக் கொள்வதா இல்லையா என்பதை அறிந்துகொள்ள மக்களிடமிருந்து சர்வஜன வாக்கெடுப்பு மூலமாக பதில் தெரிந்துகொள்ளப்படும் எனவும் சந்திரிகா அறிவித்ததும் ஏற்கனவே சூடாக இருந்த அரசியல் களம் ஏறக்குறைய கொதிநிலை ஒன்றிற்குள் தள்ளப்பட்டது. சந்திரிகா முற்றுமுழுதான ஒரு சர்வாதிகாரியாக மாறிவிட்டார் என எதிர்க்கட்சிகள் கடுமையாக கண்டனம் தெரிவித்ததுடன் அவரை ஜனாதிபதி பதவியில் இருந்து நீக்குவதற்கான வழிமுறைகளையும் ஆராயத் தொடங்கிவிட்டனர். எதிர்க்கட்சிகளின் இந்த நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக சந்திரிகாவின் உத்தரவின் பிரகாரம் மூடப்பட்டுக்கிடந்த பாராளுமன்றம் இன்று (16ம் திகதி) ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான 70 இற்கும் மேற்பட்ட எதிரணிப் பாராளுமன்ற உறுப்பினர்களால் பலவந்தமாக திறக்கப்பட்டு அதனுள்ளே கூட்டத் தொடர் ஒன்றும் நடாத்தப்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக சிறீலங்காவில் நடைபெற்றுவரும் அரசியல் நிகழ்வுகள் உண்மையிலேயே அத்தேசத்திற்கு ஓரளவு புதுமையானதுதான். 'வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்ற முதுமொழிக்கேற்பவோ என்னவோ இந்த அரசியல் அதிரடிகளின் 'நதி மூலம் ரிஷி மூலம்' தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள தேசம் நடாத்திய கொடூரங்களின் ஒரு எதிர்விளைவாகத்தான் கருத முடியும். அதுமட்டுமல்ல சிங்கள மக்களுக்கு இன்று சந்திரிகாவின் சர்வாதிகாரப்போக்கு ஓரளவு தெரிய ஆரம்பிப்பதற்கும் இது ஒரு சான்றாகும்.

> சந்திரிகாவிற்கு இப்பொழுது பிடித்துள்ளது தனது அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்கான வெறியாததால் இந்த 'சலசலப்புகளை'க் கண்டு அந்த வெறி தணிந்துகொள்ளுமா என்பது ஐயத்திற்குரியது.

இன்று சிறீலங்காவின் ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையே தோன்றியிருக்கும் இந்த நெருக்கடிகளுக்கெல்லாம் காரணம் 1978ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ஒரு அரசியல் அமைப்பு வரைபுதான். 1977ம் ஆண்டு நடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஜெயவர்த்தனா தலைமையிலான ஐக்கியதேசியக் கட்சி 5/6 பெரும்பான்மைப் பலத்துடன் வெற்றிபெற்று ஆட்சியைக் கைப்பற்றியதும் அந்தப் பெரும்பான்மைப் பலத்தை தொடர்ந்தும் பேணுவதற்காக கிழநரி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா சிந்தித்ததன் விளைவே 1978ம் ஆண்டு புதிய அரசியல் அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டதுடன் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை என்ற புதிய அம்சமும் சிங்கள தேசத்திற்கு அறிமுகமாகியது. இவ்வேளைதான் சிறீலங்காவில் விகிதாசாரத் தேர்தல்முறை அறிமுகப்படுத்தப்பட்டு தொகுதிமுறையான தேர்தலுக்கு முடிவு கட்டப்பட்டது. இந்த அதிகாரங்கள் எல்லாம் தனக்குக் கிடைத்ததும் ஜே. ஆரின் குறுக்குவழி மூளை, பொதுத் தேர்தல் ஒன்றை நடாத்தாமலேயே தனது பாராளுமன்றப் பெரும்பான்மையை தக்க வைப்பதன் வழிமுறைகளை ஆராய்ந்தது. இதன் விளைவாக சர்வஜன வாக்கெடுப்பு முளைத்துக்கொண்டது. அதாவது மக்களுக்கிருந்த பாராளுமன்ற தெரிவினை பறித்த ஜே. ஆர். சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலமாக தனது அரசினை 11 வருடங்களாக பாராளுமன்ற ஆசனங்களில் இருத்தி 'அழகு'பார்த்தார். அன்று ஜே.ஆர். ஜெயவர்த்தனா செய்த பாணியிலேயே இன்று சந்திரிகா நடப்பது இதன்மூலமாக தெரியவரும். ஆனால் இதில் வேடிக்கை என்னவென்றால் அன்று ஜே.ஆருக்கெதிராக கண்டனங்களை தெரிவித்த கட்சி, இன்று அவரது பாணியில் நடைபோட அன்று ஜே.ஆரை ஆதரித்தவர்கள் இன்று அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதுதான். தற்பொழுது சிறீலங்காவில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலை உண்மையிலேயே பல விளைவுகளை கொடுக்கக்கூடிய தன்மையிலேயே காணப்படுகின்றது. தற்பொழுது எதிர்க்கட்சிகள் யாவும் ஜனாதிபதி பதவியில் இருந்து சந்திரிகா இறங்கவேண்டும் என குரல்கொடுக்கின்றன. இன்னும் ஒரு சில நாட்களில் எதிர்க்கட்சிகள் தமது இந்த முடிவினை அதாவது பதவி நீக்க (Impeachment) கோரிக்கையை பாராளுமன்ற சபாநாயகரிடம் சமர்ப்பித்து அவரின் அங்கீகாரத்தைக் கோருவார்கள். சபாநாயகர் இந்தக் கோரிக்கைக்கு அங்கீகாரம் அளித்தால் சந்திரிகா பதவிவிலக வேண்டும். ஆனால் இங்கு ஒரு விடயத்தைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும். அதாவது சந்திரிகா எதிர்க்கட்சிகளின் இந்த முடிவினை ஏற்றுக்கொள்ளுவாரா? என்பதே அவ்விடயம். ஏனெனில் சந்திரிகா நேரடியாகவே மக்களின் வாக்குகள் மூலம் 2005ம் ஆண்டுவரை பதவியிலிருக்க ஆணையினைப் பெற்றுக்கொண்டதால் எதிர்க்கட்சிகளின் இந்தக் கோரிக்கைக்கு அவர் செவிமடுப்பாரா என்பது கேள்விக்குரியது. ஏனெனில் சந்திரிகாவிற்கு இப்பொழுது பிடித்துள்ளது தனது அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்கான வெறியாததால் இந்த 'சலசலப்புகளை'க் கண்டு அந்த வெறி தணிந்துகொள்ளுமா என்பது ஐயத்திற்குரியது. ஆனால் இங்கு இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர்களும் மக்களின் வாக்குகளின் மூலம் தெரிவானதால் இந்தப் பலப் பரீட்சைகள் விரைவில் வெடித்துக் கிளம்பக்கூடிய சூழ்நிலைகளே தென்படுகின்றன.

சந்திரிகா தனது திட்டப்படி ஓகஸ்ட் மாதம் 21ம் திகதி புதிய அரசியலமைப்பு தொடர்பாக நடாத்தும் சர்வஜன வாக்கெடுப்பில் வெற்றிபெறுவாரேயானால் அந்த வெற்றியின் மூலம் கிடைத்த புதிய அரசியல் அமைப்பிற்கேற்ப தற்போதைய பாராளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்றலாம். அல்லது அந்தப் பலத்தைப் பயன்படுத்தி புதிய தேர்தல் ஒன்றை நடாத்தலாம். ஏனெனில் புதிய தேர்தலின் மூலமாக, அதாவது புதிய அரசியல் அமைப்பின்படி அதிகளவான பாராளுமன்ற பலத்தைப் பெறுவதற்கும் அவர் முயற்சித்துக்கொள்ளலாம். இவையெல்லாம் சந்திரிகாவின் திட்டங்களாக இருக்கின்றன. அதேவேளை சந்திரிகாவின் இந்த அதிரடிகளிற்கு பதிலடியாக எதிர்க்கட்சிகளும் சில திட்டங்களை வைத்திருக்கின்றன. தற்பொழுது அவர்கள் எழுப்பியுள்ள ஜனாதிபதியின் பதவிநீக்க கோரிக்கை இதில் முக்கிய பங்கு வகிக்கும். அத்துடன் சர்வஜன வாக்கெடுப்பினை ஒழுங்காக நடாத்தி முடிப்பதற்கு எதிர்க்கட்சிகள் இடமளிப்பார்களா என்பதும் இன்னொரு கேள்வி. இதற்கிடையே சந்திரிகாவின் அதிரடிகளுக்கு எதிராக அவரது குழாமினுள்ளேயே எழுந்திருக்கும் எதிர்ப்புக்களும் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியவை. கடந்த செவ்வாய் இரவு சந்திரிகா பாராளுமன்றக் கூட்டத்தொடரை ஒத்திவைப்பதாகவும், சர்வஜன வாக்கெடுப்பிற்கு திகதி குறித்ததையும் அவரது குழாமினுள்ளேயே பலரது அதிருப்திக்கு உள்ளாகியிருக்கின்றது. சந்திரிகாவின் இந்த அதிரடி அறிவிப்பு வெளியான மறுதினம் அதாவது, கடந்த புதனன்று காலையில் அமைச்சரவை அவசர அவசரமாகக் கூடியபோது அக் கூட்டத்தில் கலந்துகொண்ட 4 முக்கிய அமைச்சர்கள் சந்திரிகாவின் இந்த முடிவிற்கு எதிராக தமது கடும் ஆட்சேபனையை தெரிவித்துவிட்டு கூட்ட மண்டபத்தைவிட்டு உடனடியாகவே வெளிநடப்புச் செய்திருக்கின்றனர். குறிப்பாக அமைச்சர் பீரிஸின் வெளியேற்றம் இதில் குறிப்பிடத்தக்கது. சிறீலங்காவின் அரசியல் அமைப்பு விவகாரங்களுக்கென தான் அமைச்சராக இருந்தும் இந்த அரசியல் அதிரடிகள் குறித்து தனக்கு ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் சந்திரிகா எதேச்சாதிகாரமாக நடந்துகொண்டதை அவர் வன்மையாகவே கண்டித்திருக்கின்றார். ஏற்கனவே இருவருக்குமிடையே சுமூகமான உறவுகள் இல்லாத நிலையில் சந்திரிகாவின் இந்த அதிரடி மேலும் அவர்களுக்கிடையே விரிசலை உண்டுபண்ணியிருக்கிறது. அமைச்சர் பீரிசுடன் ஏனைய அமைச்சர்களான திசாநாயக்கா, மகிந்த விஜயசேகரா, ஆறுமுகம் தொண்டமான் ஆகிய அமைச்சர்களும் அமைச்சரவைக் கூட்டத்தில் இருந்து வெளிநடப்புச் செய்ததாகவும் தெரியவருகின்றது.

எது எப்படியோ நாட்டின் பொருளாதாரம் கடுமையான வீழ்ச்சியை சந்திக்கும் இந்நிலையில் மூலை முடுக்குகளெல்லாம் வன்

பேம்பி

முறைகள் தலைவிரித்தாடும் சூழ்நிலையில் சிங்கள தேசம் சந்திரிகாவின் அதிரடி நடவடிக்கைகளை பீதியோடு அவதானிக்க ஆரம்பித்துவிட்டது என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய உண்மையாகிவிட்டது. ஆயினும் தனது தேசத்தில் தான் சந்திக்கும் இந்த அதிரடிகளுக்கெல்லாம் எங்கோதான் விதைத்த இப்போதும் விதைத்து வருகின்ற அந்த வினைகளின் ஒரு பக்கவிளைவே காரணம் என்பதை அந்தத் தேசம் இன்னமும் உணர்ந்துகொள்ளத் தலைப்படவில்லை என்பதை தமிழர் தாயகத்தின் மீது அது தொடர்ந்தும் மூர்க்கத்தனமாக நடாத்திவரும் போர்வெறியே சாட்சி பகருகின்றது.

உங்கள் கைத்தொலைபேசி சேவைகளுக்கு

SUN TEL

Téléphone Portable

நீங்கள் உரையாடுவதற்கு எவ்வித கட்டணமும்* இல்லை

Millenium

கைத்தொலைபேசிகளை எல்லா நாடுகளிலும் பாவிக்கக்கூடிய வகையில் செய்துதருவதுடன், அவை திருத்தியும் கொடுக்கப்படும்

178, Rue du Fgb. Saint Denis, 75010 Paris - Tel: 01 40 34 11 28 - Fax: 01 40 34 11 81
E-mail: goldringeurope@aol.com

Bouygues Telecom
La plus belle façon de s'entendre.

* நிபந்தனைகளை வர்த்தக நிலையத்தில் பார்க்கவும்.

தமிழீழ வரலாறு கண்ட வீரப் பரம்பரை

02

அடுத்து வன்னியர் என்ற வீரத்தமிழ் மறவர் வாழ்ந்த பிரதேசத்தினை நோக்கலாம். தமிழகத்தின் வட பிரிவில் இன்றும் பரந்து காணப்படுவதும், சோழரது படைப்பிரிவில் சிறப்பிடம் பெற்றிருந்ததும் முதலாம் இராசராசன் [985–1016] ஈழ நாட்டைக் கைப்பற்றியதை அடுத்துச் சோழப் படைக ளோடு ஈழத்திற்கு வந்ததும்[4] எனக் கொள்ளப்படும் வன்னியர்குழு, மாகன் என்ற சிங்கள அரசன் காலத்தில் [1215-1255] அவன் பிரதேசத்திலும் வன்னிகளை அமை த்து அங்கும் தலைமை பெற்றிருந்ததாகத் தெரிகிறது. [5] யாழ்ப்பாணத்தில் தமிழரசர் ஆட்சி செய்த பதின்மூன் றாம் நூற்றாண்டு இறுதி தொடக்கம் யாழ்ப்பாணத்திலும் பல வன்னி நாடுகள் இருந்தன. [6] திருக்கோணமலை, கட்டுக்குளம் ஆகிய கிழக்குப் பகுதிகளிலும், புத்த ளத்திலும் வன்னிமைகள் அமைந்திருந்தன. [7] யாழ்ப் பாணக்குடாநாட்டோடு வன்னிநாடு இணைந்திருந்த காலத்தில் அது மன்னாரிலிருந்து திருகோணமலை வரை பரந்திருந்ததாகவும் கூறப்படுகிறது. [8] [மேற்கே கற்பிட்டியிலிருந்து செட்டிகுளம், மாதோட் டம் முதலான இடங்களை அடக்கி, கிழக்கிலே திரு கோணமலைவரை வன்னி பரந்து காணப்படுகிறது.[9]

பெரும்பாலும் காடடர்ந்த பிரதேசத்தையே உள்ள

ஈழத்தமிழரின் அரசியல் ரீதியிலான எதிர்ப்புக்கள்

ஒருநாட்டின் தலைவன் என்பவன், அந்த நாட்டின் எல்லா இனமக்களதும் நன்மைகளை மனதிற் கொண்டு அவற்றிற்கான திட்டங்களை வகுத்து நிறைவேற்றவும் தியாகங்கள் புரியவும் தயங்கான். ஆனால் அரசியல்வாதியோ தனது நலங்களை மனத் திற்கொண்டு அவை நிறைவேறுவதற்கான வழிவகை களை ஆராய்ந்து நிறைவேற்றவே முனைவான். இவ்வாறு நிறைவேற்றுகையில் இனங்களிடையே முரண்பாடுகளையும் கலகங்களையும் உண்டாக்கவும் அவன் தயங்கமாட்டான். குயுக்தியானவையும் சூழ்ச்சி நிறைந்தவையுமான கருத்துக்களைத் தனது நாவன்மையாலும், எழுத்துவன்மையாலும் மக்களி டையே பரப்பித் தனது பதவியை என்றும் நிலையா கப் பாதுகாப்பதே அவனது குறிக்கோளாய் விளங் கும். துரதிருஷ்ட வசமாக ஈழத்திலே நாட்டுத் தலை வர்களுக்கு [Statesman] இடம் இல்லாது, அவ்விட -த்தை அரசியல்வாதிகளே [Politicians] நிரப்பிக் கொண்டனர். இதனால் தேசியம் என்ற பேரில் பேரின

'சங்கிலி' முதல் 'பிரபாகரன்' வரை

டக்கிய வன்னிநாட்டுத் தலைவர்கள் சங்கிலி செகரா சசேகரனின் வீழ்ச்சிக்குப் பின்னர் அந்நியரான ஒல்லாந்தரின் ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி, நாடும் மானமும் சுதந்திரமும் காத்திடும் பணி யிலே ஈடுபட்டதாகத் தெரிகின்றது. இம்மாவீரர்களிலே கைலாயவன்னியன் [17ஆம் நூற்றாண்டு] , பண்டார வன்னியன்[18ஆம் நூற்றாண்டு] ஆகியோர் ஈடு இணை அற்றவர்கள்.

மட்டக்களப்பு, ஈழத்தமிழகத்தின் கீழ்பால் அமைந்த தமிழர் வாழ்பிரதேசம். இதன் வரலாற்றுப் பழைமையும் பலவகையான கற்பனைகளால் திரிபடைந்து காணப் படுவதால் இங்கு தோன்றிய மாவீரர் பற்றிய செய்திகள் கிடைக்கவில்லை. யாழ்ப்பாண வரலாற்றின் மங்கலான செய்திகள் சிலவற்றையாவது 'யாழ்ப்பாண வைபவ மாலை' மூலம் அறிவதுபோல, மட்டக்களப்பு வரலாற்றி னைச் சிறிதளவு அறிய 'மட்டக்களப்பு மான்மியம்' என்ற நூல் உதவலாம். [10] எனினும் அது போதியதன்று.

சுதந்திர உதயமும் ஈழத்தமிழர் நிலையும்

1948 பெப்ரவரி 4ஆந் திகதி இலங்கை ஆங்கிலேயரி டமிருந்து விடுதலை பெற்றது. 'மக்களால் மக்களுக்கு மக்களின் ஆட்சி' என்ற குறிக்கோள் கொண்ட சனநா யக ஆட்சி மலர்ந்தது என இலங்கையர் மகிழ்ந்தபொ ழுது, அந்தமகிழ்ச்சியிலே ஈழத்தமிழரும் பங்குகொண் டனர். ஆனால் 'சனநாயகம் என்பது, பெரும்பான்மை மக்கள் தமிழ்த் தேசிய இனத்தவரை அடக்கி ஒடுக்கி ஆளுவதே' என்று அதற்குப் புதியதொரு வியாக்கியா னம் தந்து பேரினவாதிகள் தலைவிரித்தாடித் தமிழர் களை நசிக்க முற்பட்ட பொழுதுதான் தமிழ் ஈழத்தவர் தமக்கு நேரவிருக்கும் ஆபத்தை உணரமுடிந்தது. தேசி யம் என்ற பெயரால், பௌத்த சோஷலிச சனநாயக அரசுப் பிரகடனம் சிங்களமொழியை ஆட்சிமொழி யாக்கல், பொருளாதாரப் புறக்கணிப்பு, மலையகத் தமி ழரின் பிரசா உரிமைப்பறிப்பு, கல்வியில் தரப்படுத் தல், விகிதாசார உத்தியோக நியமனம், தமிழ் மண் ணிலே சிங்களக் குடியேற்றம் என்று இனவெறி நச்ச ரவு தனது கொடிய நாக்கினை வெளிப்படுத்திச் சிறு பான்மையினரைச் சிறப்பாகத் தமிழரைப் பரிநாசம் செய்ய முற்பட்டது.

வாதப் பேயே உருக்கொடுத்து விடப்பட்டது. அதன் கோர தாண்டவத்தினைத் தமிழ் அரசியல்வாதிகள் உணர்ந்துகொண்டாலும் அதன் அவ்வப்போதைய 'தளுக்கு மினுக்கு'களில் மயங்குவதும் தெளிவதும், தெளிந்த பின்னும் சரியான முறையில் நடவடிக்கை எடுக்காமையுமாகிய குறைபாடுகளால் ஈழத்தமிழி னத்திற்கு எவ்வித விடிவும் காணமுடியவில்லை. மேடைப் பேச்சுக்கள், பாராளுமன்ற விவாதங்கள், பத்திரிகைப் பிரசாரங்கள், சாத்வீகப் போராட்டங்கள், 'ஸ்ரீ' அழிப்புக்கள், மாநாடுகள், தீர்மானங்கள், ஒப்பந் தங்கள் அமைச்சரவையில் இடம்பெற்று ஒத்துப் போய்க் கருமத்தை முடிக்கும் முயற்சிகள் என்று இவர்கள் கையாண்ட தந்திரங்களெல்லாம் பேரினவா தப் பேயின் முன்பு செயலிழந்து போயின. 'சமஷ்டி ஆட்சி அல்லது பிரிந்துபோதல்' என்ற முடிவும் நிறை வேறாது தொடக்க நிலையிலேயே தேங்கி நின்றது. வேறுவகையில் சொல்வதானால் இவர்கள் சிங்களப் பேரினவாதிகளின் ஏமாற்று வித்தைக்குப் பலியாயி னர் என்றே சொல்லவேண்டும். இலங்கையிலே ஈழத் தமிழினம் எதிர்நோக்கவிருக்கும் அவலங்களைத் தீர்க்க தூரிசனத்துடன் உணர்ந்து, அவற்றைப் போக்கத் திரிகரணசுத்தியோடு பாடுபட்ட தந்தைசெல்வா கூட நம்பிக்கை இழந்து, 'தமிழரை இனிக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும்'என்று கூற நேர்ந்தது.

ஆனால், தமிழ் இளைஞர்கள் தமது எதிர்காலத் தைக் கடவுளின் கைகளிலே விட்டுவிட்டுச் சும்மா இருக்கத் தயாராயில்லை, 'மயிலே மயிலே இறகு போடு' என்று வேண்டுவதால் மயில் இறகுகிடைத்து விடாது என்று அவர்கள் அறிந்திருக்கிறார்கள். எனவே ஆயுதம் ஏந்திப் போராடியே இழந்த உரிமைகளைப் பெறலாம் என்ற உண்மையை உணர்ந்துகொண்டு அந்த வழியிலே துணிந்து குதித்தனர்.

[தொடரும்]

அடிக்குறிப்புக்கள்:

14–9 ஈழத்து வன்னிமைகள்– கலாநிதி சி. பத்மநாதன் வன்னியர்: பக் 53–54

10. மட்டக்களப்பு மான்மியம்-பதிப்பாசிரியர், வித்துவான் F.X.C. நடராசா

க. சொக்கலிங்கம் (சொக்கன்)

எத்தனையோ வகைத் தொப்பிகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இது இன்னொரு வகை. பிரித்தானிய வடிவமைப்பாளர் பிலிப் டிரோஜி கடந்த வாரம் பாரிசில் நடைபெற்ற 'மொடேல்' போட்டியில் அறிமுகப்படுத்திய தொப்பி தான் இது.

பலதும் பத்தும்

இன்ரர்நெட் தம்பதிகள்

இணையத்தளம் இள வயதினரைத்தான் சேர்த்து வைக்கிறது என்றில்லை. முதியவர்களைக்கூட இணைத்து வைக்கின்றது. அண்மையில் கேரளாவில் இரு முதியவர்கள் இணையத்தளம் மூலம் ஜோடி சேர்ந்துள்ளனர். தனது கணவரை இழந்து வாழ்ந்து வந்த 62 வயது பெண் ஒருவர் தனக்கு 75 வயதிற்குள் மணமகன் தேவை என்று இணையத்தளத்தில் விளம்பரம் கொடுத்திருந்தார்.

இவரது விளம்பரத்தை பார்த்து உலக நாடுகள் எங்கும் இருந்து சுமார் 74 பேர் வரை போட்டிபோட்டுக்கொண்டு விண்ணப்பித்தி ருந்தனர். பலர் இரகசியமாகத் திருமணத்தை வைக்கவேண்டும் எனக் கோரிக்கையும் விடுத்திருந்தனர். ஆனால் மணமகளோ ஊரறியத் தன்னைக் கைப்பிடிப்பவருக்கே மனைவியாக வர சம் மதிப்பேன் எனத் தெரிவித்துவிட்டார்.

இந்நிலையில் பலர் தமது விண்ணப்பங்களை மீளப்பெற்றுக் கொண்டனர், சிலரது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ன. இறுதி யாக இந்தியாவின் எர்ணாகுளம் என்ற இடத்தைச் சேர்ந்த 72 வயது முதியவர் ஒருவர் தான் பகிரங்கமாகத் திருமணம் செய்துகொள்ள சம்மதித்ததையடுத்து, திருவனந்தபுரத்தில் உள்ள தேவாலயம் ஒன்றில் இவர்களது திருமணம் கடந்த 8ம் திகதி பலர் முன்னிலை யில் பகிரங்கமாக நடந்துள்ளது..

★ ★ ★

பறவைகளும் ஆடை கட்டினால்....!

இங்கே நீங்கள் காண்பது தென்துருவங்களில்காணப்படும் பென்குவின் பறவைகளை. என்னடா இவை கூட குளிருக்கு கம்பளி ஆடை அணிந்துள்ளனவா என்று நினைத்துவிடாதீர்கள் காரணம் அதுவல்ல... கடல் மீது மனிதன் கொட்டிய எண்ணைகள் இந்தப் பறவைகளை அதிகமாகப் பாதித்துள்ளன. இதன் இறக்கைகளில் எண்ணைப்படிவுகள் படிந்து வருகின்றன. இதனால் இவ் இனம் அழிந்துபோகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதனைத் தடுப்பதற்காகவே உருகுவே நாட்டின் கடற்கரையோரம் ஒதுங்கிய பென்குவின் பறவைகள் பிடிக்கப்பட்டு அவற்றுக்கு கம்பளி ஆடைகள் அணிந்து விடப்படுகின்றன

பல்கலைக்கழகம் எடுத்திருக்கும் முடிவுக்கு சார்பாக யாழ். சமூகம் அணிதிரள வேண்டும்

– யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்.பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீட இறுதி வருட மாணவனும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் செயலாளருமாகிய திவ்வியன் கைது செய்யப்பட்டதையடுத்து எழுந்த மாணவர்களின் போராட்டத்தினையடுத்து சிறீலங்கா அரச இராணுவம் யாழ்.பல்கலைக்கழகத்தினை மூடியுள்ளது. இந்நிலையில் இது தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை கடந்த 10ம் திகதி வெளியிட்டுள்ளது. அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீட இறுதிவருட மாணவனும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் செயலாளருமாகிய கிருஷ்ணசாமி திவ்வியன் கடந்த 2ம் திகதி திட்டமிட்டுக் கைது செய்யப்பட்டுத் தொடர்ந்தும் காங்கேசன்துறைத் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். ஓர் அப்பாவி மாணவன், மாணவர் சமூகத்திற்காகவும் எமது நாட்டில் துன்பப்படும் மக்களுக்குச் சார்பாகவும் ஜனநாயக ரீதியில் பல்கலைக்கழகத்தில் இருந்து செயற்பட்டு அதற்காக இன்று இராணுவத்தின் இரும்புப் பிடிக்குள் சிக்கித் தவிக்கின்றான். பேரினவாதிகளால் வித்திட்டு வளர்க்கப்பட்டு, இன்று பூதாகாரம் எடுத்து நிற்கின்ற போரினால் திட்டமிட்ட முறையில் தமிழ் மக்கள் அழிக்கப்படும் பொழுது, சின்னாபின்னப் படுத்தப்படும் பொழுது அதனைக் கண்டு மௌனமாக சுய வாழ்வுடன் முடங்கிப் போகும் தன்மான உணர்வு இல்லாத மாணவர்கள் அல்லர் நாம். இத்தகைய மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும், தன்மானமும் தனித்துவமும்மிக்க ஓர் இனத்தினைப் பூண்டோடு சாய்க்க மேற்கொள்ளப்பட்டு வருகின்ற முயற்சிகளுக்கு எதிராகவும் தமிழ் மக்கள் சாத்வீகமான முறையில் போராடி வந்திருக்கின்றனர். இவ்வாறாக மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்க எண்ணுகின்ற அனைவரும் புலிக்காயம் பூசப்பட்டு, கைது செய்யப்பட்டு இருக்கின்றார்கள், சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்கள், படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள், அத்தோடு இன்னும் பலர் இறைகளில் இரத்தக்கண்ணீர் வடித்து வருகின்றார்கள். இத்தகைய கசப்பான அனுபவங்கள் எமது கடந்த காலத்தில் அதிகமாகக் காணப்பட்டிருந்தாலும், பல்கலைக்கழக சமூகம் இன்று எடுத்திருக்கின்ற மனித உரிமை மீறல்களுக்கு எதிரான நிலைப்பாட்டிற்குக் காரணம் பற்றி இந்தச் சந்தர்ப்பத்தில் எமது அன்பிற்குரிய மக்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றோம்.

குடாநாடு அரச படைகளின் கட்டுப்பாட்டில் இல்லாத காலம், அரசின் கொடிய பொருளாதாரத் தடைகள் மூலமும் இரக்கமற்ற யுத்த நடவடிக்கைகளாலும் தமிழ்மக்கள் சீரழிந்த ஒரு வாழ்வினைத் தமது நாளாந்தப் பொழுதுகளாகச் சுமந்து நின்ற அந்தகாலம். ஆனால் எமது உயிருக்கும் தன்மானத்திற்கும் எமது பெண் உறவுகளின் கௌரவத்திற்கும் சுதந்திரத்திற்கும் குறைவில்லாத அந்தக் காலம். சுருக்கமாகக் கூறின் வறுமையிலும் செம்மையாக வாழ்ந்த அந்தக் காலம். இக் காலத்தில்தான் அரசின் ஆக்கிரமிப்புப் பார்வை குடாநாட்டின் மீது திரும்பியது. அரசின் இயல்பான அரக்கத்தனத்தால் புண்பட்டுப்போயிருந்த மக்களுக்கு மேல் மீண்டுமொரு பேரிடியாக குடாநாடு மீதான ஆக்கிரமிப்பு யுத்தம் கட்டவிழ்த்து விடப்பட்டது. நாட்டில் மக்கள் ஒரு நேரம் உண்ண உணவின்றித் தவித்திருந்தபோது சிறீலங்கா அரசு பல ஆயிரம் கோடி ரூபா செலவில் மக்களின் வாழ்விடங்கள் மீது குண்டுமழை பொழிந்து யுத்தத்தை முன்னெடுத்தது. ஆனால் தமிழ் மக்களுக்கு நிம்மதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்கான யுத்தம் என்ற போர்வையில் பெரும் அரக்கத்தனம் யாழ். மண்ணில் அரங்கேற்றப்பட்டது. யுத்த நடவடிக்கைகளினால் அநாதைகளாகப் புலம்பெயர்த்தப்பட்ட மக்கள், அரசின் பசப்பு வார்த்தைகளுக்கு நம்பிக் கவரப்பட்டு பகை வாழும் கூட்டில் மீண்டும் குடியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எம்மையே இதுவரை காலமும் கொடூரப்படுத்திய சிறீலங்கா அரசின் கூட்டுப்பாட்டில் வாழ வேண்டிய சூழ்நிலைக்கு மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். ஒருகாரார் யாழில் குடியேறிய பின்னர் தெருக்களிலும் திண்ணைகளிலும், போக்கிலும் வரவிலுமாக 600க்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகளின் அப்பாவி உயிர்கள் துடிக்கத்துடிக்க சித்திரவதை செய்யப்பட்டு, உயிருடனும் உயிரின்றியும் செம்மணிப் புதைகுழி எங்கும் நிரப்பப்பட்டன. ஏதுமறியாத அப்பாவி இளம் பெண்கள் ஆயுத மேந்திய காமப் பேய்களால் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டுக் கூறுபோடப்பட்டனர். அன்று திருசாந்தி குமாரசாமியில் தொடங்கிய வல்லுறவு, இன்று அல்லாரையில் நடந்தேறிய கொடூரம் வரை தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. வடபுல வேறுபாடு இன்றிக் கைது செய்யப்பட்டபின் கொடூரப்படுத்தப்பட்டு காற்றோடு காற்றாகிவிட்ட சோகக் கதைகள் பல ஆயிரம்.

தற்போது கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவன் திவ்வியன், படையினராலும் சிறீலங்கா அரசினாலும் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கைதுகள், கொலைகள், சித்திரவதைகள், தாக்குதல்கள், பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் போன்றவற்றை அஞ்சாது அப்பட்டமாக வெளியுலகிற்குத் தெரியப்படுத்துகின்ற பல்கலைக் கழகத்தின் பணியிலேயே முக்கிய பங்கு வகித்தவர். பளைப் பகுதியிலிருந்து மக்களை மீட்டெடுக்கும் மாணவர் போராட்டத்திலும், தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்து அரசினால் சுட்டுக்கொல்லப்பட்ட குமார் பொன்னம்பலத்தின் படுகொலைக்கு எதிரான செயற்பாட்டிலும், பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலைக்கு எதிரான செயற்பாடுகளிலும், யாழ். இந்துக் கல்லூரி மாணவன் சஞ்சீவனின் படுகொலைக்கு எதிராகவும், பிந்துனுவெவ முகாமில் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டமைக்கு எதிராகவும் பல்கலைக்கழகம் மேற்கொண்ட எதிர்ப்புச் செயற்பாடுகளில் மாணவர் ஒன்றியத்தின் சார்பாக முன்நின்று செயற்பட்டவர். திவ்வியன் எமது மக்களின் நலனுக்காகக் குரல் கொடுத்து வந்த காலப்பகுதியில் அதிருப்தியும் கடும் விசனமும் அடைந்த அரச படையினர் பல தடவைகள் அவருக்கு அச்சுறுத்தல் விடுத்திருந்ததுடன் கொலை செய்யவும் முயற்சித்திருந்தனர். தனது சொந்த வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த சமயம் இரண்டு தடவைகள் இராணுவத்தின் பிஸ்டல் குழுவினரால் படுகொலை செய்ய எத்தனிக்கப்பட்டதாகத் தனக்கு நம்பிக்கையான பத்திரிகை நிருபர்களுக்கு அவர் ஏற்கனவே தெரிவித்திருந்தார் எனத் தற்போது அறியமுடிகிறது.

திவ்வியனை கொலை செய்ய அல்லது கைது செய்ய நன்கு திட்டமிட்டுப் பின் தொடர்ந்து கொண்டிருந்த அரச படை ஆட்களால் இம் மாதம் 2ம் திகதி மாலை அவர் தனது உறவினர் வீட்டுக்குச் சென்றுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த சமயம் இணுவில் பருத்தியில் வைத்துக் கைது செய்யப்பட்டார். அவ்விடத்திலேயே மிகவும் மோசமாகத் தாக்கப்பட்டு பின் முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். தமது கைது நடவடிக்கையை நியாயப்படுத்துவதற்காகவும் எமது யாழ். பல்கலைக்கழக சமூகம் இது வரை மேற்கொண்ட நடவடிக்கைகளைக் கொச்சைப்படுத்துவதற்காகவும், அவர் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டதாகச் செய்தி ஊடகங்களுக்கு ஊடாகப் பிரசாரப்படுத்தி வருகின்றது படைத்தரப்பு.

நேற்றைய தினம் (09-07-2001) துணைவேந்தரும் எமது மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளும் யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவைச் சந்தித்தபோது திவ்வியனிடம் எந்த ஆயுதமும் இருக்கவில்லை எனவும் அவரிடமிருந்து எந்த ஆயுதங்களையும் தாம் கைப்பற்றவில்லை எனவும் அவர் தெரிவித்திருந்தார். ஆகவே உண்மையில் தாம் நினைத்த குற்றச்சாட்டை பிரச்சாரப்படுத்தி வருவதுடன் திவ்வியனை மோசமாகத் தாக்கிச் சித்திரவதைக்கு உட்படுத்தித் துப்பாக்கி முனையில் தாம் நினைத்த குற்றச் சாட்டை ஒப்புக்கொள்ள வைக்க அவர்கள் முற்பட்டுவருகின்றனர்.

> யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவைச் சந்தித்தபோது திவ்வியனிடம் எந்த ஆயுதமும் இருக்கவில்லை எனவும் அவரிடமிருந்து எந்த ஆயுதங்களையும் தாம் கைப்பற்றவில்லை எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

திவ்வியனிடமிருந்து வாகனம் ஒன்றும் போட்டோ பிரதி செய்யும் இயந்திரம், மின்பிறப்பாக்கி, கணனி, பிறின்ரர் போன்றவையும் கைப்பற்றப்பட்டதாகப் படைத்தரப்பு அறிவித்துள்ளது. உண்மையில் இந்த விடயத்தில் பரமேஸ்வராச்சந்திப் பகுதியில் முன்பு தொலைத்தொடர்பு நிலையம் நடத்தி வந்த அந்த நிறுவனத்தின் உரிமையாளர், சக தொழில் நிறுவன உரிமையாளருடன் ஏற்பட்ட வியாபாரப் போட்டியின் நிமித்தம் காரணமின்றிப் புலிகளுடன் தொடர்பு டையவர் எனப் பொய்க்குற்றம் சாட்டப்பட்ட பின்னர், இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு அவர் தனது வியாபார ஸ்தாபனத்தில் வைத்துப் பயன்படுத்திய வாகனம், கணனி, பிறின்ரர், போட்டோ பிரதி இயந்திரம், மின்பிறப்பாக்கி என்பனவே இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்டன. இதனை இராணுவம் திரிவுபடுத்தி திவ்வியனிடமிருந்து மீட்டதாகப் பிரச்சாரப்படுத்தி வருகின்றது. எமது மாணவப் பிரதிநிதிகள் காங்கேசன்துறைத் தடுப்பு முகாமில் சந்தித்தபோது திவ்வியன் தாக்கப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு தாம் அணிந்திருந்த ரீசேர்ட்டை கைகளை உயர்த்திக் கழற்ற முடியாதவராகக் காணப்பட்டதனை நேரில் அவதானித்துள்ளனர்.

தற்போது எம் மக்களின் துன்பத்திற்காகக் குரல் கொடுத்துச் சிறைவாசம் இருக்கும் சகமாணவரின் விடுதலைக்காக யாழ்.பல்கலைக்கழகம் கடந்த புதன்முதல் மாணவர்களால் மூடப்பட்டுள்ளது. இதனைக் கல்வி அமைச்சு இன்று மீண்டும் மூடி உள்ளது. பகிஸ்கரிப்புப் போராட்டத்தினைக் கைவிட்டால் பல்கலைக்கழகம் மீண்டும் இயங்க அனுமதிக்கப்படும் எனத் துணைவேந்தர் தெரிவித்துள்ளார். யாழ். குடாநாடு அரச கட்டுப்பாட்டின் கீழ் வந்த பின்னர், மனித உரிமைக்காகக் குரல் கொடுத்து ஓரளவிற்கேனும் மக்களின் நலன்களைப் பாதுகாத்து வருகின்ற அமைப்பு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம். அவ்வுரிமைக்காகக் குரல் கொடுத்து வந்த ஒரு மாணவனின் விடுதலைக்கான பகிஸ்கரிப்புப் போராட்டத்தில் நாம் பின்வாங்குவதென்பது நடை முறைச் சாத்தியமற்றது. ஏனெனில் குடாநாட்டில் வாழும் எம் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய மக்களின் வாழ்வு, இளைஞர்களின் உயிர்கள், பெண்களின் கௌரவம், ஒட்டு மொத்தமான தமிழ் மக்களின் இருப்பு என்பவற்றைக் கேள்விக்குறியாக்கும் ஓர் அநாதரவான நிலையை இப் போராட்டத்தைக் கைவிடுவதன் மூலம் ஏற்படுத்திக் கொள்ள நாம் விரும்பவில்லை. எனவே நாம் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழ விரும்பினால் பல்கலைக்கழகம் இன்று எடுத்திருக்கும் முடிவிற்குச் சார்பாக யாழ்ப்பாண சமூகம் அணிதிரள வேண்டும். பாடசாலைகளைத் தொடர்ச்சியாகப் பகிஸ்கரித்தும் அலுவலகங்களைப் பகிஸ்கரித்தும் எமது போராட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறு வேண்டுகின்றோம். தொலைபேசி பட்சத்தில் திவ்வியன் மட்டுமல்ல இன்னும் பல ஆயிரம் இளைஞர், யுவதிகள் கைதாகிப் படுகொலை செய்யப்படும் அவலநிலை உருவாகும். அந்நிலை உருவாகிய பின், 'பறிபோன உறவுகளின் உயிர்களைப் பற்றி, சீரழிந்து போன பெண்களின் கௌரவத்தைப் பற்றி சிந்திப்பது' கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் செய்வது போன்றதே. அன்பிற்குரிய தமிழ் மக்களே சிந்தியுங்கள்! தமிழ் மக்களிற்கான எமது அர்ப்பணிப்புத் தொடர வேண்டுமாயின் எம்மோடு அணி திரளுங்கள்.

யாழ். பல்கலைக்கழகம் மூடப்பட்டமை அரச வன்முறையின் உச்சக் கட்டம்

நியாயபூர்வ முடிவுகள் எட்டப்படாவிட்டால் கவலைக்குரிய முடிவுகள் எடுப்பது தவிர்க்க முடியாததாகிவிடும்

- வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி ஆசிரிய மாணவர்கள்

படையினரால் கைது செய்யப்பட்டுள்ள சக மாணவனை விடுவிக்கக் கோரி பல்கலைக் கழக சமூகம் நடத்துகின்ற அகிம்சைப் போராட்டம் முற்றிலும் நியாயமானது. இதற்கெதிராக பல்கலைக்கழகத்தை மூடி மாணவர் கல்வியைச் சீரழிப்பதும் அவர்களின் நியாயமான கோரிக்கைகளை முடக்குவதும் எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது.

மிக அமைதியான முறையில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் யாழ். மாணவன் திவ்வியனை விடுதலை செய்யக்கோரி குரல் கொடுத்த ஒரே காரணத்திற்காக அப்பல்கலைக்கழகம் இழுத்து மூடப்பட்டமையானது அரசின் வன்முறையையே காட்டுகின்றது. காலத்துக்கு காலம் தமிழ் மக்களின் உணர்வுகளை புலப்படுத்தி வந்ததில் யாழ். பல்கலைக்கழகம் தலையாய இடத்தை வகித்து வந்தது. அந்த வகையில் இன்றைய தமிழ் மக்களின் அவசியத் தேவையாகிய மரபு வழித் தாயகம், சுயநிர்ணய உரிமை என்பவற்றை வலியுறுத்தி பல்வேறு அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் பொங்கு தமிழ் நிகழ்வை ஆரம்பித்தது. இதனால் ஆத்திரம் அடைந்த அரச இயந்திரம் அதற்கு பழி வாங்கும் நடவடிக்கையாகவும் உரிமைகளுக்காக குரல் கொடுக்க முனைவோருக்கு ஓர் எச்சரிக்கையாகவும் முன்னாள் யாழ். பல்கலைக்கழக மாணவர்களுடைய செயலாளரும், விஞ்ஞான பீட மாணவனுமாகிய திவ்வியனை புலி முத்திரை குத்தி கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார். தனது பதவிக் காலத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவுதுடன் சமூகப்பிரச்சினைகளை யாழ்ப்பாண மக்களுக்கும் உள்நாட்டு, வெளிநாட்டு சமூகத் தொண்டர் நிறுவனங்களுக்கும் வெளிக் கொண்டு வருவதில் நன்கு உழைத்ததன் மூலம், அனைவருக்கும் அவர் நன்கு



அறிமுகமானவர். இவரது விடுதலை கோரி பல்கலைக்கழக சமூகம் நடத்துகின்ற அகிம்சைப் போராட்டமானது முற்றிலும் நியாயமானது. பல்கலைக்கழகத்தை மூடி நியாயமான கோரிக்கைகளை முடக்குவதும் மாணவர்களின் கல்வியைச் சீரழிப்பதும் எந்தவகையிலும் நியாயப்படுத்த முடியாதது என்பதுடன் பாரிய பின்விளைவுகளையும் ஏற்படுத்த வல்லது. இந்த அநியாயத்தைக் கண்டித்து கல்விச் சமூகம், தொழிலாளர் சமூகம், அரசியலாளர்கள் உட்பட அனைத்துத் தரப்பினரும் ஒருசேரக் கிளர்ந்தெழுந்து திவ்வியனை விடுவிக்கவும், யாழ் பல்கலைக்கழகத்தை உடனடியாக மீளத் திறக்கவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் அரச இராணுவத்தினருக்கு மனிதாபிமான உதவிகள் அளித்த இந்திய அரசும், ஏனைய உலக அரசுகளும் இப்போதைய தமிழ் சமுதாயத்தின் நிலைபற்றி குறித்து மௌனம் சாதிப்பது எமக்கு மிகுந்த வேதனையை அளிப்பதாக உள்ளது. எது எவ்வாறிருப்பினும் பல்கலைக்கழக பிரச்சினைகளுக்கு நியாயபூர்வ முடிவுகள் எட்டப்படாதிடத்து வடகிழக்கு கல்விச் சமூகத்தால் கவலைக்குரிய சில முடிவுகள் எடுக்கப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடலாம்.

முதற்றடவையாக போர்ச்சூழ்நிலை தவிர்ந்த வேறு ஒரு காரணத்திற்காக பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளது

- யாழ். அரச மருத்துவ அலுவலர் சங்கம்

யாழ்.பல்கலைக்கழகம் மூடப்பட்டது குறித்து அரச மருத்துவ அலுவலர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, உயர்கல்வி அமைச்சர் அவர்களின் பணிப்பின் பேரில் யாழ். பல்கலைக் கழகம் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ள செய்தி அறிந்து எமது உறுப்பினர்கள் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளனர். யாழ்.பல்கலைக்கழகத்தின் வரலாற்றில் முதற்றடவையாக போர்ச்சூழ் நிலை தவிர்ந்த வேறு ஒரு காரணத்திற்காக பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளமை எமக்கு விசனமளிக்கின்றது. ஒரு ஜனநாயக நாட்டில் தமது உரிமைகளுக்காகவும் அபிலாசைகளுக்காகவும் தமக்கு எதிரான ஒடுக்கு முறைகள், பாரபட்சங்கள், மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும் சட்டத்திற்குட்பட்ட வன்முறையற்ற வழியில் செயற்பட மக்கள் அனைவருக்கும் உள்ள உரிமையை யாரும் மறுக்க முடியாது. இவ்வகையில் தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான அடக்கு முறைகள், பாரபட்சங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவற்றுக்கு எதிராகவும் அவர்களது உரிமைகள் அபிலாசைகளுக்காகவும் வேறு எவரும் குரல் கொடுக்காத நிலையில் கடந்த காலங்களில் யாழ். பல்கலைக்கழக சமூகம் ஜனநாயக வழியில் குரல் கொடுத்ததன் மூலம் ஒரு பல்கலைக்கழகம் என்ற வகையில் தனக்குரிய சமூகப்பொறுப்பை சரிவர ஆற்றி வருவதை யாரும் வரவேற்காமல் இருக்க முடியாது.

இந்நிலையில், கடந்த ஆண்டிற்கான விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் கிருஷ்ணசாமி திவ்வியன் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம், யாழ் மக்கள் அனைவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. இது தொடர்பாக மாணவர் மத்தியில் இயல்பாகவே எழுந்த கரிசனையையும் அதன் பலனான எதிர்ப்புணர்வையும் கருத்திலெடுக்காது மேலும் நிலைமையைச் சிக்கலாக்கும் வகையில் நிகழ்வுகள் தொடர்வது வேதனையளிக்கிறது. யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தமிழ்பேசும் மக்களின் நலன்களுக்காகக் குரல் கொடுத்தபோதெல்லாம் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறியவுடன் முன்னணியில் நின்று செயலாற்றுபவர்கள் பழிவாங்கப்படுவார்கள் என மிரட்டல்கள் விடுக்கப்பட்டதாக வந்த செய்திகள் உண்மை தானோ என்ற சந்தேகம் இப்போது இயல்பாகவே எழுகின்றது. திவ்வியன் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ள நிலையில், எந்தவித மருத்துவ ஆதாரமும் இன்றி இச்செய்தியை மறுப்பது எமது பல்கலைக்கழக சமூகத்தைக் காட்டிக் கொடுப்பதற்கு ஒப்பானசெயலாகும். மாணவர்களின் நியாயமான கோரிக்கைகளை நேர்மையாக சந்திப்பதற்குப் பதிலாக பல்கலைக்கழகத்தையே மூடிவிடுவதாக எடுக்கப்பட்ட முடிவை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். காலங்காலமாகத் தமிழ் சமூகத்தின் கல்வி வளத்தைச் சீர்குலைப்பதற்காக திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகளில் ஒரு பகுதியாகவும் தமிழ்மீடியா மக்கள் தமது நலன் சார்ந்த கருத்துக்களை வெளியிடுவதற்கான ஜனநாயக வழிகளை முற்றாக அடைத்துவிடும் கெயற்பாட்டின் ஓர் அங்கமாகவுமே பல்கலைக்கழகத்தை மூடிவிடும் இம்முடிவை கருதவேண்டியுள்ளது. உருவாகியுள்ள இந்நிலை தொடர்பாக எமது சங்கம் பல்கலைக்கழக மாணவரின் நியாயமான கோரிக்கைக்கு ஆதரவளிப்பதுடன் பின்வரும் கோரிக்கைகளை உரியவர்களிடம் வலியுறுத்துகின்றது,

1. கைது செய்யப்பட்டுள்ள திவ்வியனை உடனடியாக விடுத்துவிசாரணைக்கு உட்படுத்தி அவரின் உடல்நிலை பற்றிய அறிக்கை வெளியிடப்பட வேண்டும்.

2. திவ்வியனை உடனடியாக நீதிமன்றில் ஒப்புவித்து வழக்குத் தாக்கல் செய்தோ அல்லது அவரை உடனடியாக விடுதலை செய்தோ மாணவர்களதும் யாழ். மக்களதும் கரிசனையை அகற்ற வேண்டும்.

3. மூடப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழகம் உடனடியாகத் திறக்கப்பட்டு அதன் பணிகள் யாவும் வழமைக்குக் கொண்டு வரப்படவேண்டும்.

4. பழிவாங்கப்படுவீர்கள் என மாணவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதா என்பது பற்றிய உண்மை நிலையை தெளிவுபடுத்தி மாணவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

தமிழ் மாணவர்கள் மீதான வன்முறைகளுக்கெதிராக அணிதிரள்வோம்

- கிழக்கு பல்கலைக்கழக மாணவர் சமூகம் -

தமிழ் மாணவர் சமூகத்தின் மீது, தொடுக்கப்படும் வன்முறைகளிற்கும், தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சியை முளையிலேயே கிள்ளி எறியும் அடாவடித்தனங்களிற்கும் எதிராக தமிழ் மாணவர்கள் ஒன்றுபட்டு அணிதிரள வேண்டும்.

இலங்கை அரசினால் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்படுவரும் இன அழிப்பு வியூகங்களின் ஒரு வடிவமாக தமிழ் மாணவர் சமூகத்தின் மீது இராணுவத்தினரையும், அவர்களுக்கு துணைபோகும் ஆயுதக் குழுக்களையும் கட்டவிழ்த்து விடப்படும் அரச பயங்கரவாதப் போக்குகள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. இவை எமது நாடிநரம்புகளாக விளங்கிக்கொண்டிருக்கும் கல்விச்சமூகத்தை நசுக்கி நீண்டகால நோக்கில் எம் இனத்தை இயிர்த்துடிப்பற்ற ஒரு சமூகமாக மாற்றி விடும் அபாயகரமானதாக எம் மக்களின் அரசியல் சமூகப் போக்கிலேயே பாரிய மாற்றத்தை உண்டுபண்ணி, இன்று சர்வதேச அரங்கிலே தமிழ் சமூகத்தின் ஒட்டுமொத்த எழுச்சியாக வெளிப்படுத்தப் பட்டுக் கொண்டிருக்கும் பொங்குதமிழ் எழுச்சியின் ஊற்றுத்தளம் யாழ்ப்பாண பல்கலைக்கழக, கிழக்கு பல்கலைக்கழக சமூகங்கள் என்பது மறுக்கப்பட முடியாத ஒன்றாகும். அந்த வகையில் இச்சாத்வீக தீயை உண்டாக்கிய தமிழ் மாணவர் சமூகத்தின் மீதான 'அரச பயங்கரவாதத்தின் மிலேச்சத்தனமான பாய்ச்சல்கள்', தமிழ் மக்களின் கல்விச்சமூகத்தை சீரழித்து அடக்கி ஒடுக்க, எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் என்பது தெளிவாக தெரிகிறது. அகிம்சை வழியில் முன்னெடுக்கப்பட்ட பொங்குதமிழ் எழுச்சியின் பின்னணியில் விடுதலைப் புலிகளின் தூண்டுதல் உண்டு என்று எம் மாணவர் சமூகத்தின் மீது புலிச்சாயம் பூசுவதற்கு அரச பயங்கரவாதம் முனைந்துள்ளமை

கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் 15 பேரின் பெயர்ப்பட்டியலோடு இராணுவப் புலனாய்வுப்பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு மிரட்டியமை 19.04.2001 அன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் அன்னை பூபதி நினைவுநாள் தொடர்பான ஹர்த்தாலுக்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களே அழைப்பு விடுத்ததாக உண்மைக்கு புறம்பான செய்தியை மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்திருந்தமை போன்ற சில சம்பவங்கள் வெகுஜன ஊடகங்கள் வாயிலாக பகிரங்கப்படுத்தப் பட்டிருந்தன.

மேற்படி சம்பவங்களின் பின்னணியில், தற்போது பாடசாலை மாணவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் மீதான கைதுகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன. 16.6.2001 அன்று கிழக்கு பல்கலைக்கழக முதலாம் வருட கலைப்பிரிவு மாணவன் செல்வராசா சுந்தரலிங்கம் அரச படைகளினால் காரணமின்றி கைது செய்யப்பட்டு 5நாள்கள் வரை தடுத்துவைக்கப்பட்டிருந்ததும், 02.07.2001 அன்று யாழ்.பல்கலைக்கழக இறுதிவருட விஞ்ஞான பீட மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியன் உட்பட 3 மாணவர்கள் கைது செய்யப்பட்டமையும் தமிழ் மாணவர்கள் மீதான அரச வன்முறையின் மிகமோசமான உச்சக்கட்டத்தை கோடிட்டுக்காட்டுகிறது. இன்னும் எத்தனை தமிழ் மாணவர்கள் காரணமின்றி கைது செய்யப்பட்டு கல்விச்சமூகத்திலிருந்து நீக்கப்படப் போகிறார்கள். இன்னும் எத்தனை கிருசாந்தி போன்ற தமிழ் மாணவிகள் கதறகதற கதறப்பட போகிறார்கள்? இன்னும் எத்தனை பாடசாலைகள் இராணுவ முகாம்களாக வடிவெடுக்கப்போகின்றன? இன்னும் எத்தனை பாடசாலைகள் விமானகுண்டு வீச்சுக்கு இரையாகப்போகின்றன? என்பதை சிந்தித்துப் பார்க்கின்றோம். இன்று நம்மூர்களின் வாழ்வியலில் குற்றுயிராகவேனும் எஞ்சி நிற்கின்ற கல்விச்சமூகத்தை நசுக்கி அடக்கி ஒடுக்கும் சிறீலங்கா அரச பயங்கரவாதத்தின் திட்டமிட்ட அடக்குமுறைகளையும் அடாவடித்தனங்களையும் மிக வன்மையாக கண்டிக்கிறோம். இந்த அரச பயங்கரவாத அடாவடித்தனங்களுக்கு எதிராக மாணவர்கள், தமிழ் அரசியல் கட்சிகள், தமிழர் நலன்காக்கும் அமைப்புக்கள் அனைத்தும் ஓரணியில் திரண்டு குரல் கொடுக்கவேண்டும்.

இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும்
செல்வன் இராகுலன், செல்வன் செ.நிமலன், செல்வன்
திவநாதன் பிர்ந்தன், செல்வி வேந்துஷா
வைகுந்தவாசன், செல்வி மோனிஷா யோகநாதன்
ஆகியோரை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென
குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற
சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

உங்கள் கைவண்ணம்

ஞானதாஸ் சுஜிதன்

இடம்: 93160 Noisy le Grand
வயது: 04 (14.07.1997)
பொழுதுபோக்கு: விளையாடுதல்
உறுப்பினர் எண்: F–133

ஞானித்தா ஞானதாஸ்

இடம்: 93160 Noisy le Grand
வயது: 07 (18.07.1994)
பாடசாலை: விளையாடுதல்
பொழுதுபோக்கு: படிப்பு - விளையாட்டு
உறுப்பினர் எண்: F–134



நாகராசா பிரசன்னா

இடம்: 93200 St-Denis
வயது: 11 (07.05.1990)
பொழுதுபோக்கு: புத்தகம் வாசித்தல், கணினி விளையாடுதல்
உறுப்பினர் எண்: F–135

கோடை விடுமுறை

விடுமுறை விடுமுறை கோடை விடுமுறை - நாயகன் நீண்ட நாளாய்க் காத்திருந்து வந்த விடுமுறை இனிர் மிகுந்த நாட்டிலே தேடும் விடுமுறை - நல்ல கடற்கரைகள் தேடிப்போக உதவும் விடுமுறை நல்ல உறவினரையும் நாடிப்போக உதவும் விடுமுறை சேர்ந்து ஒன்றாய்க் களிப்படைய உதவும் விடுமுறை இரண்டு மாதங்களும் ஓடி நாட்களாக மறையும் விடுமுறை.

தகவல் முற்றம்

ஆயுதச் செலவுகள்

இந்த உலகம் போருக்காக ஒரு வருடத்திற்கு 75,000 கோடி டொலர் செலவழிக்கின்றது. ஐநாடுகள் சபையின் ஒரு ஆண்டு வரவுசெலவுத் திட்டமே 100 கோடி டொலர்தான். முதல் உலகப் போரின்போது இந்த உலகம் ஆயுதங்களின் மீது செய்த செலவு 300 கோடி ஆகும். இந்த உலகின் போருக்கான அபாய ஆயுத உற்பத்தியில் சுமார் 5 இலட்சம் விஞ்ஞானிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இப்போது வருடத்திற்கு சராசரியாக ஒரு மாணவனுக்கு 3800 ரூபாவும் ஒரு போர் வீரனுக்கு 1,19,300 ரூபாவையும் இந்த உலகம் செய்கிறது.



கதை முற்றம்

ஏற்பது இகழ்ச்சி

நபிகள் நாயகத்திடம் வந்த இளைஞன் ஒருவன், 'சாப்பிட்டு இரண்டு நாட்கள் ஆகின்றன. ஏதேனும் பிச்சை போடுங்கள்' என்று வேண்டினான்.

உடல் நலத்தோடும் இளமையோடும் இருந்த அவனை அன்புடன் பார்த்தார்.

'உனக்கென சொந்தமாக ஏதேனும் பொருள்கள் இருக்கிறதா?' என்று கேட்டார் அவர்.

கிழிந்த போர்வை ஒன்றும் பாத்திரம் ஒன்றும் இருப்பதாகச் சொன்னான் அவன்.

அவற்றைக்கொண்டு வருமாறு சொன்னார். அவனும் அவற்றைக்கொண்டு வந்தான்.

அந்த இரண்டு பொருள்களையும் அங்கேயே ஏலம் விட்டார். இரண்டு பணம் கிடைத்தன.

அந்தப் பணத்தை இளைஞனிடம் கொடுத்த அவர், 'இதில் ஒரு பணத்தை உன் உணவுக்காக வைத்துக்கொள். இன்னொரு பணத்திற்கு ஒரு கோடரி வாங்கி வா' என்றார்.

அவனும் கோடரியுடன் மீண்டும் அங்கு வந்தான்.

அந்தக் கோடரியை வாங்கிய அவர் அதற்குத் தன் கையாலேயே பிடிபோட்டு அவனிடம் கொடுத்தார்.

'உழைப்பே உயர்வானது. காட்டிற்குச் சென்று விறகு வெட்டிப் பிழைத்துக்கொள்' என்று அவனை அனுப்பிவைத்தார்.

சில நாட்களுக்குப் பிறகு நபிகள் நாயகம் அவர்களிடம் வந்தான் அந்த இளைஞன்.

அவரை வணங்கிய அவன், 'இறை தூதரே! உங்களால் நான் நல்வாழ்வு வாழ்கிறேன். உழைப்பின் மேன்மையை உணர்ந்துகொண்டேன். இனி எப்பொழுதும் பிச்சை எடுக்க மாட்டேன்' என்றான்.

மகிழ்ந்த நபிகள் நாயகம் அவனை வாழ்த்தி அனுப்பினார்.

கவிதை முற்றம்

சந்திரன் சிந்துஜா

இடம்: 8280 Kreuzlingen-Swiss
வயது: 14 (06.01.1987)
பொழுதுபோக்கு: தாயகப்பாடல்கள் கேட்டல், சித்திரம் வரைதல்.
உறுப்பினர் எண்: F-132

கரும்புலிகள்...

தியாகத்தின் சிகரங்களே!
உயிர்ப்பூவை ஊதித்தள்ளிய
வீர வேங்கைகளே!
உங்களுக்குக் கண்ணீரல்ல
எங்களின் காணிக்கை.
விரைவில் உங்கள் காலடியில்
தமிழீழத்தை வைத்துக் கை
தொழுவோம்
சாவைத் தோள் மீது சுமந்த
சந்தன மேனிகளே!
உங்கள் நினைவைச் சுமந்து நடப்போம்
தலைவர் மாமாவின் வழியில் பயணம்
தொடரும்.
விரைவில் பகைவன் கதைகள் முடிய
எம்மினிய தமிழீழம் விரைவில்
கிடைக்கும்.

கண்டுபிடியுங்கள்

கடந்த வார விடை

கு	யி	ன்	மொ	ழி	
கு	மு	தி	னி		
கு	ற	ள	ன்	பி	
கோ	ம	க	ள்		
சி	ந்	தா	ம	ணி	
சி	வ	ந்	தி		
சி	ல	ம்	ப	ர	சி

பின்வரும் சதுரங்களில் உள்ள எழுத்துக்களின் துணைகொண்டு தூய தமிழ்ப் பெயர்களைக் கண்டு பிடியுங்கள். முடியாது விட்டால் விடை அடுத்தவாரம்.

வே		மு			ன்
வெ		ம			ன்
வெ		நி			ன்
வ				ன்	
மு				கு	
ம				ன்	
ம		வ			ன்

வினா-விடை முற்றம்

கடந்தவார விடைகள்:

1. உடலுக்கு வேண்டிய துணை ஆகாரங்களில் ஒன்று. இது உயிர்ச்சத்து A-B-C-D-E என ஐந்து வகைப்படும்.
2. 150.000 வரை எனக் கணக்கிடப்பட்டுள்ளது.
3. புவி ஈர்ப்புச் சக்தியினால்
4. முகமதியர்- கிறிஸ்தவர்
5. யூலியஸ் சீசர். கி.மு. 50 ல்
6. தாவர உணவில் கொழுப்புச் சத்து இல்லாமையால்.

இவ்வார வினாக்கள்

1. வியர்வை ஏன் உண்டாகிறது?
2. பிரமிட் சமாதிகளின் காலம் எது?
3. பறவைகளின் அலகுகள் பலவகையாக இருப்பதற்குக் காரணம்?
4. மயிர் கொட்டிப் புழுவுக்கு மயிரினால் என்ன பயன்?
5. மாடுகள் ஏன் அசைபோடுகின்றன?
6. அவுஸ்திரேலிய ஆதிக்குடிகள் பயன் படுத்தும் 'பூமறாங்' ஆயுதம் பற்றித் தெரியுமா?

அடுத்தவாரம் விடைகளை சரிபார்த்துக்கொள்ளவும்.

சிறு கதை

காதலுக்கா ராஜினாமா?

அலார மணிக்கூடு ஐந்து தடவை அடித்து ஓய்ந்து அரைமணி கழிந்திருக்குமே என்று மனம் கணக்கிட்டபோதும் படுக்கையைவிட்டு எழுந்திருக்க மனசில்லாமல் தவித்தான் மனோ. விடியலைக்கூற சேவல்கள் விடாமல் கூவிக்கொண்டிருந்தன. புள்ளினத்தில் சிலவகை புலரும் பொழுதுக்கான புதுராகத்தை இசைக்கத்தொடங்கியிருந்தன. அப்பா அமுதரின் அதிகாலை தும்மலும் ஆரம்பமானபின் அவனால் எப்படித் தூங்க முடியும்.

'பலநாட்களின் பின் அசந்து தூங்கியது இந்த இரவுதான்' மனதுள் முணுமுணுத்தான் மனோ. இரவு முழுவரும் சிலிர்த்துக்கொட்டிய மழையால் சீராகவே தூங்கி இருந்தவன், அம்மா சுப்ரபாதம் பாடமுன் எழும்ப வேண்டுமே என்ற எரிச்சலுடன் எழுந்து யன்னலைத் திறந்தான்.

முற்றத்து வேப்பமரத்தின் கொப்புக்களுக்கூடாய் தெரிந்த மழைமேகம், மெல்ல கறுப்புக் கலைந்து வெளுத்து சிரித்தது. இரவெல்லாம் சீறிச்சினந்து சிலிர்த்துப் பெய்த மழை ஓய்ந்தபோதும் முற்றத்து குறோட்டன்களையும் குண்டுமல்லிகையையும் தாண்டிய தண்ணீர் பீலி வெட்டிவிட்டதுபோல வேப்பின் வேர்களை அரித்தபடி தெருவை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. தெருவோரத் திண்ணையான பாலைமரத்தின்கீழே பட், பட்டென விழுந்த மழைமுத்துக்களை கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டவன் வாய் மெல்ல முனகியது. எல்லாம் நல்லாய்த்தானிருக்கு. ஆனால் யன்னல் வழியாய் வாற வேப்பம்பூவின் வாசம் மட்டும் எங்கை போச்சு? தேடினான். சித்திரை வெள்ளம் சிறுமாரி என்பார்கள்.

எவ்வளவு மெத்தச்சரி அத்தனை பூக்களையும் அடித்துக்கொண்டு போயிருந்த மழையை திட்டினான். காற்று, மழை, வெயில், கடல், மலை என்று எல்லாவற்றையும் இதம் தரும் இயற்கை அழகாக இறைவன் படைத்தபோதும் இவை சிலவேளைகளில் சீறிச்சினந்து அனர்த்தம் ஏற்படுத்துவதில் மனிதனை விடமட்டமாகப் போய்விடுகின்றன என இறைவனை கடிந்தபடி எழுந்து கதவைத் திறந்தான்.

பூவும் பொட்டும் பொலிய மகாலட்சுமிபோல் நின்ற அம்மாவைப் பார்த்ததும் அவன் மனதில் அந்தக் கேள்வி மீண்டும் மீண்டும் வந்தது. பெண்களுக்கு அழகு தருவது பூவும் பொட்டுமா? இல்லை நிறமும் குணமுமா? மனோ, மங்கையை பார்த்தநாள் முதலாய் இந்த கேள்விக்கு விடை தேடிக்கொண்டிருந்தான்.

மங்கை...மங்கை... இவள் வேறுயாருமல்ல மனோவுடன் வேலைசெய்யும் ஒரு சாதாரணப்பெண். இவன் மணிக்கூடு பிந்தினாலும் மனோகரன் பிழையாய் ஓடமாட்டானென சகபாடிகளால் புகழப்படும் கடமை, கண்ணியம் மிக்க காளை மனோகரன். மங்கையை முதன் முதலாய் பார்த்தபோது அவன் மனதில் இனம்புரியாத ஈர்ப்புவிசையொன்று மின்னல்போல தோன்றிமறைந்தது. அது காதலா? கண்டதும் காதல் கொள்ள வைக்கும் மாயமோகினியா? மங்கையென்றால் அதுவுமில்லை; அமைதி அடக்கமான பெண்.

மங்கையை முதன் முதலாகப் பார்த்தகோலம் இன்னும் மனோவின் மனதில் அழியாத கோலமாய் அடிக்கடி வந்துபோனது. ஆடி அசையும் அவள் அழகான கூந்தல். நேர்த்தியான பல்வரிசையில் சிந்தியும் சிந்தாமல் பளிச்சிடும் சிரிப்பு. நெற்றியில் கரும் சாந்தில் கணக்கான ஒருபுள்ளி. கட்டியிருந்த கரைபோட்ட மண்ணிற சேலையில் மான்புள்ளியாய் சிறுவட்டங்கள். மொத்தத்தில் அவள் அழகில் அவன் மயங்கியே போனான்.

மனோகரனின் அலுவலகத்தில் ஆண்களும் பெண்களுமாய் நாற்பதுக்குமேல் இருந்தாலும் எல்லோரும் அவனுக்கு பிடித்தவர்களல்ல. பிடித்தவர்கள், பிடிக்காதவர்கள் பட்டும் படாமல் பழகுபவர்கள் எனப் பல தரமாயிருக்க, மங்கை மட்டும் மனோவின் மனதில் எப்போதும் நிறைந்திருந்தாள்.

மனோ, மங்கை... இவர்கள் பெயர்களின் பொருத்தம்போலவே வேலையிலும் இருவரும் ஒரே பகுதியில் பொருந்தி வேலை செய்தனர். எப்போதும் அவர்கள் சேர்ந்திருந்ததாலோ என்னவோ மனோவின் மனதில் அவ்வப்போ சிறுசிறு சலனம் தலைகாட்டத் தவறியதில்லை. மனம் அலைபாய 'மங்கையிடம் அழகு இருக்கிறது. இளமை இருக்கிறது. காதலிக்கும் வயதில் இருக்கிறாள் இதைவிட வேறு எது வேண்டும்' என தன்னைத்தானே கேட்டுக்கொண்டான். ஆனால் மங்கையிடம் எதுவுமே கேட்டதில்லை. மங்கை தன்னோடு வேலை செய்வதே காலம் தனக்கு தந்த ஒரு வாய்ப்பு என எண்ணினான். மனோவின் மனம் ஒவ்வொரு பொழுதும் அவளுக்காக ஏங்க மெல்ல நெருக்கமாய் பழகத்துடித்தான். ஆனால் மங்கை சற்று விலகிப் போய்க்கொண்டிருந்தபோதே காற்றுடன் கலந்து வந்த செய்தி மனோவின் காதில் விழுந்தது.

மங்கை விதவை... மங்கை விதவையாம். நம்பமுடியாதபோதும் அதுவே உண்மை என்பதையறிந்ததும் மனோ துடித்தான் துவண்டான்.

'பெரியவர்கள் வாழ்த்துக்கூற அந்தணர் வேதமோத அருந்ததி சாட்சியாக அணிவிக்கப்பட்ட அவள் தாலி அவசரம் அவசரமாய் மறுநாளே அகற்றப்பட்டதாம். மணமாலை வாடிக்கருக முன் மங்கையின் மணவாழ்க்கை கருகிச் சாம்பலானதாம்.

மணஅணி கழற்றி மாற்றுக்கூறை அணியமுன் மணவாழ்வே முடிந்துபோனதாம். பாவம் மங்கை' இப்படிப் பேசிக்கொண்டவர்கள் வேறு யாருமல்ல மனோவின் நண்பர்கள்தான். மனோவுக்கு இவர்களின் பரிதாபப் பேச்சு புதுவேகம் கொடுக்க அப்படி என்ன நடந்ததென ஆராய்ந்தான்.

அப்பா, அம்மாவுக்கு கடைக்குட்டி. அண்ணன்மார் அக்காமார் தெரிவு செய்த அழகான மாப்பிள்ளை பரந்தாமன். அம்மி மிதிக்க வைத்த அழகுப் பெட்டகம் இந்த மங்கை. ஆரவாரம் அலங்காரமாகத் திருமணவிழா முடிந்து புகுந்த வீடு போனவன் திருமணம், சாந்தி முகூர்த்தம் எல்லாமே நிறைவெய்திய பெண்ணாக ஒருநாள் கழிந்து மறுநாள் விடிந்தது.

பரந்தாமன் வீட்டுக்குப் பக்கத்தில் படபடவென வெடிச்சத்தம். பயங்கரச் சத்தத்தோடு குண்டொன்று வெடித்தது. வேலிகளைப் பிய்த்துக்கொண்டு வேகமாய் ஓடிவந்த வெறிநாய்களின் துப்பாக்கி சன்னம் கதவை திறந்து கழுத்தை நீட்டியபடி நின்ற பரந்தாமன் காதுக்குள் புகுந்தது. கணப்பொழுதுதான் அவன்கதை முடிந்தது.

இந்த மங்கை மட்டுமல்ல இன்னும் எத்தனையோ மங்கைகள் வாழ்வின் வசந்தத்தை பறிகொடுத்து 'பாவம்' என்ற சொல்லுக்குள் பரிதாபமாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆண்களின் நிழல்கூடத் தம்மீது பட்டுவிடக்கூடாதெனப் பயந்து ஒடுங்கி தினமும் செத்துக்கொண்டிருக்கிறார்கள். பரந்தாமனுக்கு வந்ததோ ஒருநாள் மரணம். ஆனால் இந்த மங்கை... மரணத்தின் கோரப்பிடியில் சிக்குண்டு குற்றுயிரும் குறை உயிருமாய் தினமும் செத்துக்கொண்டிருக்கிறாள். சுகமும் துக்கமும் அவரவர் மனதிலல்லவா இருக்கிறது. சேரும் துணையில் மட்டும்தான் வாழ்க்கையின் சுகமே இருக்கிறது என்று வக்கிரமாய் கொக்கரிக்கும் நம் கொடுமை நிறைந்த சமூகத்தில் மங்கை மணம்வீசமாட்டாள். இனிப்பும் கசப்பும் எல்லாவற்றிலும் இருப்பதை ஏற்றுக்கொள்ளும் சமூகம் வாழ்க்கையில் வரும்போது மட்டும் வெறுத்து ஒதுக்கி வைக்கிறது. மங்கை விதவை... மங்கைகள் விதவைகள் இவர்கள் யார்? இன்று ஈழத்தில் பெரும் எண்ணிக்கையில் உள்ளவர்கள். இவர்கள் தம் தனிப்பட்ட வாழ்வு தந்த வேதனையில் சருகாகிக்கொண்டு போகிறார்கள். ஓகோவென்று அவர்கள் வாழும்போது கைகுலுக்க ஓடும் நம்மவர்கள் தடால் என்று சிரியும்போது தாங்கிப் பிடிப்பதில் பின் நிற்பதே நம் பண்பாடாய் போய்விட்டது. ராஜரிசிகளே காமத்தின் முன் தோற்றுப்போனபோது நம்மங்கைகள் காமத்தினை வென்று வாழ்கிறார்கள் என்றால் இலோசான காரியமா? இவர்கள் எதைச்செய்தாலும் சமூகம் குற்றம் காணமட்டுமே தயாராயிருக்கிறது. அதனால்தானோ என்னவோ இவர்கள் மற்றவர்களின் நட்பை நிராகரிக்கிறார்கள். மற்றவர்கள் காட்டும் பிரியத்தின்மேல் சந்தேகம் கொள்கிறார்கள். எமது சம்பிரதாயங்களும் பழக்க வழங்கங்களும் சமூகத்தை இறுக்கிப்பிடித்துக் கொண்டிருக்கும்வரை மங்கையைப் போன்றவர்கள் மனம் மட்டுமல்ல உடலும் கல்லாயே தெரியும்.

மனோவின் மனதில் மங்கை நிரந்தரமாய் குடியேறிவிட்டபோதும், அவளைப் புரியாத நிலையில் ஒரு தடுமாற்றம் தலைகாட்டியது. காதல் எனும் பெயரால் தம் நட்புக்கு அசிங்கம் ஏற்பட்டுவிடக்கூடாதென்பதில் மனோ முழுக்கவனமும் எடுத்தான்.

அன்றும் வழமைபோல மனோ, மங்கை கணக்குப் பகுதியிலிருந்து வெளியேறியபோது மிகவும் உற்சாகமாக இருந்தனர். மனோவின் வாய் இனிதாய் ஒரு காதல் கீதத்தை மெல்லென இசைக்க 'நீங்கள் பாடுவீங்களா?... எனக்கு பாட்டென்றால் உயிர்...!! என்றாள் மங்கை. இது மனோவுக்கு உற்சாகத்தையும், தைரியத்தையும் கூட்ட, ஒரு சில நாட்கள் ஓடி மறைய மனோ மெல்லப் பேசத்துணிந்தான். 'வேலைக்கு வாறதும் வீட்டை போறதும்தான் எங்கடை வாழ்க்கையாய்ப்போச்சு... சீ... நீங்களும் இப்பிடி தனியாய்...' தொடரமுடியாமல் நின்றான் மனோ. மங்கைக்கு முதல் முள் வலிப்பது அவளுக்குள் தெரிய வலிந்தே பதில்சொன்னாள். ' என்ன மனோ... நீங்களும் ஒரு சராசரி மனுசன் மாதிரி கேட்டிட்டியள்... நான் வேலைக்கு வந்துபோறதே தனியாய் வாழவேண்டுமென்ற தவிப்பிலைதான். எங்கடை நாட்டிலை பொம்பிளையளுக்கு கல்வியிலை சுதந்திரம் கிடைச்சிட்டுது. பொருளாதாரத்தில சுதந்திரம் கிடைச்சிட்டுது. ஆனால் வாழ்க்கையிலை... வாழுற சுதந்திரம் மட்டும் இன்னுமில்லை. ஒரு கலியாணம் எண்டால்கூட சாதி, மதம், படிப்பு, தொழில் எண்டு எல்லா எந்தஸ்தும் பாப்பினம். ஆனால் கடைசியிலை... பாத்தீங்கள்தானே என்ரை வாழ்க்கையை... அதுதான்...' நா...தழுதழுக்க தன் எண்ணத்தை கொட்டினாள் மங்கை. மனோ எதிர்பார்க்காத வார்த்தைகள் அவை... இருந்தாலும் எடுத்த காலை பின் வைக்காது 'பிழையெண்டால் மன்னிச்சிடுங்கோ பிளீஸ்... நீங்கள் வாழவேணும், ஆனால் தனியாயில்லை' என்று சொன்னதும் மங்கையும் சற்று மனசு கரைந்து 'நான் கோவிக்கேல்லை மனோ... காலம் ஆரையுமே ஏமாத்திறதில்லை. எல்லாருக்கும்போல கடவுள் எனக்கும் ஒரு சான்ஸ் தந்தவர் என்ரை தலைவிதி இப்பிடியாகீட்டுது... எங்கடை வாழ்க்கை இண்டைக்கு இப்பிடித்தானே போய்க்கொண்டிருக்கு. நேற்று பரந்தாமனுக்கு... இண்டைக்கு இன்னொருதருக்கு, நாளைக்கு யாரோ? நிட்சயமில்லாத ஒரு வாழ்க்கைதானே வாழ்ந்து தொலைக்கிறம். எனக்கு ஒரே ஒரு ஆசை... வாழுற வரைக்கும் எங்கடை வாழ்க்கையிலை அசிங்கப்படக்கூடாது. அது...தான்...' மங்கையின் தடுமாற்றம் மனோவுக்கு 'பலமேற்ற நீங்கள் சொல்றது எல்லாம் சரி. ஆனால்... மனிச வாழ்க்கை நிச்சயமில்லாதது எண்டு சொல்லிக்கொண்டு நாங்கள் சும்மா இருக்கேலாது. ஒவ்வொரு மனுசனும் ஏதோ ஒண்டிலை பற்றுவைக்கவேணும், அதிலைதான் வாழ்க்கையே ஓடிக் கொண்டிருக்கு.'

மனோவின் வார்த்தைக்கு பதில் சொல்லாமல் மௌனமானாள் மங்கை. 'வாழ்க்கை வாழ்வதற்கென்று யார் தான் நினைக்கினம்' என முணுமுணுத்தபடி அமைதிகாத்திருந்தாள் மனோ... ஆனால் அன்று இரவு அவனால் தூங்கமுடியவில்லை. முடிவு என்னவாகவிருக்குமோ என்ற தவிப்பில் விடியும்வரையில் தூங்காமல் பொழுதை கழித்தவன் மங்கையைப் பார்க்க விரைவாக ஓடினான். மங்கை வரவில்லை. அவள் ராஜினாமா அனுப்பிவிட்ட செய்தியே வந்திருந்தது.

மனோகரன் பொருமினான். பொங்கினான். சீ... அவசரப்பட்டுவிட்டேனோ எனக்கூனிக் குறுகி நிமிர்ந்தான். அவனது மனசாட்சி உரக்க கத்தியது. 'ஏய் மனோகரா மங்கையைப் பற்றி உனக்கு என்ன தெரியும். அவளும் குட்டையில் ஊறிய மட்டைதான். மங்கை போலப் படித்தபெண்களே இப்படித் துணிவில்லாமல் பயந்து ஓடும்போது பாவம் பத்தாம்பசலி பெண்களுக்கு எப்படி வாழ்வு கிடைக்கும். பெண்ணைப்படைத்த பிரமனே தப்பு பண்ணீட்டான். அதுதான் பெண்கள் சுயநலவாதிகள். அவளுக்கு உன்னைப் பிடிக்காமல் இருந்தால் சொல்லி இருக்கலாம். ஏன் கோழைபோல ஓடவேணும். தனிமனிதனான உனக்கு பதில் சொல்லத் தெரியாதவள், உலகத்திற்காபதில் சொல்கிறாள்?

மனக்குழப்பதிலிருந்து மனோகரன் விடுபட்டுக்கொண்டான் 'தான் தோற்றுவிடுவேன் என்ற, பயத்தில்தான் அவள் ஓடியிருக்கிறாள். போகட்டும்... நான் என்ன துரத்தி துரத்தியா காதலிக்கப்போகிறேன். அவள் வேலைக்கு மட்டும்தான் ராஜினாமா அனுப்பினாளே தவிர என் காதலுக்கா அனுப்பினாள்... இல்லையே என்பதில் நிம்மதி கண்டான்...!

ஜேர்மனியிலிருந்து சுபா

பாகிஸ்தான் அதிபரின் இந்திய வருகை

காட்சியும் பதிவும்



விமான நிலையத்தில் வரவேற்பு

இராணுவ மரியாதையுடன் வரவேற்பு

காந்தி சமாதிக்கு மலரஞ்சலி செலுத்தும் முஷாரப்

சோனியாவுடன் முஷாரப் பேச்சுக்கள்



முஷாரப் - ஜஸ்வந்த் சிங் சந்திப்பு

முஷாரப்பின் வருகையை எதிர்த்து ஆக்ராவில் போராட்டம் நடத்தும் சிவசேனா கட்சி ஆதரவாளர்கள்



ஜனாதிபதி கே.ஆர் நாராயணன் வரவேற்றபோது

GALAXY Calling card

Production

பல்லாயிரக்கணக்கான பிரான்ஸ் மக்களின்
அமோக ஆதரவைப் பெற்ற
Galaxy Calling Card அனைத்து தமிழர்
வர்த்தக ஸ்தாபனங்களிலும் விற்பனையில்
பெரு எழுச்சியை எட்டிக்கொண்டிருக்கிறது.

CARTES TELEPHONIQUES PREPAYEES

Galaxy Calling Card
மூலம் அதிகரிக்கப்பட்ட
நிமிடங்களாக,



இலங்கைக்கு உரையாடுவதற்கு

தமிழ்நாடு (சென்னை)
N° Vert 43 (min)
Cabine 50 (min)

வீடுகளிலிருந்து... 80 நிமிடங்கள்

பொதுத் தொலைபேசி மூலமாக... 65 நிமிடங்கள்

நீங்கள் தொடர்புகொள்ளும்
நிமிடங்கள் மட்டும் கட்டணம்
அறவிடப்படும்.
மேலதிக லோக்கல் கட்டணம்
எதுவும் அறவிடப்படமாட்டாது.

Galaxy Calling Card
விநியோகஸ்தர்களுக்கு
சிறப்பு விற்பனைத்
தள்ளுபடி உண்டு.

uick Telecom

பிரான்ஸ் அலுவலக
தொடர்புகளுக்கு:

QUICK TELECOM G.R.E.
137, Boulevard Voltaire, 75011 Paris.
Tel: 01 43 72 77 77

வர்த்தகத்
தொடர்புகளுக்கு:

Sun Tel
178. rue du Fbg St denis,
75010 Paris
Tel: 01 40 34 11 28

DESTINATION	Numéro Local(min)	N° Vert Cabine (min)
ALGÉRIE	90	70
ALLEMAGNE	600	183
BANGLADESH(chittagong)	92	68
BANGLADESH (Dhaka)	76	76
BELGIQUE (Bruxelles)	699	188
BÉNIN	45	39
CAMEROUN(douala)	107	76
CANADA	625	176
CENTRE AFIQUE REP.	46	46
CHILE	200	120
CHINE(beijing)	150	112
COLOMBIE (bogota)	100	80
COMORES	50	45
CONGO	55	46
COTE D'IVOIRE (abidjan)	45	45
DENMARK	600	184
DOMINCAN REP.	130	89
EGYPT	36	15
ÉQUATEUR (cuenca)	65	52
ÉTATS-UNIS	517	171
FRANCE (paris)	700	189
FRANCE(gsm)	65	50
FRANCE	600	177
GABON	70	55
GAMBIE	50	38
GHANA (Accra)	59	48

DESTINATION	N° Vert Cabine (min)
GUADELOUPE	75 62
GUINÉE(bissau)	50 36
INDE (mumbai)	46 39
INDE(chennai)	43 32
INDE (New Delhi)	40 34
IRAN	28 22
ISRAËL	140 91
ITALIE(Milan)	578 178
LIBAN	72 56
MADAGASCAR	40 36
MALI REP.	44 40
MAURITANIE	50 48
NIGERIA(Akure)	42 32
PAKISTAN(lahore)	35 28
PHILIPPINES	90 72
POLOGNE	129 86
ROUMANIE (Bucharest)	151 95
SÉNÉGAL(Dakar)	45 40
SRI LANKA	77 60
SUISSE(Zurich)	589 179
THAILANDE(Bangkok)	100 92
TUNISIE	60 60
TURQUIE (Istanbul)	120 85
UK(Local)	1000 221
VIETNAM	24 24
ZAÏRE	40 40

கலைந்த சொற்கள் எண்: 79

கீழ் உள்ளவற்றில் 181 சொற்கள் கலைந்திருக்கின்றன. சொற்கள் நேர் கோட்டிலும் இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல், மூலைப்பக்கம் என இருக்கும். இச்சொற்களை கண்டுபிடித்து கோடிடவும். சொற்களில் சேராத சில எழுத்துக்கள் மேலதிகமாகவும், சில சொற்கள் இரு முறையும் இருக்கின்றன.

ர்	பா	ல்	ன்	தி	ம்	தா	ம்	பு	அ	ல்	ல	து	ப	பா	ம்
வ	வா	ய	இ	க	த	க	ர்	ப்	பு	தி	ரை	வ	ரி	ல	ர
ரு	டை	லை	ட	டு	ர	ம்	பா	டை	ளி	த்	லா	லூ	ல்	ம்	ப
இ	ர்	வ	ள்	க	பு	ப்	ரு	து	ள்	ள	ல்	இ	ட	ப	ம்
ள்	ரு	இ	க	னி	ம்	பு	பு	த்	க	க	வ	ரி	க	ள்	ப
கை	ட	கை	த	க	ன	ம்	ப்	ரு	ல்	ள்	வ	ம்	ச	ம்	ன்
ம்	ம்	ம்	க்	ய	பு	ம்	ளி	க	கி	க	ம்	ன	ன்	பி	து
லை	ப	த	கை	பி	ம்	ப	க	இ	மு	ர்	லை	கு	ம்	லா	ள்
தி	னி	ன	ணி	ய	ம்	அ	து	து	ரு	வ	ம்	ச	ம்	க	கை
ல்	கு	ன்	த	க	ரு	ந	ம்	ட	க	ய	டு	ட	ங்	லு	இ
ம்	தி	உ	த	வி	வி	து	ம	ன	னி	க	மா	ல	ச	க	லி
க	ரை	த்	இ	மா	மா	லா	ல்	லே	கு	க	ட	த்	த	ல்	மி
ங்	பு	த	ன	லை	ப	க	ல்	ய	மை	ச	ந	ற்	ப	ணி	க
த	ப்	ம்	வி	வா	கா	மி	ற	ம	ற	தி	பெ	ள்	க	லை	உ
ரு	ரி	ட	பா	இ	து	ற	ற்	பெ	து	ரு	வி	ம்	ய	ல	ஆ
மி	பூ	த	னி	பு	ப்	றை	வி	ளி	மை	த்	வி	ன்	க	ல	ம்
ம்	க	க	ல்	ள்	ய	ல்	ப	ம்	ப	த	இ	ம்	ய	ளா	ள
ம்	ஷ	லு	ள	து	க	ழ்	க	இ	பு	ம்	கோ	ம்	சி	ம்	வ
ள்	ரு	ரு	ள்	ம்	க	ங்	ப	ம்	ப	ப்	க	ங்	ய	ளா	ப
வி	க	க	வ	பு	ச	பு	ர	ர்	பை	ந்	க	ட	ளி	த	ளி
ணி	ணி	லை	லை	ப்	ப்	தி	ம்	தி	ள்	ம்	த	மு	வு	ள்	இ
ம	ம	ம	நி	ள	த்	மை	ப	க	த்	மு	த	ல்	க	ள்	வ
ரு	ரு	ம்	வ	ப	னு	அ	ரை	க்	தி	ச	ட்	டி	இ	வ	வ
தி	ம	னு	அ	ள	ப்	பு	இ	ளி	ம்	அ	ட்	டை	க	ள்	ர்
தி	வ	ம்	த	ப	றி	வெ	ம்	ஒ	வி	சு	ய	ந	ள	ளு	ரி
ட	ள்	க	ன்	ய	ப	ற்	ல்	க	ம்	ம்	ம்	ம்	பு	வ	கா
ம்	வ	ரு	ப	ண	ம்	றி	மா	த	ன	த	ப	ப்	ர	ர்	ங்
ல்	வி	ரை	ய	ம்	ன்	லை	த்	ன்	ந்	வா	ர	ம்	ள	வ	க
த	ட	ம்	ம்	ஒ	இ	சு	ச	ப	மி	ப	பு	பு	ப்	டை	அ

இடையன் இருவர் பாவாடை வலையல் வடகம் கடுகதி புரதம் கரகம் மல்லாவி சமையல் சடலங்கள்
கடற்கலம் நடமாடும் கயவர்கள் விமானம் அமைதி கடத்தல் துருவம் தற்பெருமை தம்கை திருத்தம் விற்றல்
கள்ளி மற்றையது விறைப்பு விறகாலை முகவரி வானத்தில் உத்தம் ஒளிக்கதிர் வள்ளி புனிதபூமி சுட்டிகள்
பத்திரம் பந்தல் பூரிப்பு புத்தகம் கம்பு கவனம் வெப்பநிலை நம்பிக்கை வளாகம் சகுனம் உலைகள்
கலம் மறதி அனுபவம் அப்பன் முகப்பு அட்டைகள் கடிதம் நிம்மதி பளபளப்பு பணம் பயணம்
அளப்பு அம்மணி வளப்பு வள்ளுவர் கம்பளி பயன்கள் பயம் வெற்றிலை கப்பம் பங்கம் பவளம்
முகவர் விரையம் அனுமதி தடம் வரம்பு அவரம் கவளம் அதிகம் பகவதி நிலைகள் பதம்
மின்மாற்றி திருமலை தகவல் பருவம் அகங்காரி அடைப்பு புரதம் பரப்பு வாரம் பந்தம் விம்பம்
சன்னம் பந்தல் சுத்தம் ஒன்றில் வானகம் வாதம் வள்ளம் இடையம் முதல்கள் கடவுள் திருமணி
தடயம் தும்பு தசம் மணிகள் சங்கம் கம்பளி களிப்பு களிம்பு கருத்து முட்டை ஆலயம்
நற்பணி சிங்கம் புரைகள் பம்பல் வள்ளல் திடம் புல்லுருவி வருஷம் பாதகம் சகுனம் உதயம்
மிருதங்கம் உன்னதம் புகழ் தக்கம் தன்னிலை தம்பதி தும்மல் சங்கமி தகனம் கள்வர் பல்லி
புனிதம் இதயம் கணிதம் பின்னம் வரிகள் கல்வி துள்ளல் களம் இடபம் வம்சம் உலகம்
கோப்பை குதிரை சலுகை உதவி வருகை இருகை இருள் இடம் தக்கை அருவி பகல்
மாடம் துலாம் இவள் இகம் கவலை கடம் பரம்பரை சட்டி தகனம் அல்லது துடைப்பு
தகர்ப்பு பாகம் கள்ளி தாகம் களத்தில் வல்லாரை கல்லூரி பம்பரம் இல்லம் பாலம்
நட்சத்திரங்கள் மில்லேனியம் கருமுகில்கள் விலைமாது விருதுபெற்றது துருப்புகள்

பெயர்:.....

முகவரி:.....

.....

பிறந்த நாள்:..... சந்தாதாரராயின் சந்தா எண்:.....

கலைந்த சொற்கள் எண்–78 விடைகள்



ஈழமுரசின் சென்ற கலைந்தசொற்கள் பகுதிக்கு 135 இற்கும் மேற்பட்ட வாசகர்கள் விடையெழுதி அனுப்பியிருந்தார்கள். அவர்களில் சரியான விடையெழுதிய வாசகர்களில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து வாசகர்களின் விபரங்கள் வருமாறு.

1) சாந்தமணி வைத்தீஸ்வரன்
Walton Road,
U.K.

2) திரு.நா.சிவபாலகுமார்
4313 Mohlin,
Swiss.

3) கார்திகேசப்பிள்ளை ஷர்மிளன்
Basel
Swiss.

4) சிவகாருண்யன் சிவஞானசுந்தரம்
12051Berlin,
Germany.

5) செல்வராசா நாகலிங்கம்
94210 La Varenne,
France.

இவர்களுக்கு *Lune International* நிறுவனத்தினரால் பெறுமதி மிக்க நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

LUNE
12, Rue Perdonnet,
75010 Paris.
Tel: 01 42 09 21 43

கலைந்த சொற்கள் எண்-79 இற்கான சரியான விடையும், கலைந்த சொற்கள் எண்- 80ம், 02 - 08 ஒக்ஸ்ட் 2001 ஈழமுரசில் வெளிவரும்.

தயாரிப்பு: சவேயு சவந்தராஜா

கலைந்த சொற்கள் எண்-79 இற்கான விடைகள் வந்துசேர வேண்டிய கடைசி நாள்: **27.07.2001**

(போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி:

கலைந்த சொற்கள்
Eelamurasu
22, Rue Perdonnet,
75010 Paris, France.

தமிழ்ச்சோலை கலையகம் – டென்மார்க்

இரவல் தாயகம்
டென்மார்க் நேரம்
சிறகடிக்கும் சிறகுகள்

சுவிஸ் மிலேனியம்

சுவிஸ் நேரம்
நீங்களும் பாடலாம்
கணனி பயில்வோம்
கலைச்சரம்

தமிழ்த்தாய் படைப்பகம் – ஜேர்மனி

ராகசங்கமம்
மயில்தோப்பு
இசைநேரம்
ஒளியின் பார்வை
தங்கக்குடும்பம்
பூந்தோட்டம்

வானதி கலைக்கூடம் – லண்டன்

இசைக்கோலங்கள்
நளைய நட்சத்திரங்கள்
இசைகேட்டால்
தேன்சிந்துதே வானம்
இசைத்தேன்
பாடல் பிறந்த கதை
ராகபந்தங்கள்
இசைமுகங்கள்
சலனம்
ஆயிரம் பொற்காசு
நூற்றுக்கு நூறு
நம் வீட்டுத் தோட்டத்தில்
எண்ணங்கள் பலவிதம்
சிரிப்பு பாதி அறுவை பாதி
புதிய மலர்கள்

தாய்நிலம் கலையகம் – நோர்வே

நாடி
புதையல்
புலத்தமிழ் முற்றம்

தமிழ்ஒளி – பிரான்ஸ்

பொங்கும் பூம்புனல்
களமும் புலமும்
இன்றைய உலகம்
செய்திசொல்லும் காப்சி
இதுவெல்லும் நேரம்
கண்ணும் எழுத்தும்
அறிவும் செயலும்
விரியும் சிறகுகள்
இன்றையநேயர்
நையாண்டிமேளம்
பார்த்ததில் ரசித்தது
கேட்டதில் இனித்தது
வணக்கம் ஐரோப்பா
மழலைகள் பூங்கா
இரவின் தாலாட்டு
சுப்பர்மடம் (விரைவில்)
விண்ணும் மண்ணும் (விரைவில்)
இன்னும் பல....

தமிழ்ஒளி சந்தா புதுப்பிப்போருக்கு விசேட மலிவு விலை சலுகை

யூலை 1 முதல்

யூலை 31 வரை

இதுவரை தமிழ்ஒளி சந்தா
புதுப்பிக்காதவர்களுக்கு
நாம் தரும் அரிய சந்தர்ப்பம்

தமிழ்ஒளியில்
புதிய சந்தாதாரராக
இணைவோருக்கு 10 வீத கழிவில்
அட்டைகள் வழங்கப்படுகின்றது

சந்தா புதுப்பிப்போருக்கான வருட சந்தா

நாடு	வருட சந்தா	தொடர்பு
பிரான்ஸ்	1200 FF	0148393429
ஐக்கிய இராச்சியம்		120 £ 02077934024
சுவிற்சர்லாந்து	295 SF	012402508
ஜேர்மனி	360 DM	02083771402
நோர்வே	1400 Kr	099003154
டென்மார்க்	1300 Kr	097214685
ஒல்லாந்து	400 Gl	0629151259
இத்தாலி	375 Ml	0916824056

TTN

5-7 Rue Emile Zola, 93120 La Courneuve
Tel: 01 48 39 34 29 / Fax: 01 48 39 31 36

ஆடி மாத திரைவிருந்து சில

மாயி
உன்னைக்கொடு என்னை தருவேன்
வானவில்
மூத்தவன்
பார்த்தேன் ரசித்தேன்
சந்தித்தவேளை
காக்கைசிறகினிலே
சின்னராஜா
மன்னவரு சின்னவரு
என்றென்றும் காதல்
வாலி
நிலவே வா
உன்னுடன்
கிழக்கும் மேற்கும்
மின்சாரக்கனவு
தேவராகம்
சும்மா இருங்க மச்சான்
திருமதி பழனிச்சாமி
வாசலில் ஒரு வெண்ணிலா
அஞ்சலி
மௌனம்சம்மதம்
என் உயிர்த் தோழன்
பிள்ளைக்காக
உழைத்து வாழவேண்டும்
சூரசங்காரம்
புதிய வானம்
வீர காவியம்
ஆனந்
மந்திரப்புன்னகை
ஆனந்தகண்ணீர்
ரத்தபாசம்
இன்னும் புத்ததம் புதிய பல திரைப்படங்களுடன்...

நிகழ்ச்சிகள்

இயந்திர பறவை (தொடர்)
மரபுக் கவிதைகள் (தொடர்)
சூகன் (தொடர்)
பஞ்சவர்ணம் (தொடர்)
ரமணி vs ரமணி
பாலச்சந்திரின் சின்னத்திரை
பாலுமகேந்திராவின் கதைநேரம்
மணிரத்னத்தின் பஞ்சவர்ணம்
ஹலோ ஹொலிவூட்
நட்சத்திரம்
குயிற்தோப்பு கவியரங்கம்
காட்டுன்நேரம்
ஆலயமணி
மழலைகள் வனம்
புத்தம் புதுக்காலை
உறவுப்பாலம்
புதுப்பட விமர்சனம்
வெள்ளித்திரை
பாப் பாப்
பொய்முகங்கள்
இவ்வாரத் தமிழகம்
கலையே உயிரே
வானவில்
மனநலம்
மருத்துவம் பலவிதம்
சவால்
நட்சத்திரம்
இன்னும் பல....

புதிய நிகழ்ச்சிகள்

அப்துல் ஹமித்தின் ராஜகீதம்
அப்பு குப்பு
ஊர்க்காற்று
கற்பகம் தணிப்பொறி
சுபவீயின் இன்றும் இனியும்
வெற்றிசொல் வெற்றிகொள்
சுதாங்கனின் சந்தித்த வேளை
யம்மா யம்மா

10வது ஆண்டு வீர வணக்கம்

2ம் லெப். அன்பன் மாஸ்ரர்
முருகராசா ஸ்ரீதர்

(தீருவில், வல்வை)

அன்னை மண்ணுக்காக: 22.07.1991

'தமிழீழ மண்ணுக்கு விதையான எங்கள் மாவீரனே, முத்த குலக் கொழுந்தே!
ஆண்டுகள் பத்து மறைந்தாலும் உன் நினைவுகள் என்றும் அழியா!
வீரச்சாவு உன்னைத் தழுவி நீ எங்களை விட்டுப் பிரிந்து சென்றாலும்,
நீ எங்களுள் வாழ்கின்றாய்.
ஆகாய கடல்வெளி ஆனையிறவுப் பெரும் சமரிலே தமிழ் மண்ணுக்காக
தியாக வேள்வியில் தீபமானாய். தமிழீழ விடுதலைக்கு விதையான உன்னை
அழுத கண்களோடு பெற்றோரும், ஐந்து சகோதரர்களும் தொழுது நிற்கின்றோம்.

தகவல்: தம்பிமார் (லண்டன்)
முருகராசா - ஸ்ரீ காந்த் (0208 - 2889377)
முருகராசா-பரந்தாமன் (0956-338819)
62, St Barnabas Road
Mitcham - Surrey
CR4 2DU

உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
ஐயா, அம்மா, தம்பிமார், தங்கைமார்,
மைத்துனன், மைத்துனி, மருமக்கள், மனோவா,
யூதா, கனா, பெறாமகள் ஸ்ரீகுட்டி,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

Pub. Lon.

வெற்றித் திருமகன்

– பேராசிரியர் செவாலியே சுகிர்தராஜ் –
(டிகோல் தொடர் - 53)

தேசத் தலைவர்

43ம்ஆண்டின் இரண்டாவது பகுதி, ஜெனரல் டிகோலுக்கு பல நம்பிக்கைகளை அளித்தது.

தெரிந்தோ– தெரியாமலோ, விரும்பியோ– விரும்பாமலோ, அவர் பிரான்சு நாட்டின் தவிர்க்க முடியாத தலைவர் ஆகி வருவதை உணர்ந்தார்.

பல பிரச்சினைகள் முளைத்தன. ஒவ்வொன்றையும், பிரான்சு நாட்டின் குடியரசுத் தலைவராகவோ, பிரதமராகவோ எண்ணி, முடிவெடுத்து, தீர்த்தார். இதோ ஒரு பிரச்சினை:

04.01.42 இல் பெட்டெய்னின் விஷி அரசில் புய்ஷெ (Pucmeu) என்பவர் உள்துறை அமைச்சராய் இருந்தார். பிரஞ்சு தேசப்பற்றாளரான எதிர்ப்பாளர்கள் நாந்த்(Nantes) நகர ஜெர்மானிய படைகளின் தளபதியைக் கொன்றபோது, ஜெர்மன் படை, புய்ஷெவிடம், அதற்குப் பதிலாக, சுட்டுக் கொல்லப்பட வேண்டிய 25 பிரஞ்சுக்காரர்கள் பட்டியலைக் கோரியபோது, புய்ஷெ அப்பட்டியலைத் தயாரித்துக்கொடுத்தார். அந்த 25 பிரஞ்சுக்காரர்களும் ஜெர்மானியரால் சுட்டுக்கொல்லப் பட்டனர்.

இவர், உள்துறை அமைச்சராக வேறு பல தவறான முடிவுகளையும் எடுத்துச் செயல்பட்டிருந்தார். பின்னர், இவர் விஷியிடமிருந்து பிரிந்துவந்து, ஜெனரல் ஜிரோ உதவியுடன் போரிடும் பிரஞ்சு இராணுவத்தில் பணியாற்றினார். இவர் இப்படி பிரஞ்சு இராணுவத்தில் பணியாற்றுவதால், இவரது கடந்த காலத் தவறுகள் மறக்கப்படுமா? மன்னிக்கப்படுமா? நீதி மன்றம் முடிவு செய்யும் என்று அறிவித்தார் டிகோல்.

03.09.43 இல் அவரது தலைமையில் கூடிய தேசிய விடுதலை செயற்குழு பின்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியது.

'வசதி கிடைத்தவுடன், மார்ஷல் பெட்டெய்னும், அவருடன் சேர்ந்து போர் நிறுத்தத்தை ஏற்றவர்களும், பிரஞ்சு அரசியல் நிர்ணயச் சட்டத்தை மீறியவர்களும், எதிரியுடன் குலாவியவர்களும், பிரஞ்சுத் தொழிலாளரை ஜெர்மனிக்கு அனுப்பியவர்களும், பிரஞ்சு இராணுவத்தை, பிரான்சின் நட்பு நாடுகளுக்கு எதிராகப் பயன்படுத்தியவர்களும் நீதி மன்றங்களின் முன்பு நிறுத்தப்படுவர்....'

இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில், மொரொக்கோவில் பணியில் இருந்த புய்ஷெ சிறைவைக்கப்பட்டார்.

இந்தக் கால கட்டத்தில், ஜெனரல் டிகோல் தன்னைப் பற்றியும், தனது எதிர்காலம் பற்றியும் நிறைய சிந்தித்தார்.

இந்தச் சிந்தனையின் விளைவாக, அவர் ஒரு முடிவுக்கு வந்தார். தேசத் தலைவரான அவர், உயர்வான இடத்தில் இருப்பார்– (அவர் சின்ன, சின்ன விவகாரங்களில் தலையிடமாட்டார். தலையிட நேரம் இராது)

அதுமட்டும் அல்ல, அவர் மற்றவர்களைவிட தூரமான இடத்தில் இருப்பார். (அவரை யாரும் தோளில் தட்டி, எப்படி இருக்கிறாய்? என்று கேட்க முடியாது.) இப்படியாக, தேசத் தலைவர் பதவி மற்றவர்களிடம் இருந்து அவரைப் பிரித்தது. (1943இல் மட்டும் அல்ல, இனி காலம் முழுதுமே அப்படி தான்)

உயர்வான இடத்திலும், தூரமான இடத்திலும் இருந்தாலும், அவர் தனது குடும்பத்தின் அருகேயே இருந்தார். மனைவிக்கு உதாரணக் கணவராகவும், 3 பிள்ளைகளுக்கும் நல்ல தந்தையாகவும், உணர்வு மிக்க சகோதரராகவும், பாசம் மிக்க மாமனாகவும், மைத்துனராகவும் இருக்கத் தவறவில்லை.

ஒரே மகன், சுதந்திர பிரஞ்சுக் கடற்படையில் அதிகாரியாய் விளங்கினார். மூத்த மகள், பெற்றோரைப் பிரிந்து, இங்கிலாந்தில் படித்துக் கொண்டிருந்தார். இந்த இருவர் பற்றியும் தந்தை டிகோல் கவலைப்படவில்லை. ஆனால், அந்த 3வது குழந்தை ஆன்? அந்த உடல் நலமில்லாத குழந்தை? ஆன் அவர் மனதைக் குழப்பினாள்– மனிதர்கள் துன்பப்படுபவர்கள் என்பதை அந்தக் குழந்தை அவருக்கு எடுத்துக்காட்டியது. ஒய்வு கிடைத்த போதெல்லாம் அப்பெண்ணைப் பற்றி சிந்தித்தார்– வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம், சில நிமிடங்களையாவது அக் குழந்தையுடன் விளையாடவோ, தூக்கிக் கொஞ்சவோ பயன்படுத்தினார்.

(தொடரும்)

ரூபன் வாகன சேவை

உங்கள் அனைத்து உள்நாட்டு, வெளிநாட்டு வாகனத் தேவைகளுக்கு

தொடர்புகளுக்கு: 01 47 63 39 46
06 70 80 60 98
06 22 80 21 85

லூட்ஸ் செல்லும் பக்தர்களுக்குத் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

உலகில் இவ்வாரம்

ஜூலை 15 முதல் 21 வரை

15

1099: ஜெருசலேம் நகரை மதச்சண்டையில் ஈடுபட்டவர்கள் கைப்பற்றி, கிறிஸ்தவர்களிடம் ஒப்படைத்தனர்.

1857: இந்திய சிப்பாய்க் கலகத்தில் கான்பூர் என்ற இடத்தில் இங்கிலாந்து நாட்டு துருப்புகளையும், அவர்களின் குடும்பத்தினரையும் கொன்று, அவர்களின் உடல்களை கிணற்றில் வீசினர்.

1865: டப்ளின் நகரில் வில்ஸ் கவுண்ட் நார்த் கிளிப் பிறந்தார். அப்போது அவர் பெயர் ஆல்பிரட் ஹார்ம்ஸ் வொர்த். அவர்தான் வெகுஜன செய்தித்தாள்களைத் தொடங்கிய முன்னோடி ஆவார். 'டெய்லி மிர்ரர், டெய்லி மெயில், தி டைம்ஸ்' ஆகிய பத்திரிகைகளைத் தொடங்கினார்.

1964: ரஷிய அதிபராக இருந்த பிரஷ் நேவைத்தொடர்ந்து புதிய அதிபராக அனஸ் டாஸ் மிகோயன் பதவி ஏற்றார்.

1965: மரைனர்–6 என்ற விண்கலம் 1964ம் ஆண்டு நவம்பர் மாதம் விண்ணில் செலுத்தப்பட்டது. அது செவ்வாய்க் கிரகத்தை முதல் முறையாக படம் எடுத்து அனுப்பியது.

1968: அமெரிக்கா–ரஷியா இடையே முதன் முதலாக நேரடி விமானப் போக்குவரத்து (நியூயோர்க் – மொஸ்கோ இடையே) தொடங்கியது.

1974: சைப்ரஸ் தீவில் இராணுவத்தில் உள்ள கிரேக்க அதிகாரிகள் நடத்திய புரட்சியில் அதிபர் மகாரியோஸ் ஆட்சி தூக்கி எறியப்பட்டது. நிகோஸ் சாம்சன் புதிய அதிபராகப் பொறுப்பு ஏற்றார்.

1983: பாரிஸ் நகரில் உள்ள ஓர்லி விமான நிலையத்தில் குண்டு வீசப்பட்டதில் 6 பேர் கொல்லப்பட்டனர். 48 பேர் காயம் அடைந்தனர்.

1991: ஈராக்கில் உள்ள குர்திஷ் இன மக்களின் பகுதியில் இருந்து மேற்கத்திய நாடுகளின் இராணுவம் வாபஸ் ஆனது.

16

622 முகமது நபி மெக்காவில் இருந்து மதீனாவிக்கு சென்ற இந்த நாள்தான் இஸ்லாமிய சகாப்தத்தின் தொடக்க நாள்.

1557: இங்கிலாந்து மன்னர் 8–வது ஹென்றியின் 4–வது மனைவி கிளீவஸ் மரணம் அடைந்தார். திருமணமான 6–வது மாதத்தில் கிளீவஸ் திருமணம் செல்லாது என்று அறிவிக்கப்பட்டது.

1661: 'பாங் ஆப் ஸ்டாக் ஹோம்' ஐரோப்பாவிலேயே முதல் தடவையாக ரூபாய் நோட்டுகளை வெளியிட்டது.

1917: ரஷியாவில் பெட்ரோ கிராடில் அதிகாரத்தை கைப்பற்ற போல்ஸ்விக்குகள் செய்த முயற்சி தோல்வியில் முடிந்ததால் டிராட்ஸ்கி கைது செய்யப்பட்டார். லெனின் தலைமறைவானார்.

1918: ரஷியாவின் கடைசி ஜார் மன்னர் 2–வது நிகோலசும், அவரது குடும்பத்தினரும் யேகட்ரின் பர்க்கில் போல்ஸ்விக்குகளால் கொல்லப்பட்டார்கள்.

1942: இரண்டாவது உலக யுத்தத்தின்போது பிரான்சில் 14,000 யூதர்களை ஜெர்மன் படை கைது செய்தது.

1945: அமெரிக்க முதலாவது புளூட்டோனியம் ஆயுதமான 'டிரினிடி'யைவெடித்து சோதனைசெய்தது. நியூமெக்சிகோ பாலைவனத்தில் இந்த சோதனை நடத்தப்பட்டது.

1950: உலக கால்பந்து போட்டியில் உருகுவே 2–1 என்ற கோல் கணக்கில் பிரேசிலை தோற்கடித்தது. வரலாறு காணாத அளவில் 1 இலட்சத்து 99 ஆயிரம் இரசிகர்கள் இந்த போட்டியை கண்டுகளித்தனர்.

1965: பிரான்சையும், இத்தாலியையும் இணைக்கும் 7 மைல் தூர மலை குகைப் பாதையை பிரான்ஸ் அதிபர் டி காலும் இத்தாலி அதிபர் சராகட்டும் திறந்து வைத்தார்கள்.

1969: சந்திரனில் இறங்குவதற்காக அமெரிக்க வீரர்களான ஆர்ம்ஸ்டிரங், பங்சூல்ட்ரின் மைக்கல் காலின்ஸ் ஆகியோர் அபோலோ–2 ராக்கெட்டில் வான்வெளிக்கு புறப்பட்டனர்.

1999: காலஞ்சென்ற அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மகன் கென்னடி ஜூனியரும், அவர் மனைவியும் சென்ற விமானம் மசாசு செட்ஸ் அருகே கடலில் விழுந்தது. விமானத்தில் இருந்த அனைவரும் பலியானார்கள்.

19

1333: ஹாலிடன் மலை என்ற இடத்தில் நடந்த போரில் இங்கிலாந்து மன்னன் மூன்றாம் எட்வர்ட், ஸ்கொட்லாந்து படையை வென்றார்.

1545: இங்கிலாந்து அரசன், எட்டாம் ஹென்றியின் கப்பற் படையின் புகழ்பெற்ற கப்பலான மேரி ரோஸ், 700 மாலுமிகளுடன் மூழ்கியது.

1553: ஜேன் கிரே சீமாட்டி பதவியிறக்கப்பட்டு, இங்கிலாந்து மகாராணியாக மேரி ரூபர் பிரகடனம்.

1821: இங்கிலாந்து மன்னனாக நான்காம் ஜார்ஜ் முடிசூடிக் கொண்டான். அந்த விழாவிற்கு தன்னை விட்டுப் பிரிந்துசென்ற ராணி கரோலின் வருவதைத் தடைசெய்தான்.

1877: முதல் விம்பிள்டன் இறுதி டென்னிஸ் போட்டி நடைபெற்றது. ஸ்பென்சர் கோரே இப்போட்டியில் வென்றார்.

1900: பாரிஸ் நகரின் மெட்ரோ பாதாள ரயில் சர்வீஸ் துவக்கப்பட்டது.

1941: இரண்டாம் உலகப்போரின் மிகப்பிரபலமான 'விக்டர் பார்' என்ற வெற்றியைக் குறிக்கும் இரட்டை விரல் சின்னத்தை, பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் அறிமுகப்படுத்தினார்.

20

1402: மதமூர்லேன் மாபெரும் டார்டார் படையுடன் வங்கோரா என்ற இடத்தில் நடந்த போரில் ஒட்டோமான் சாம்ராஜ்யத்தைக் கைப்பற்றி, அதன் சுல்தாலை சிறைப்பிடித்தான்.

1890: கிரேக்க நாட்டின் மன்னனாக 1922ம் ஆண்டு முதல், 1947ம் ஆண்டு சாகும்வரை அரசாண்ட இரண்டாம் ஜார்ஜ் பிறப்பு.

1903: 1878ம் ஆண்டு முதல் போப்பாண்டவராக இருந்த பதிமூன்றாம் போப் லியோ உயிர்நீத்தார்.

1917: கொர்ப்பு ஒப்பந்தத்தின் கீழ், செர்புகள், குரோட்டுகள் மற்றும் ஸ்லோவேனியர்கள் இணைந்து யூகோஸ்லாவியா என்ற நாட்டை உருவாக்கி, ஒன்றாக வாழ முடிவெடுத்தனர்.

1919: எவரெஸ்ட் சிகரத்தை 1953–ம் ஆண்டு வெற்றிகரமாக ஏறிச் சாதனை படைத்த சர் எட்மண்ட் ஹில்லரி, நியுசிலாந்தில் பிறந்தார்.

1937: இத்தாலிய விஞ்ஞானியும், கம்பியில்லா தந்திமுறையைக் கண்டுபிடித்த குக்லியெல்மோ மார்கோனி பிறந்தார்.

1944: அடால்ப் ஹிட்லரின் மேஜையின் கீழ் குண்டுவைத்து கொல்ல முயன்ற ஜெர்மானிய அதிகாரிகளின் முயற்சி தோல்வியடைந்தது.

1951: ஜோர்டான் நாட்டின் மன்னனாக 1946 முதல் ஆட்சி புரிந்த அப்துல்லா, ஜெருசலம் நகரில் உள்ள மசூதிக்கு செல்லும் வழியில் படுகொலை செய்யப்பட்டார்.

1969: அமெரிக்க விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்ட்ரங், சந்திர மண்டலத்தில் தனது காலடியைப் பதித்து மாபெரும் சாதனை புரிந்த நாள். அப்போது அவர் வெளியிட்ட செய்தி உலகம் முழுவதும் ஒலிபரப்பப்பட்டு, சரித்திரத்தில் நீங்கா இடம்பெற்றது. அது 'மனிதன் பதித்த சிறிய காலடி மனித சமுதாயத்திற்கு மாபெரும் பாய்ச்சல்'.

1976: ஆளில்லாத அமெரிக்க விண்கலம் வைகிங் தனது 11 மாத பயணத்தை செவ்வாய்க் கிரகத்தை அடைந்தது டன் முடித்துக்கொண்டது.

1989: பர்மாவின் இராணுவ ஆட்சியை எதிர்த்து கருத்துக்கள் வெளியிட்ட, எதிர்க்கட்சித் தலைவி ஆங் சான் சூகீ வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

1994: முஸ்லிம் நாடான ஜோர்டானில் காலடி வைத்த முதல் இஸ்ரேலிய வெளிவிவகாரத்துறை அமைச்சர் என்ற பெருமையை சிமோன் பெரஸ் அடைந்தார்.

21

1403: இங்கிலாந்தில் மன்னர் 4 –வது ஹென்றியை எதிர்த்து பெர்சி குடும்பம் போராடி வந்தது. ஸ்ரஸ் பெரியில் நடந்த போரில் அந்த குடும்பத் தலைவர் ஹென்றி பெர்சி கொல்லப்பட்டார்.

1798: பிரமிட் யுத்தம் எகிப்தில் நடந்தது. கெய்ரோ நோக்கி நெப்போலியன் படைகள் முன்னேறுவதை தடுக்க மேம்லுக் படை செய்த முயற்சி பலிக்கவில்லை. அந்த படை வீரர்கள் விரட்டப்பட்டு பலர் நைல் நதியில் விழுந்தனர்.

1816: ராய்ட்டர் செய்தி நிறுவனத்தை உருவாக்கிய பால் ஜூலியஸ் ராய்ட்டர் ஜெர்மனியில் பிறந்தார்.

1904: ரஷியாவில் 13 ஆண்டுகளாக நடந்த 4,607 மைல் நீள டரான்ஸ் சைபீரியன் ரெயில்பாதை வேலை முடிவடைந்தது.

1925: குரங்கில் இருந்து பிறந்தவன் மனிதன் என்ற டார்வின் கொள்கை பைபிளுக்கு விரோதமானது என்றும் அதை பள்ளிகளில் சொல்லிக்கொடுக்கக்கூடாது என்றும் அமெரிக்காவில் உள்ள டென்னசி மாநிலத்தில் தடை விதிக்கப்பட்டு இருந்தது. அதை மீறி பள்ளிகளில் பாடல் நடத்திய ஜான்ஸ் கேரப்சுக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

1944: ஜப்பானியர்கள் 1941ம் ஆண்டு கைப்பற்றிய பசிபிக் தீவில் உள்ள குவாம் பகுதியை அமெரிக்க படைகள் மீட்டன.

1960: உலகின் முதல் பெண் பிரதமராக இலங்கையில் திருமதி. பண்டாரநாயகா பதவி ஏற்றார். கணவர் சாலமன் பண்டாரநாயகா சுட்டுக்கொல்லப்பட்டதால், இவர் பிரதமரானார். திருமதி. பண்டாரநாயகா, இப்போது அதிபராக இருக்கும் சந்திரிகாவின் தாய்.

1960: இங்கிலாந்தைச் சேர்ந்த பிரான்சிஸ் சிசஸ்டர் படகில் 40 நாள் பயணம் செய்து அட்லாண்டிக்கடலைக் கடந்து நியூயோர்க் போய்ச் சேர்ந்தார்.

1973: பசிபிக் சமுத்திரத்தில் உள்ள முரோரோ பகுதியில் பிரான்ஸ் அணுகுண்டு சோதனை நடத்தியது.

1976: அயர்லாந்தில் உள்ள இங்கிலாந்து தூதர் கிறிஸ்டோபர் எவார்ட் பிக்ஸ், குண்டு வைத்து கொல்லப்பட்டார். அவர் வீட்டு அருகே காருக்கு கீழே வைக்கப்பட்ட குண்டு வெடித்தது.

1994: ரஷியாவில் நாடு கடத்தப்பட்ட எழுத்தாளர் அலெக் சாண்டர்சோல் செனட்சின் 20 ஆண்டுகளுக்கு பிறகு மொஸ்கோ வந்தார்.

1998: முதலாவதாக வான்வெளியில் பறந்த அமெரிக்க வீரர் ஆலன் ஷெப்பர்டு 74–வது வயதில் மரணம் அடைந்தார்.

ஜேர்மனியில் இரு இடங்களில் வெரித்தாஸ் வெள்ளிவிழா

தமது உயிருள்ளவரை ஈழத் தமிழர்படும் இன்னல்களை உலகுக்கு அறிவிக்கும் பயனுள்ள பணி தொடரும் என வெரித்தாஸ் வானொலி இயக்குநர் அருட்திரு.ஜெகத் கஸ்பர் அடிகளார் ஜேர்மனியில் சூளுரைத்தார். உண்மையை எடுத்துச் சொல்லும் தமது உண்மையின் குரல் என்றும் ஒலிக்கும் என்றும் அவர் உறுதிஎடுத்துக்கொண்டார்.

வெரித்தாஸ் வானொலி தமிழ்ப்பணியின் வெள்ளிவிழா ஜேர்மனியில் ஜூன்மாதம் 29ம் திகதி வெள்ளியன்று பேர்லின் நகரிலும், 30ம் திகதி சனியன்று எசன் நகரிலும் மண்டபம் நிறைந்த மக்கள் மத்தியில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இவற்றில் கலந்துகொண்டு சிறப்புரை யாற்றியபோதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

எசன் நகரில் வெரித்தாஸ் தமிழ் வானொலியின் வெள்ளிவிழாவுக்கு 1200 க்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர். வெள்ளிவிழாவுக்கு சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்திருந்த வெரித்தாஸ் வானொலியின் தமிழ்ப்பணிக்குழுவின் பொறுப்பாளர் மதுரைப் பேராயர் ஆரோக்கியசாமி, ஆண்டகையின் பிரதிநிதி திருச்சி மறைமாவட்ட ஆயர் அன்ரனி டிவோற்றா, மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப், அருட்பணி பாளர் வின்சண்ட் சின்னத்துரை, அருட்பணியாளர் ஜெகத் கஸ்பார், பேராசிரியர் அருட்கலாநிதி எஸ்.கே.இம்மனுவேல், ஜேர்மன் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகப் பொறுப்பாளர் பெர்னாட்றெக்னோ, வூப்பற்றால் நவதுர்க்கை அம்மன் ஆலயக் குருக்கள், சிவசிறி சிறிகரக் குருக்கள், ஆன்மிகப்பணியகத்தின் துணைக்குழு கிறிபில்ட் அல்ட்ட்கோலன் ஆகியோர் மங்கலவாத்தியம் முழங்க மலர் மாலை அணிவித்து விழாமேடைக்கு அழைத்துவரப்பட்டனர்.

ஆயர்களான இராயப்பு யோசப், அன்ரனி டிவோற்றா ஆகியோர் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர். ஆயர் றெக்னோ, சிவசிறி சிறிகரகுருக்கள் ஆகிய இருவரின் இறைவணக்கத்தையடுத்து அகவணக்கம் இடம்பெற்றது. திருமதி. திரேசா சூசைப்பிள்ளையின் வரவேற்புரையையடுத்து விழா ஏற்பாடுகளைப் பொறுப்பேற்றிருந்த பேராசிரியர் அருட்கலாநிதி எஸ்.ஜே.இம்மானுவேல் ஆரம்பஉரையினை நிகழ்த்தினார்.

வெரித்தாஸ் வானொலியின் தமிழ்ப் பணியின் வெள்ளிவிழா நிகழ்ச்சிகளில் எழுச்சி நடனங்களும் இடம்பெற்றன. நடன ஆசிரியைகளான திருமதி. வானதி தேசிங்குராஜா, சாவித்திரி இம்மானுவேல், றெஜினி சத்தியகுமார் ஆகியோரின் நடனமாணவிகளின் நடனமும், செல்வி, மிருதுளா இராஜகுமாரனின் தனி நடனமும் இடம்பெற்றது.

வெரித்தாஸ் தமிழ்ப் பணியை வாழ்த்தி மட்டுவில் ஞானக்குமரன், அன்ரன்யூட் ஆகியோரின் கவிதைகள் இடம்பெற்றன.

பெர்லினில் நடைபெற்ற வெள்ளிவிழா நிகழ்வுகளை மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசப், பெர்லின் ஆலயகுரு இராமநாத சிவாச்சாரியார் ஆகிய இருவரும் இறைவணக்கத்துடன் ஆரம்பித்தனர். நடனங்களை தயானா நிக்கல்சினதும், ஈழத்தமிழ் மகளிர் மன்றத்தினதும், ஆன்மீகப் பணியகத்தினதும், ஆசிரியை ரேனுகா, காந்தராசாவினதும் மாணவிகள் வழங்கினர்.

பெர்லின், எசன் ஆகிய நகரங்களில் நடைபெற்ற விழாக்களில் வில்லுப்பாட்டு ராஜனின் வில்லிசையும் இடம்பெற்றது. பெர்லினில் இறைநாடகம் ஒன்றும் அரங்கேற்றப்பட்டது.

வெரித்தாஸ் தமிழ்ப் பணியின் சேவையைப் பாராட்டி அருட்திரு. கஸ்பர் அடிகளார் பொன்னாடைபோர்த்தி கௌரவிக்கப்பட்டார். 'உண்மையின் காவலர்' 'அறத்தமிழ் பரிதி' ஆகிய பட்டங்களும் அளிக்கப்பட்டன. பெர்லின் விழாவில் தமிழ்ப்பிரமுகர் திரு.வே.செ. குணரத்தினம் வரவேற்புரை வழங்கினார். அங்கு நன்றி உரையை ஆன்மீகப் பணியகத்தைச் சேர்ந்த திரு. ஞானேஸ்வரன் வழங்கினார். பெர்லின் நிகழ்ச்சிகளை எவ்றே தொகுத்து வழங்கினார்.

எசென் வெள்ளிவிழா நிகழ்ச்சிகளை திரு.லோ. வலன்ரைன் தொகுத்து வழங்கினார். நன்றி உரையை தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகச் செயலர் திரு. கமிலஸ் தெரிவித்தார்.

இரண்டு நிகழ்வுகளிலும் வெரித்தாஸ் வானொலியின் தமிழ்ப்பணி வெள்ளிவிழா மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது.

அத்துடன் வன்னியில் தயாரான பேதுருப்பிள்ளையின் 'தூரத்து முற்றம்' என்ற புத்தகமும் இங்கு வெளியிட்டு வைக்கப்பட்டது.

வெரித்தாஸ் வானொலி தமிழ்ப் பணியின் வெள்ளிவிழாவுக்கு வாழ்த்துரை வழங்கிய தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் செய்தியை தமிழீழ விடுதலைப் புலிகளின் ஜேர்மன் பணியகத்தைச் சேர்ந்த திரு.செந்தில் இரு நிகழ்ச்சிகளின் போதும் வாசித்தார்.

இருவிழாக்களிலும் சிறப்பு விருந்தினர்கள் சிறப்புரையாற்றினார்கள். உண்மை நிகழ்வுகள் தணிக்கை இல்லாமல் வெரித்தாஸ் வானொலியில் வெளிவருவதாகவும், மனிதஉரிமை பாதுகாப்பிற்கு அது பெரிதும் துணைபுரிவதாகவும் மன்னார் ஆயர் இராயப்பு யோசப் குறிப்பிட்டார்.

'உண்மைக்கு நாம் காட்சி சொல்லவேண்டும். சமாளிப்பு என்பது உண்மைக்கு ஒத்தூதாது. உண்மையை உண்மையாகச் சொல்வதுதான் எங்களின் கடமை. நாம் சிங்கள மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல. ஆனால் துன்பப்படும் மக்களின் பக்கம் நிற்கிறோம் என அருட்திரு. கல்பார் அடிகளார் தெரிவித்தார்.

- வீ. ஆர். வரதராஜா.



அகல்விளக்கு நிகழ்வுகள்

சுற்று சூழல் பாதுகாப்பில் சென்டெனி தமிழ் சங்கம்

பாரிசின் புற நகரான சென் தெனியில் 12.05.01 செவ்வாய்க் கிழமை அன்று சுற்றுப்புற சூழல் பாதிப்பினால் ஏற்படும் கெடு தல்கள் பற்றி, கலந்துரையாடல் ஒன்று, சென்-தெனி நகரசபையால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இன்று உலகில் பல அழிவுகள் நடந்துகொண்டிருக்கின்றன. இது ஏன், எப்படி என விளக்கங்களும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. இக்கலந்துரையாடலில் தமிழ்ச்சங்கம் சென்தெனி சார்பாக திரு. தேவமனோகரன் உரையாற்றினார். அவர், எமது தாயகத்தில் போரினால் ஏற்படும் அழிவுகளால், எம்மக்கள் அனுபவிக்கும் துன்பங்களைப் பற்றி விளக்கினார். தொடர்ந்து அவர் கூறுகையில், எமது மண்ணில் சிங்கள இராணுவத்தின் குண்டுத் தாக்குதல்களினால் எம் தேசத்தில் உள்ள இயற்கை வழங்கள் அழிந்துகொண்டிருக்கின்றன. சிங்கள இராணுவ நடவடிக்கைகளினால் தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து வன்னிசென்று மரங்களுக்குக் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என எம் மண்ணில் தமிழ் மக்களின் நிலைமை குறித்து எடுத்து விழக்கினார். இக்கலந்துரையாடலில் சிறப்பு விளக்கம் அளித்தவென, பிரான்ஸ் சுற்றாடல் அமைச்சரின் செயலாளர் ஒருவர் தந்திருந்தார். பின் அவர் உரையாற்றுகையில், பாலஸ்தீன மக்கள்போல ஈழத்தமிழ் மக்களும், அவர்களது நாட்டில் பல துன்பங்களை அனுபவிக்கிறார்கள் என்றார். அங்கு வந்திருந்த அனைவரும் ஈழத்தமிழ்மக்கள் படும் துன்பங்களை அறிந்து கொண்டார்கள். பின், பிரெஞ்சு தமிழ் சங்கம் சார்பாக, பிரெஞ்சு தமிழர் சங்கம் குசான்வில், பிரெஞ்சு தமிழ்ச்சங்கம் ஒபர்வில்லியே ஆகிய சங்கங்களுடாக ஒழங்கு செய்யப்பட்டிருந்த இரு நடனங்களையும் அனைவரும் இரசித்துப்பார்த்தார்கள்.

அன்றைய கலந்துரையாடலில் தலைமைத்துவமாக 'ஈழத் தமிழர்படும் துன்பங்கள்' அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

- காந்தன்.

நோர்வே ஒஸ்லோவில் மாவீரர் நினைவாக தமிழர் விளையாட்டு விழா 2001

தரும நெறிப் போர்முறையால்; தாயினும் உயர்ந்த எங்கள் தமிழீழ தேசத்தை.. தளராத தலைமையின்கீழ் போராடி மீட்டு வரும் புனிதமான பணியினிலே, மாவீரராகி விட்ட மனிதகுல மாணிக்கங்களை நினைவுகூரும் பிறிதொரு பெருநிகழ்வாக... நோர்வே ஒஸ்லோ Stovnerமைதானத்தில், 30.06.01 சனிக்கிழமையும், 01 07.01 ஞாயிற்றுக்கிழமையும் எழுப்பி இரசிகர்கள் ஆரவாரித்தார்கள்!

இதைத்தொடர்ந்து சுடர் ஏற்று வைபவம் நிகழ்ந்தது. பெருந் தொகையான சிகப்பு- மஞ்சள் நிற பலூன்களும் வானில் பறக் கவிடப்பட்டன. நீலவானிடை மிதந்து; நதிதாண்டி... கடல் தாண்டி... நாடுகள்தாண்டி, விண்மீனின் வண்ணம் கண்டு... மதியொளியில் மிதந்தபடி.. பக

மாவீரர் நினைவாக தமிழர் விளையாட்டு விழா 2001 இரு தினங்கள் வெகு விமரிசையாக நடைபெற்றது.

மப்பு மந்தாரமும்-மழைத்தூறலோடு... மாவெயிலும், காட்சி மாற்றம் போட்ட காலநிலையாயினும், மட்டற்ற உற்சாகத்தோடு மக்கள் அங்கே திரண்டிருந்தார்கள்.

செப்பரிய செந்தமிழீழத்தின் செம்மை செறிந்த தேசியக் கொடியும், ஒப்பரிய சமாதான சிந்தை மிகுந்த நோர்வே தேசத்தின் கொடியும் சேர்ந்து பட்டொளி வீசிப்பறக்க.. அதன் கீழ் போட்டிகளில் பங்குபெறும் கழகங்களின் வண்ணக்கொடிகள் பறக்க; விளையாட்டு அரங்கம் எழில்பெற்றுத் தோன்றியது!! பாண்டுவாத்திய இசைமுழங்க... மாணவர்களின் சீரணிநடை சிறப்போடு நிகழ்ந்தது! தடந்தோள் உயர்த்தியவர் தாளம் மிதித்தாடி உள்ளத்து உந்துவிசை-சமராடும் பாவத்தில்; குறியீட்டு முத்திரையாக... அவர் காட்டினார் உடற்பயிற்சி!! இந்த அணிநடைக்கோலத்தின் உச்சமாய்... பங்குகொண்ட அணியினர் தங்கள் கைகளில் தாங்கிய தமிழீழ தேசத்தின் பகுதிப் படங்களை ஒன்றாய் இணைத்து; முழுமையான தாயக தேசப்படத்தை தூக்கிக் காட்டியபோது கரகோசம் லவனின் பார்வையிலே இந்த பலூன்கள், எங்கள் தாயகத்து நிலமிறங்கி... எங்களின் சுதந்திர நாகத்தை சொல்லும்!!! என்ற பொருள்பட பொதிந்த கவிக் குரல் எழுந்து பரவிய பாங்கு நிகழ்ச்சியின் ஆரம்பத்தை களை



கட்ட வைத்தது! Toyen விளையாட்டுக் கழகம், 11 Star விளையாட்டுக் கழகம், Oslo United விளையாட்டுக் கழகம், Northboys விளையாட்டுக் கழகம் என்பன கழக ரீதியான போட்டிகளில் பங்குகொண்டு ஆர்வப்பெருக் கோடு மோதிக்கொண்டன.

தனிப்பட்ட நபர்கள் பார்வையாளர்களுக்காக நடாத்தப்பட்ட போட்டிகளில் பங்குகொண்ட னர்.

பல்வேறு பராய அடிப்படையில் நடைபெற்ற இந்த விரிந்த போட்டியில் நோர்வே வாழ் தமிழர்கள் தங்கள் மெய்வல்லமையை மெச்சக்கூடிய வண்ணம் நிரூபித்தார்கள்!

இவற்றுள் கிளித்தட்டு, சாக்கு ஓட்டம், கயிறு இழுத்தல், சங்கீதக்கதிரை, சயிக்கிள் சங்கீதக் கதிரை, தடைஓட்டம், அஞ்சல் ஓட்டங்கள் வினோத உடைப் போட்டி என்பன இரசிகர்களின் பேராரவாரத்தை பெற்றது குறிப்பிடத்தக்கது. திரு.திருமதி அன்ரன் கபிரியல் தம்பதியினர்... மேற்படி விளையாட்டுப்போட்டியின் பிரதம விருந்தினராக வருகை தந்து வெற்றிபெற்ற வீரர்- வீராங்கனைகளுக்கும், வெற்றி பெற்ற கழகங்களுக்கும் வெற்றிக் கிண்ணங்களை வழங்கிச் சிறப்பித்தனர்.

நினைவுகளிலும்-கனவுகளிலும் நாம் நினைத்துப் பார்க்கும் தாய் நிலத்து உணவுகளாகிய கூழ், குழல்பிட்டு, அப்பம், தோசை, ஆட்டு இறைச்சிப் பிரட்டலோடு சோறு, கொத்து றொட்டி, கரம் சுண்டல் என பல்வேறு உணவு வகைகளை... சுடச்சுடத்தயாரித்து, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் மிக்க மலிந்த விலையில் விற்று, விழா இரசிகர்களுக்கு விருந்துவைத்து, தமிழீழத்தில்தான் நிற்கிறோமா? என்ற செம்மையுறு கற்பனையில் எம்மைச் சிறகடிக்க வைத்தனர்!!

தன்னிகரில்லாத் தமிழ்த் தொண்டில் தொடர்ச்சியாக முயன்றுவரும், நோர்வே தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் இனிய தொண்டர்களின் இன்னுமொரு சாதனையாக இந்தவிழா ஒழுங்குகள்.. மிளிர்ந்தன.

- கிருஷ்ணா.

கீழ்ப்பிரிவில் பெண்கள் அணி சிறந்த வீராங்கனையாக தொய்பன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த செல்வி. சுசிலசாந்தி குணரெத்தினமும், கீழ்ப்பிரிவில் ஆண்கள் அணி சிறந்த வீரராக 11 Star விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த செல்வன் யோனேஸ் மார்க்கூஸ்சும், மேற்பிரிவில் பெண்கள் அணி சிறந்த வீராங்கனையாக Stovner விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த தமிழினி சிவலிங்கமும், மேற்பிரிவில் ஆண்கள் அணி சிறந்த வீரராக Northboys விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த டெலன்சிங் செல்வநாயகமும் தெரிவாகி கிண்ணங்களை சுவீகரித்துக்கொண்டார்கள்

மாவீரர் நினைவு தமிழர் விளையாட்டு விழா 2001ல் கழகங்கள் பெற்றுக்கொண்ட புள்ளி விபரம்:

கழகம்:	சிறார்பிரிவு புள்ளி	மேற்பிரிவுபுள்ளி
செந்தமிழ் வி.க.	35	143
Stovner வி.க.	61	142
Toyen வி.க.	52	79
தமிழ் வி.க.		16 57
11 Star வி.க.	16	32
Northboys வி.க.	–	91

இந்த ஆண்டின் சிறார் பிரிவு வெற்றி விருதை Stovner விளையாட்டுக்கழகமும். இந்த ஆண்டின் வளர்ந்தோர் பிரிவு வெற்றிவிருதை செந்தமிழ் விளையாட்டுக்கழகமும் பெருத்த வாழ்த்தொலியோடு பெற்றுக் கொண்டன.

ஸ்ரீகல்யாண சுவாமி ஆலயத்தில் ஆன்மீகச் சொற்பொழிவு

சுவிஸ் பேர்ண் சிறீ கல்யாண சுவாமி தேவஸ்தான விஞ்ஞாபன தினத்தில் ஆன்மீக சொற்பொழிவுகள் தொடர்ச்சியாக இடம் பெற்றுள்ளன.

அறுபத்து நான்காவது நாயன்மார் ஆகிய 'திருமுருகவள்ளல் வாரியார் சுவாமிகளின் 'வாரியாக வான் புகழ் வள்ளுவரின் வாய்மொழிகளை வாரிவழங்கி அருணகிரிநாதரின் அற்புத தமிழுக்கு விடயங்களை கூறி கம்பரின் கவிதை நயங்களுக்கு களிப்பூட்டி

ஔவையார், பட்டினத்தார், காரைக்கால் அம்மையார், வள்ளலார், தாயுமானசுவாமிகள், மூர்த்தி நாயனார் இன்றைய மாணவர்களுக்கும், மங்கையர்களின் பெருமைகளையும், சமுதாய விழிப்புணர்ச்சி கருத்துக்களையும் வாரி வழங்கி மக்களை சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்து நால்வர் காட்டிய நன்னெறிகளை நாடெங்கிலும் தழைக்க பாடுபட்டுவரும் நாவுக்கரசியாம் இலங்கையில் சைவசிரோண்மணியாம், சிவசெல்சில் ஆன்மீக அருட்செல்வியாம் தே.ச. மங்கயற்கரசியின் ஆன்மீக சொற்பொழிவுகளை நூற்றுக் கணக்கான மக்கள் கேட்டு இன்புற்றுள்ளனர்.

- பருதி

நெதர்லாந்தில்

தமிழர் விளையாட்டு விழா 2001

காலம்: 28.07.2001 சனிக்கிழமை

நேரம்: காலை 9 மணி

இடம்: Tak 90 மைதானம்

Aagje dekenlaan, Den Haag.

கயிறு இழுத்தல், முட்டி உடைத்தல், சாக்கு ஓட்டம், சங்கீதக்கதிரை, சிறுவர்களுக்கான ஓட்டப்போட்டிகள், உதைபந்தாட்டம், மரதன் ஓட்டம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

ஈழத்தமிழர் விளையாட்டு ஒன்றியம்–நெதர்லாந்து

தொலைபேசி: 0251 253727

டென்மார்க்கில் 8வது ஆண்டாக

கரும்புலிகள் ஞாபகார்த்த...

ஐரோப்பா கிண்ணம் - 2001

7 நபர் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

தமிழீழ விடுதலைப் புலிகள் டென்மார்க் கிளை கரும்புலிகள் ஞாபகார்த்தமாக நடாத்தும் மாபெரும் 7 நபர் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி Bording நகரில் எதிர்வரும் 25.08.2001 சனிக்கிழமை நடைபெறவுள்ளது. போட்டியில் பங்குகொள்ள விரும்பும் கழகங்கள் 04.08.2001 ற்கு முன்னர் தமது விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

LTTE
Post box - 47, 7400 Herning

மேலதிகத் தொடர்புகளுக்கு:
சங்கர்: 75310662
அலுவலகம்: 97217649

நுழைவுக்கட்டணம்: 350 டெனிஸ் குரோனர்
போட்டிகள் ஆரம்பிக்க முன்னர்
நுழைவுக்கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.

வெளிநாடுகளிலிருந்து பங்குபற்றும்
கழகங்களுக்கு
உணவு, தங்குமிட வசதி இலவசம்.

இப் போட்டியானது TBU (Tamilsk Boldspil Union)வின் 7 நபர் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிக்கான விசேட விதிகளுக்கமைய இடம்பெறும்.

ஐரோப்பா வாழ் தமிழர்களை ஒன்றிணைக்கும் ஏடு

கறுப்பு		
அளவு	பெறுமதி	
	Euro	Franc
27 x 18.4	762.31	5000
27 x 9	457.39	3000
18.4 x 13.4	457.39	3000
18.4 x 8.6	304.92	2000
13.4 x 9	243.94	1600
9 x 8.7	152.46	1000
9 x 6.6	121.97	800
18.4 x 3.1	121.97	800
6.5 x 4.4	76.23	500
9 x 3.1	76.23	500
4.4 x 3.1	53.36	350

ஐரோப்பிய தமிழர் தகவல்

களஞ்சியம்

ஐரோப்பா வாழ் தமிழர்களுக்கு பயன்தரக்கூடிய தகவல்களை உள்ளடக்கிய வழிகாட்டி நூல்

இது ஓர் ஈழமுரசு வெளியீடு

2002ல் வெளிவர இருக்கும் இத் தகவல் களஞ்சியமானது ஐரோப்பா வாழ் தமிழ் மக்களை நாடு ரீதியாக, அவர்களின் விபரங்கள், மற்றும் முக்கிய விடயங்களை உள்ளடக்கியதாக வெளிவரவுள்ளது. தங்களின் விபரங்களை விளம்பரமாகவோ அல்லது தகவல்களாகவோ வெளியிட விரும்பின் 15.09.2001 இற்கு முன்னர் எமக்கு அனுப்பி வைக்கவும். அஞ்சல் உறையின் மேல் இடதுபக்க மூலையில் 'தகவல் களஞ்சியம்' என்று குறிப்பிட்டு ஈழமுரசின் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

வர்ணம்		
அளவு	பெறுமதி	
	Euro	Franc
27 x 18.4	1524.62	10000
27 x 9	914.78	6000
18.4 x 13.4	914.78	6000
18.4 x 8.6	609.84	4000
13.4 x 9	487.88	3200
9 x 8.7	304.92	2000
9 x 6.6	243.94	1600
18.4 x 3.1	243.94	1600
6.5 x 4.4	152.46	1000
9 x 3.1	152.46	1000
4.4 x 3.1	106.72	700

விளம்பரம் தொடர்பான ஏனைய விளம்பரங்களுக்கும், ஆக்கபூர்வமான ஆலோசனைகளுக்கும் தொடர்புகொள்ளவும்:

EELAMURASU
22, Rue Perdonnet, 75010 Paris, FRANCE.
Tél: 00 33 (1) 40 37 63 63
Fax: 00 33 (1) 40 37 64 64
E.Mail-kalangiam@worldonline.fr

களஞ்சியம்

தாங்கள் தெரிவு செய்யும் விளம்பர அளவு மற்றும் விபரங்களை பூர்த்தி செய்து எமக்கு அனுப்பிவைக்கவும்.

பெயர்: .....

முகவரி: .....

.....

.....

தொலைபேசி: .....

தொலை நகல்: .....

கைத்தொலைபேசி: .....

மின்னஞ்சல் (E.mail): .....

தாங்கள் தெரிவு செய்யும் அளவு

தங்கள் தெரிவின் விபரம்

கறுப்பு/மஞ்சள்

வர்ணம்

ஸ்ரீ குரு ராகவேந்திரா ஓம்சக்தி ஜோதிடம்

பரம்பரையாக தொழில் புரியும் ஜோதிட நிபுணர்

முகுடாசுசாஸ்திரி

இந்தியாவில் இருந்து வருகை தந்திருக்கும் பிரபல ஜோதிட நிபுணர். கைரேகை, நாம நட்சத்திரம், குடும்ப ஜோதிடம் ஆகியவற்றை நடந்தவை, நடக்கப்போகிறவை பற்றி துல்லியமாக கூறுவார். உங்கள் கல்வி, உத்தியோகம், வியாபரம், வெளியூர் பயணம், விவாகம், பிள்ளைகள் யோகம், குடும்பப் பிரச்சனைகள், கஷ்ட நஷ்டங்கள் பற்றி விபரமாகத் தெரிந்துகொள்ள இவரை ஒருமுறை வந்து பாருங்கள்

VANEE BUILDING
317 High Street North
Manor Park
London E12 6SL
Tel:- 020 8552 0930
Mobile 077 0155 0781

ஸ்ரீ குரு ராகவேந்திரா ஓம்சக்தி ஜோதிடம்

பரம்பரையாக தொழில் புரியும் ஜோதிட நிபுணர்
ஈஸ்வரையா சாஸ்திரி அவர்கள்

இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் பிரபல ஜோதிட நிபுணர் கைரேகை, நாம நட்சத்திரம், ஜன்ம நட்சத்திரம், குடும்ப ஜோதிடம் ஆகியவற்றை, தெய்வ அருளால் நடந்ததை, நடக்கப் போகின்றவை பற்றித் துல்லியமாகக் கூறுவார். உங்கள் கல்வி, உத்தியோகம், வியாபாரம், வெளியூர், பயணம், விவாகம், பிள்ளைகள், யோகம், குடும்பப் பிரச்சினைகள், கஷ்ட நஷ்டங்கள் பற்றி விபரமாகத் தெரிந்துகொள்ள அவரை ஒருமுறை வந்து பாருங்கள்.

குரு	செவ்வாய்	சுக்கிரன்	புதன்
சனி	ராசி நிலை		சந்திரன்
சனி			சூரியன்
குரு	செவ்வாய்	சுக்கிரன்	புதன்

Vanee Building
317, High Street North,
Manor Park, London E12 6SL

Tel: 020 8552 0930
Mobile: 07949706626

K.R.S. Enterprises

537 High Road,
Wembley Middx HA0 2DJ

Tel: 0208 902 4590
Mobile: 07780 760 459

வான் கோள் விதியை கண்டுபிடித்த கெப்லர்

வான்கோள்களின் இயக்க விதிகளைக் கண்டுபிடித்தவர் ஜோகன்னஸ் கெப்லர் (Johannes Kepler) ஆவார். இவர், ஜேர்மனியில் வெய்ல் டெர் ஸ்டாட் என்னும் நகரில் 1571 ஆம் ஆண்டில் பிறந்தார். புகழ்பெற்ற பிரஸ்ஸிய வானியல் வல்லுநராகிய கோப்பர்னிக்கஸ், 'கோளங்கள் கதிரவனைச் சுற்றி வருகின்றனவேயன்றி, நிலவு லகைச் சுற்றி வரவில்லை' என்னும் தமது கோட்பாட்டினை விளக்கும் நூலை (De revolutionibus orbium Coelestium) இவர் பிறப்பதற்கு 28 ஆண்டுகளுக்கு முன்னர்தான் வெளியிட்டிருந்தார். கெப்லர், டியூபிங்கன் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்றார், 1588ம் ஆண்டில் இளங்கலைப் பட்டமும், மூன்றாண்டுகளுக்குப் பிறகு முதுகலைப்பட்டமும் பெற்றார். கோப்பர்னிக்கசின் சூரிய மையக் கோட்பாட்டினை அவர் காலத்திய விஞ்ஞானிகளில் பெரும்பாலோர் ஏற்க மறுத்தனர். ஆனால், கெப்லர் டியூபிங்களில் படித்துக் கொண்டிருக்கும்போதே சூரிய மையக் கோட்பாடு மிகத் தெளிவாக விளக்கிக் கூறப்பட்டதைக் கவனமாகக் கேட்டார். விரைவிலேயே அந்தக் கோட்பாட்டில் அவருக்கு ஆழ்ந்த நம்பிக்கை ஏற்பட்டது.

டியூபிங்கன் பல்கலைக்கழகத்தை விட்டு நீங்கிய பின்பு, கெப்ளர், கிராஜ் நகரிலிருந்த கலைக் கழகத்தில் பல ஆண்டுகள் ஒரு பேராசிரியராகப் பணியாற்றினார். அங்கு பணிபுரியும்போது அவர் வானியல் பற்றிய தமது முதலாவது நூலை எழுதினார். (1596). அந்த நூலில் அவர் விளக்கிய கோட்பாடு முற்றிலும் தவறாகிப் போய்விட்ட போதிலும், கெப்லரின் கணிதத் திறனையும், தற்சிந்தனையாற்றலையும் அந்த நூல் வெளிப்படுத்தியது. அந்த நூலைப் படித்த புகழ்பெற்ற வானியல் அறிஞராகிய டைக்கோ பிராகி (Tycho Brahe) பிரேகு நகர் அருகிலிருந்த தமது ஆராய்ச்சிக் கூடத்தில் தமக்கு உதவியாளராக வரும்படி கெப்ளரை அழைத்தார்.

டைக்கோவின் அழைப்பை ஏற்றுக்கொண்ட கெப்லர், 1600ம் ஆண்டு ஜனவரியில் அவருக்கு உதவியாளராகச் சேர்ந்தார். எனினும், இடைப்பட்ட மாதங்களில், புனித ரோமானியப் பேரரசர் இரண்டாம் ரூடால்ஃபை இவருடைய ஆற்றல் வெகுவாகக் கவர்ந்துவிடவே, அவர், இவரை டைக்கோவுக்கு அடுத்தபடியாக அரசவைக் கணித மேதையாக நியமித்தார்.

டைக்கோ பிராகிக்குப் பின்வந்தவர் என்ற முறையில், டைக்கோ பல்லாண்டுகள் கோளங்கள் குறித்து கவனமாக ஆராய்ந்து எழுதி வைத்திருந்த ஏராளமான ஆராய்ச்சிக் குறிப்புகள் கெப்லருக்கு வந்தடைந்தன. தொலை நோக்காடி (Telescope) கண்டுபிடிக்கப்படுவதற்கு முன் பிருந்த தலை சிறந்த வானியலறிஞர்களில் இறுதியானவராக விளங்கிய டைக்கோ உலகம் கண்டிராத உன்னிப்பான துல்லியமான கூர்நோக்காராய்ச்சியாளராகவும் திகழ்ந்தார். அவருடைய ஆராய்ச்சிக் குறிப்புகள் அனைத்தும் அருமதிப்புள்ளவையாக விளங்கின. கெப்ளரின் காலத்தில், கோளங்களின் இயக்கம் குறித்து, கோப்பர்னிக்கசின் சூரிய மையக் கொள்கையும், டாலமியின் பழைய பூவுலக மையக் கொள்கையும் (Gocentric theory) வழக்கில் இருந்தன. இவை தவிர மூன்றாவது கொள்கை ஒன்றையும் டைக்கோ வகுத்திருந்தார். டைக்கோவின் ஆராய்ச்சிக் குறிப்புகளை மிகக் கவனமாகக் கணிதமுறைப்படி பகுப்பாய்வு செய்வதன் மூலமாக இவற்றுள் எந்தக் கொள்கை சரியானது என்பதைத் துல்லியமாக உறுதியிட்டு விடலாம் என்று கெப்லர் நம்பினார். ஆனால், பல ஆண்டுகள் அரும்பாடுபட்டுக் கணிதக் கணிப்புகள் செய்து பார்த்தபோது டைக்கோவின் ஆராய்ச்சிக் குறிப்புகள் அந்தக் கொள்கைகளில் எதனுடனும் ஒத்திருக்கவில்லை என்பதைக் கண்டு கெப்லர் மனக்குழப்பமடைந்தார்.

இறுதியில், சிக்கல் என்ன என்பதைக் கெப்லர் உணர்ந்துகொண்டார். அவரும், டைக்கோ பிராகி, கோப்பர்னிக்கஸ் போன்ற மரபு வானியலறிஞர்கள் அனைவரையும் போன்றே, கோளங்களின் சுற்றுப் பாதைகள் (Orbits), வட்டங்களை அல்லது வட்டங்களின் தொகுதிகளைக் கொண்டிருப்பதாக அனுமானித்திருந்தார். ஆனால், உண்மையில், கோளங்களில் சுற்றுப் பாதைகள் வட்டவடிவில் இல்லாமல், நீள் வட்டவடிவில் (Elliptical) இருக்கின்றன என்பதைக் கெப்லர் அறிந்தார்.

இந்த அடிப்படையான தீர்வைக் கண்டுபிடித்த பின்னருங்கூட, தமது கோட்பாடு, டைக்கோவின் ஆராய்ச்சிகளை ஒத்திருக்கின்றதா என்பதை உறுதிப்படுத்துவதற்காகப் பல மாதங்கள் வரை மனச்சோர்வூட்டக்கூடிய மிகச் சிக்கலான கணிப்புகளில் கெப்லர் ஈடுபட்டிருந்தார். அவருடைய சிறந்த நூலாகிய 'புதிய வானியல்' (Astronomia Nova) 1609 ஆம் ஆண்டில் வெளியாகியது. அதில் வான்கோள்களின் இயக்கம் பற்றிய தமது முதல் இரு விதிகளை அவர் விளக்கியிருந்தார். 'ஒவ்வொரு கோளமும், சூரியனைக் குவிமையமாகக் கொண்டு, சூரியனைச் சுற்றி ஒரு நீள்வட்டப் பாதையில் இயங்குகிறது' என்பது முதல் விதியாகும். இரண்டாம் விதி, 'ஒரு கோளம் சூரியனுக்கு அருகே இருக்கும்போது அதிக விரைவாக இயங்குகிறது; கோளத்தையும், சூரியனையும் இணைக்கும்கோடு, சமகால அளவுகளில் சம அளவுப் பரப்புகளை அளாவிச் செல்லும் வகையில் ஒரு கோளத்தின் வேகம் வேறுபடுகிறது' என்று கூறுகிறது. பத்தாண்டுகளுக்குப் பிறகு கெப்லர் தமது மூன்றாவது விதியை வெளியிட்டார். 'ஒரு கோளம், சூரியனிலிருந்து எவ்வளவு அதிக தூரத்தில் இருக்கிறதோ அவ்வளவு அதிக காலம் அது அதன் ஒரு சுழற்சியை முடிப்பதற்குப் பிடிக்கிறது. ஒரு சுழற்சிக்கான கால அளவின் இருமடிப்பெருக்கம் சூரியனிலிருந்து கோளத்தின் தொலைவின் மும்முடிப் பெருக்கத்திற்கு சரிசம விகித அளவில் இருக்கும்' என்பது இந்த விதியாகும்.

கெப்ளரின் விதிகள், சூரியனைச் சுற்றும் கோளங்களின் இயக்கங்களை முழுமையாகவும், துல்லியமாகவும் விவரித்ததன் மூலமாக கோப்பர்னிக்கஸ், கலிலியோ போன்ற மேதைகளுக்குக் கூட பிடிபடாமலிருந்த ஓர் அடிப்படையான வானியல் சிக்கலுக்குத் தீர்வு காண முடிந்தது. எனினும், கோளங்கள் ஏன் நீள்வட்டப் பாதையில் இயங்குகின்றன என்பதை கெப்லர் விளக்கிக் கூறவில்லை. இதற்கு தக்க விளக்கமளித்தவர் அதே நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த ஐசக் நியூட்டனேயாவார். ஆயினும், நியூட்டனின் மாபெரும் இணைப் பாக்கத்திற்கு இன்றியமையாத முன்னுரையாக கெப்லரின் விதிகள் அமைந்தன. ('மற்ற மனிதர்களை விட அதிக தொலைவுக்கு என்னால் பார்க்க முடிந்தது என்றால், அதற்கு, நான் பேருருவம் வாய்ந்தவர்களின் தோள்களில் நின்றுகொண்டு பார்த்ததே காரணமாகும்' என்று நியூட்டன் ஒரு சமயம் கூறினார். நியூட்டன் குறிப்பிட்ட பேருருவம் படைத்தவர்களில் கெப்லரும் ஒருவர் என்பதில் ஐயமில்லை)

வானியலுக்கு கெப்லர் ஆற்றியுள்ள தொண்டு, கோப்பர்னிக்கசின் பணிக்கு இணையானது எனலாம். ஒருவகையில், கெப்லரின் சாதனை, கோப்பர்னிக்கசின் சாதனையை விட அதிக முக்கியத்துவம் வாய்ந்தது எனல்வேண்டும். கெப்லரின் பணி, அதிக தற்சிந்தனையுடையது. அவருக்கு எதிர்ப்பட்ட கணிதக் கணிப்புச் சிரமங்கள் மிகப் பல. அவருடைய காலத்தில் கணிதக் கணிப்பு முறைகள் இன்றுள்ளது போல் அத்துணையளவு முன்னேறியிருக்கவில்லை. கெப்லரின் கணிப்புப் பணிகளை எளிமையாக்க அப்போது எந்திரங்களும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கவில்லை.

உலக வரலாற்றில் பதிவானவர்கள்

உலக வரலாற்றில் கடந்த 2000 ஆண்டுகளுக்கு மேலாக மனித வாழ்வியலில் பல்வேறு மாறுதல்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த பிரசித்தி பெற்ற பலரது விபரங்கள் இத் தொடரில் வெளிவருகின்றன. மைக்கேல் வெறச் ஹார்ட் எழுதிய 'புதிய வரலாறு படைத்தோரின் வரிசைமுறை 100' என்ற நூல் மணவை முஸ்தபாவால் தமிழில் பதிப்புச் செய்யப்பட்டது. அதில் இருந்து தொகுக்கப்படுகின்றது.

> 'ஒரு கோளம் சூரியனுக்கு அருகே இருக்கும்போது அதிக விரைவாக இயங்குகிறது; கோளத்தையும், சூரியனையும் இணைக்கும்கோடு, சமகால அளவுகளில் சம அளவுப் பரப்புகளை அளாவிச் செல்லும் வகையில் ஒரு கோளத்தின் வேகம் வேறுபடுகிறது'

கவிக்களம்

கறைபடிந்த கறுப்புயூலை

எப்படி மறப்போம் அந்த
எண்பத்து மூன்றில் வந்த
துன்பத்து யூலை தன்னை?
உள்ளினால் இன்றும்கூட
உணர்வினியே தீப்பிடிக்கும் !!

தள்ளியே சிங்களத்தை
தமிழீழத்தான் விட்டு;
தனக்கொரு தேசத்தை
அமைத்திட அத்திவாரம்
உள்ளத்துள் இட்டமாதம்
உந்தயூலை தானென்போம் !

ஐம்பத்து மூன்று தமிழ்
அரசியல் கைதிகளை...
சிறையந்த வெலிக்கடையில்
சிததிரவதை செய்து...
கைவேறாய் கால்வேறாய்
கழற்றியே எறிந்ததுவும்;

உயிரோடு அவர் கண்ணை
உன்மத்தர் தோண்டியதும்;
காலால் அதை மிதித்து...
'காணவோ தமிழீழம்?'
என்றவரை கொன்றதுவும்;
அன்று வந்த கறுப்பு
கறை படிந்த யூலையில்தான் !

பாறை பிளப்பவர்போல்
பாரமிகு கடப்பார்- சம்மட்டி
அலவாங்கு கொண்டுவந்து...
ஊர் ஊராய்த் தமிழர்களை
தேடிச் சிதறடித்து; அவர்
உயிர்குடித்த கலவரமும்
உருப்பத்தி எழுந்த காலம்
இக்கறுப்பு யூலைதான் !!

இளம் கன்னித் தமிழிச்சி
எனத்தேடிப் பிடித்து வந்து
அடித்துத் துகில் உரிந்து
அவர்தம் மார்பில் முதுகில்
கொதிதார் கொண்டு... அன்று
குறிவைத்தார் 'சிறீ எழுத்தை !

எரிநெருப்பில் வெந்தவரும்
கருவழிந்து மாண்டவரும்
கற்பிழந்து போனவரும்
கூழுத்தறுபட்டவரும்...
குதறுண்டு கிடந்தவரும்
குற்றுயிராய் வந்தவரும்
குழிகளில் புதைந்தவரும்
கொஞ்சமல்ல மிகுதொகையாம் !!

கறுப்புயூலை கொண்ட அந்த
கொடிய வரலாற்றை...
வருடத்தில் ஒருநாளேனும்
நினையாத தமிழனுக்கு
நெஞ்சுதான் எதற்கென்பேன் !!

ந. கிருஷ்ணசிங்கம்— நோர்வே

சுவிசில் தேசிய மாவீரர் வெற்றிக்கிண்ணம்

தேசவிடுதலைக்காக உறுதியோடும் வீரத்தோடும் தாய்மண்ணை முத்தமிட்டு விதையாகிவிட்ட தேசிய மாவீரர்களை கௌரவிக்கும் முகமாக தேசிய மாவீரர் வெற்றிக்கிண்ணத்திற்கான போட்டிகள் 15.07.2001 சுவிசில் நடைபெற்றன. சீரற்ற காலநிலை இருந்தபோது கழகங்களின் ஒத்துழைப்பு, போட்டிகளை நடத்தி முடிப்பதற்கு பெரிதும் உதவியுள்ளது.

தலைநகர் பேர்னில் அமைந்திருக்கும் வங்டோர்ப் மைதானத்தில் நடைபெற்ற இவ் வெற்றிக்கிண்ண போட்டிகளில் காலை 8 மணியளவில் தேசியக் கொடி ஏற்றப்பட்டு அகவணக்கத்துடன் போட்டிகள் ஆரம்பமாகின. வளர்ந்துவரும் இள வயதினருக்கான உதைபந்தாட்டம், பெரியவர்களுக்கான உதைபந்தாட்டம், மென்பந்து துடுப்பெடுத்தாட்டம் என மூன்றுநிலைகளில் போட்டிகள் அமைந்தன.

பெரியவர்களுக்கான உதைபந்தாட்டம்:

11 வருடங்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் தேசிய மாவீரர் வெற்றிக்கிண்ணத்திற்கான இம்முறைப் போட்டிகளில் 14 கழகங்கள் போட்டிபோட்டுக்கொண்டன. இதில் வெற்றி பெற்றுக்கொண்டோர் விபரம்

1ம் இடம் – Young Birds – லுட்சேர்ன்
2ம் இடம் – Kick Boys – சுவிஸ்
3ம் இடம்– Blue Birds – பாசல்
சிறந்தவீரன்– ஜெகன்– Kick Boys
சிறந்தபந்துகாப்பாளர் – பகலவன் – Young Birds

மென்பந்து துடுப்பெடுத்தாட்டம்:

5 வருடங்களாக தொடர்ந்து கொண்டிருக்கும் இப்போட்டியில் இம்முறை 12 கழகங்கள் மோதிக்கொண்டன. துடுப்பெடுத்தாட்டத்தை சிறப்பாக்க காலநிலை முற்றுமுழுதாக இடையூறு செய்தபோதும், கழகங்கள் நடுவர்களின் பூரண ஒத்துழைப்பு போட்டியை நல்லமுறையில் முடிவுக்கு கொண்டுவர உதவியது. இதில் வெற்றிபெற்றோர் விபரம்

1ம் இடம் – நொதேர்ண் –பாசல்
2ம் இடம் – சுவிஸ்போய்ஸ் – பேர்ன்

சுற்றுப்போட்டியின் சிறந்தவீரன் – ராஜா–ஈழநட்சத்திரம். சிறந்த துடுப்பாட்டவீரன்–சிமித்–சுவிஸ் போய்ஸ். சிறந்த பந்துவீச்சாளர்–வாசன் – நொதேர்ண் சிறந்த சகல துறை ஆட்டக்காரன்– ஜெகத்–நொதேர்ண்.

சிறியவர்களுக்கான உதைபந்தாட்டம்:

மிக உற்சாகத்தோடு பார்வையாளர்களை பெரிதும் கவர்ந்து ஆடிக்கொண்ட சிறியவர்களுக்கான போட்டியில் 31 கழகங்கள் பங்குபற்றி ஆடின. 3 ஆவது தடவையாக நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்

1. 10 வயது பிரிவு

முதலாம் இடம் – இளநட்சத்திர விளையாட்டுக்கழகம் – லீஸ்
இரண்டாம் இடம் – தமிழர் விளையாட்டுக்கழகம் – சுவிஸ்
மூன்றாம் இடம்– சுவிஸ் போய்ஸ் விளையாட்டுக்கழகம் – பேர்ண்

2. 13 வயதுப்பிரிவு

முதலாம் இடம் – இளநட்சத்திர விளையாட்டுக்கழகம் – லீஸ்
இரண்டாம் இடம்– தாய்மண் விளையாட்டுக்கழகம் – சுக்
மூன்றாம் இடம் – தமிழர் நலன்புரிச்சங்கம் சொலத்தூண்

3. 15 வயது பிரிவு

முதலாம் இடம் – இளம்றோயல் விளையாட்டுக்கழகம் – சூரிச்
இரண்டாம் இடம்– தமிழர் விளையாட்டுக்கழகம் – சுவிஸ்
மூன்றாம் இடம்– றோயல் விளையாட்டுக்கழகம் – பேர்ண்.

4 18 வயது பிரிவு

முதலாம் இடம் – தமிழர் விளையாட்டுக்கழகம் – சுவிஸ்
இரண்டாம் இடம் – இளம்றோயல் விளையாட்டுக்கழகம் – சூரிச்
மூன்றாம் இடம் – வானவில் விளையாட்டுக்கழகம் – லுசேர்ண்.

பொன். தாமோதரம்

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

எமது போரியல்...

அடங்கிய படிநிலை வளர்ச்சியைக்கொண்டது. இப் படிநிலை வளர்ச்சிக்கு எமது திட்டங்களும் செயற்பாடுகளுமே காரணமாக அமைகின்றன. போராட்டப் புறநிலை யதார்த்தத்தின் தேவைகளையும் எதிர்கால வளர்ச்சியின் அவசியத்தையும் கருத்தில்கொண்டே நாம் எமது திட்டங்களை வகுத்து அவற்றைச் செயற்படுத்திவருகிறோம். இன்றிலிருந்து பத்து ஆண்டுகளுக்கு முன்னர், (1991 ஏப்ரல் 10) எமது போரியல் வரலாற்றின் ஒரு படிநிலை வளர்ச்சியைக் குறித்து நிற்கும் ஒரு முக்கிய நிகழ்வாக சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி உருவாக்கம் பெற்றது.

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியை நான் உருவாக்கியதற்கு காரணம் உண்டு. இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கி, தீவிரமடைந்துவந்த காலகட்டம் அது. எமது தாயகத்தின் இதயபூமியான வன்னிப் பெருநிலத்தைக் கைப்பற்றும் நோக்குடன் எதிரியான வன் பெரும் படையெடுப்புகளுக்கு ஆயத்தங்கள் செய்துவந்த காலம். பிரதேசப் படையணிகளுடன், கெரில்லாப் போரியல் உத்திகளுடன் எதிரியின் பாரிய படையெடுப்புகளை முறியடிப்பது, காலப்போக்கில் சாத்தியமாகாது என்பதை நான் உணர்ந்தேன்.

எதிரியின் போரியல் வளர்ச்சிக்கேற்ப எமது விடுதலைப் படையும் வளரவேண்டும். இராணுவ சமநிலையை படிப்படியாக எமக்கு சார்பாக திருப்ப வேண்டுமாயின் நாம் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு ஆயத்தங்கள் செய்யவேண்டும். எனவே, மரபுவழிப் போரியல் வளர்ச்சிக்கு முன்னோடியாக ஒரு தாக்குதற் படையணியை உருவாக்க முடிவெடுத்தேன். அந்தப் படையணிதான் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி.

லெப். சாள்ஸ் அன்ரனி ஒரு மாவீரன். எமது இயக்கத்தின் ஆரம்பகால தாக்குதற் தளபதி எனது இலட்சியத் தோழன். வீரத்திற்கும், துணிவிற்கும், உறுதிக்கும் இலக்கணமாக வாழ்ந்து, களமாடி வீழ்ந்தவன். இந்த இலட்சிய வீரனின் நினைவாகவே இப் புதிய படையணிக்கு நான் அவனது பெயரைச் சூட்டினேன். இப்படியாகத் தோற்றம்கொண்ட சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி கடந்த பத்து ஆண்டுகளாக எமது போரியல் வரலாற்றில் படைத்த வீர சாதனைகள் மகத்தானவை. 'துணிவு, தந்திரம், பயிற்சி' என்ற எமது போரியல் கோட்பாடுகளை தாரக மந்திரமாக ஓழுகி, இப்படையணியின் தளபதிகளும் போராளிகளும் நிகழ்த்திய தாக்குதற் சமர்களும், முறியடிப்புச் சண்டைகளும் எமது போராட்ட வரலாற்றிற்கு பெருமை சேர்ப்பவை.

பத்து ஆண்டுகளுக்குள் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி சிறு விதையாக முளைத்து, பெருவிருட்சமாக எழுந்து நிற்கிறது. இந்த வளர்ச்சிக்கு இப்படையணியிலிருந்து விடுதலைக்கு வித்தான வீரத் தளபதிகளதும் போராளிகளதும் அர்ப்பணிப்புக்கள்தான் ஆதாரமானவை. இந்த விடுதலை வீரர்களது கனவுகளோடு, வெற்றிகளைக் குவித்துச்செல்லும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி தனது விடுதலைப் பாதையில் தொடர்ந்தும் முன்னேறிச் செல்ல எனது வாழ்த்துக்கள். அத்தோடு இப்படையணியின் பத்தாவது ஆண்டு மலர் சிறப்பாக வெளிவரவும் எனது ஆசிகள் எனத் தேசியத் தலைவர் வாழ்த்துரையில் தெரிவித்துள்ளார்.

(32 ம் பக்கத் தொடர்ச்சி)

சாத்வீகமான...

மையான பாடசாலை மாணவர்கள் திவ்வியனின் விடுதலை வேண்டிப் பாடசாலைகளுக்குச் சமூகம் அளிக்கவில்லை. ஆனால் படையினரும் பொலீஸாரும் அதிபர், கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்களை அச்சுறுத்தி பல்கலைக்கழக மாணவருக்கு ஆதரவு வழங்கக்கூடாதென வற்புறுத்தி மிகத் தீவிரமாகச் செயற்பட்டு வருகிறார்கள். வன்முறைகளை விடுத்து ஜனநாயக ரீதியில் மாணவர்கள் மேற்கொண்டு வருகின்ற எதிர்ப்பு நடவடிக்கையை இராணுவத்தினரும் பொலீஸாரும் ஆயுத முனையில் அடக்குகின்ற செயற்பாட்டில் ஈடுபட்டுவருகின்றனர். இது குடாநாட்டில் பெரும் வன்முறைகள் வெடிப்பதற்கான சைகைகளையே காட்டுகின்றது. சக மாணவனை இராணுவத்தின் இரும்புப் பிடிக்குள் தவறவிட்ட தாளாத துன்பத்தோடும் பொறுமையோடும் சாத்வீகமான முறையில் குரல் கொடுத்துவரும் மாணவர்களை அரச படைகள் சீண்டி வன்முறைக் களத்திற்கு வற்புறுத்தி அழைக்கின்றன. இன்று பகிஸ்கரிப்பில் ஈடுபட்டுவரும் பாடசாலை மாணவர்கள், தொடர்ந்தும் எம் சக மாணவனின் விடுதலை கிட்டும்வரை ஓயாது எமக்கு ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

அன்பிற்குரிய பெற்றோர்களே..! உங்கள் பிள்ளைகள் ஆகிய நாம் உங்களின் பிள்ளைகளின் நிம்மதியான வாழ்விற்காக பேரினவாதத்துக்கு எதிராகக் குரல் கொடுத்து எமது சகாவை இழந்து நிற்கின்றோம். இன்று எமக்கு நடந்த இக் கொடூரம் நாளை உங்கள் வீட்டு வாசல் படியினை எட்டிப்பார்த்து உங்கள் கண்களையும் இரத்தம் சிந்த வைக்கும் கோரமான நிலையை உருவாக்குவதை நாம் விரும்பவில்லை. உங்கள் பிள்ளைகள் எமக்கு ஆதரவாக பாடசாலை பகிஸ்கரிப்பில் ஈடுபடுகின்றபோது அவர்களுடன் இணைந்து நீங்களும் இந்த அநீதிக்கு எதிராகக் குரல் கொடுங்கள். பேரினவாத சாத்தான் உங்கள் கதவுகளைத் தட்டுமுன் உங்கள் கரங்களை எம்மோடு இணையுங்கள் இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மணலாற்றில் தாக்குதல்

படையினர் உடல்கள் புலிகள் வசம்

(17.07.01)

மணலாறு கொக்குத்தொடுவாய் முகாமிற்கும் கோட்டக்கேணி முகாமிற்கும் இடையில் அமைந்துள்ள சிறீலங்கா இராணுவ காவலரண் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய அதிரடித் தாக்குதலில் மூன்று சிப்பாய்கள் கொல்லப்பட்டுள்ளனர். நேற்று அதிகாலை 12.02 மணியளவில் இத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

வெற்றிகரமான இத் தாக்குதலின் பின்னர், விடுதலைப் புலிகளால் இரு இராணுவச் சிப்பாய்களின் சடலங்கள் கைப்பற்றப்பட்டதுடன் காவலரணில் இருந்த தானியங்கி துப்பாக்கிகள் உட்பட ஆயுத தளவாடங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

நெதர்லாந்தில் பொங்கு தமிழ்

(16.07.01)

யாழ்.குடாவில் தொடங்கி இன்று உலக நாடுகள் எங்கும் தமிழ் மக்கள் எழுச்சியுடன் மேற்கொண்டு வரும் பொங்கு தமிழ் நிகழ்வுகள் நேற்று நெதர்லாந்தின் அவுடன்பொஸ் நகரிலும் இடம்பெற்றன. மண்டபம் நிறைந்த மக்களோடு இடம்பெற்ற இப் பொங்கு தமிழ் நிகழ்வில், தமிழர்களின் தாயகம், சுயநிர்ணயம், தேசியம் ஆகிய உரிமைகளை கூடியிருந்த மக்கள் பிரகடனப்படுத்தினார்கள்.

இதேவேளை, இப் பொங்கு தமிழ் நிகழ்வுகள் எதிர்வரும் 28ம் திகதி சனிக்கிழமை சுவிசிலும், 29ம் திகதி ஞாயிறன்று பிரான்சிலும் நடைபெறுவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

உங்கள் ஜாதக குறிப்புக்கள் கைவசம் இல்லையா? கவலையை விடுங்கள்

கம்பியூட்டரின் உதவியுடன் நாங்கள் அவற்றைக் கணித்துத் தருகிறோம்.
உங்கள் பிறந்த திகதி, பிறந்த நேரம், பிறந்த இடம் இவை மட்டும் இருந்தால் போதுமானது.
பிறந்த நேரம் தெரியாதவர்களுக்கு நியுமராலஜி மூலம் எதிர்காலப் பலன்கள் கணித்துத் தரப்படும்.
உங்கள் குழந்தைகளின் ஜாதகக்குறிப்புக்கள், ஜாதகபலன்களை கணித்துக் கொள்வதற்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

Pega Star -Co Verleger
Mr. A. Thevaraj
Hasenberg str. 47
70176 Stuttgart/ Germany
Tel: 0049 + 711 - 6157028
Fax: 0049 + 711-6157030
E-Mail: theva@t-online.de

ஜாதகக்குறிப்பு + ஜாதகப்பலன்கள் (15 பக்கங்கள்) கணித்துத் தருவதற்கு தபால் செலவு உட்பட தொகை 56 DM, 50 Swiss FR, 40 Ca $ மட்டுமே!
படிவத்தை நிரப்பி அனுப்பவும்

Fullname: .....
Date of Birth: ..... Time of Birth: .....
Place of Birth: .....
Address: .....
.....
City/ Date: .....
Signature

Name: A. Thevaraj
Bank: Deutsche Bank Stuttgart
Konto Nr: 9620556800 BLZ 60070024
Name: Arumilppillai Thevaraj

Pub.Gr

45ம் நாள் நினைவாஞ்சலி

வையத்தில்: 09 – 11 – 1951

வானுலகில்: 02 – 06 – 2001

திரு. சங்கரப்பிள்ளை தர்மலிங்கம்

எம்மை எல்லாம் மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டு எம்மைவிட்டு மறைந்துவிட்ட எமது அன்புக்குரியவரின் மறைவைக் கேள்வியுற்றதும் எம் இல்லம் வந்து ஆறுதலளித்த அன்பர்களுக்கும், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் பங்குகொண்டு உதவிகள் புரிந்தவர்களுக்கும் இறுதி நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனைவர்க்கும் எமது குடும்பத்தவரின் ஆத்மசாந்திக்காக நடைபெற்ற சடங்குகளில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

Krefelder Str-27
40670 Meerbusch
Germany

இங்ஙனம்
மனைவி
இராசலட்சுமி தர்மலிங்கம்

PAPAYA
Restaurant
MODERN CEYLON CUISINE

* தமிழர்களால் தயாரிக்கப்பட்டு தமிழர்களால் பரிமாறும் அறுசுவை உணவகம்.
* அனுபவமும், திறமையும் உள்ள சமையலாளர்களால் தயாரிக்கப்படுகின்றன.
* இத்தாலிய உணவுவகைகளும் தேர்வுகளுக்குண்டு.
* திருமணம், பிறந்தநாள் மற்றும் விருந்துபசார வைபவங்களுக்கு குறித்த நேரத்தில், குறைந்த நியாயமான விலைகளில் அறுசுவையுடன் பரிமாற காத்திருக்கின்றார்கள்.

குறைந்த விலையில்
குன்றாத மனநிறைவு

15 Village Way East,
Rayners Lane,
Harrow,
Middlesex HA2 7LX
Tel: 020 8866 5582 Fax: 020 8866 5582
www.papayauk.com,
e-mail:papaya@papayauk.com

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
புதிய நிர்வாகத்தில்... புதுப்பொலிவுடன்...
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The Broadway, Southall, Middx. T.P: 020 8813 9126
Pub

எமது போரியல் வரலாற்றின் ஒரு படிநிலை வளர்ச்சி சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் விடுத்த வாழ்த்துச்செய்தி

(17.07.2001)

15.07.2001 அன்று சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் 10ம் ஆண்டு நிறைவு நிகழ்வும், லெப்.சாள்ஸ் அன்ரனியின் 18ம் ஆண்டு நினைவு நிகழ்வும் வன்னிப் பிரதேசத்தில் மிகவும் சிறப்புடன் நடைபெற்றது. இதில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள், தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் என பலரும் கலந்துகொண்டனர். முதல் நிகழ்வாக மதிப்பிற்குரிய தேசியத் தலைவர் அவர்கள் பொது ஈகைச்சுடரை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்துவைத்தார். மூத்த தளபதி லெப். சாள்ஸ் அன்ரனியின் திருவுருவப் படத்திற்கு தேசியத் தலைவர் மலர்மாலை அணிவித்ததைத் தொடர்ந்து, சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியிலிருந்து இதுவரை வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களுக்கு சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியைச் சேர்ந்த போராளிகளால் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

ஒரு தசாப்தத்தைக் கடந்த இப் படையணி நிறைவு விழாவில் லெப். சீலன் அவர்களை நினைவில்கொண்டு முதல் கலை நிகழ்வாக அஞ்சலி நடனம் நடைபெற்றது. சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் பத்து வருட காலப்பதிவுகளை உள்ளடக்கிய நூலொன்றையும், ஒலிநாடாத் தொகுப்பின் முதல் பாகத்தினையும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் சிறப்புத் தளபதி வீரமணி அவர்கள் தேசியத்தலைவர் அவர்களிடம் வழங்கினார்.

தொடர்ந்து சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியிலிருந்து திறமையாகச் செயற்பட்ட தளபதிகள், போராளிகளுக்கு தேசியத் தலைவர் அவர்கள் சிறப்புச் சான்றிதழ்கள் வழங்கி கௌரவித்ததைத் தொடர்ந்து தலைவர் இப்படையணிக்குரிய சிறப்புப் பரிசினை சிறப்புத் தளபதி வீரமணியிடம் வழங்கிக் கௌரவித்தார். இதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் கருத்துரைகளும் இடம் பெற்றதோடு இப் படையணியின் பத்துவருட்கால வளர்ச்சிபற்றி தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் வாழ்த்துச் செய்தியும் வழங்கப்பட்டது. இறுதி நிகழ்வாக தமிழீழ இசைக்குழுவினரின் இசை நிகழ்ச்சி இடம்பெற்றது.

தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்ததாவது, வரலாறு என்பது மனிதனுக்கு அப்பாற்பட்ட ஒரு தெய்வீக சக்தி அல்ல. அது மனிதரின் தலைவிதியை நிர்ணயித்துவிடும் சூத்திரப்பொருளும் அல்ல. வரலாறு என்பது மனித செயற்பாட்டு சக்தியின் ஒரு வெளிப்பாடு. மனிதனே வரலாற்றைப் படைக்கிறான். மனிதனே தனது தலைவிதியையும் நிர்ணயிக்கிறான். எமது விடுதலை இயக்கத்திற்கும், எமது இயக்கத்தால் முன்னெடுக்கப்படும் எமது தேச விடுதலைப் போராட்டத்திற்கும் ஒரு மகத்துவமான வீர வரலாறு உண்டு. அந்த வீர வரலாற்றை நாமே படைக்கிறோம். நாமே எமது வீர வரலாற்றின் கதாநாயகர்கள்.

எமது போராட்ட வரலாறு பல முக்கிய திருப்புமுனைகள்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

சாத்வீகமான முறையில் குரல்கொடுக்கும் மாணவர்களை படைகள் வன்முறைக்கு வற்புறுத்தி அழைக்கின்றன

– மாணவ சமூகத்திற்கு பல்கலைக்கழக ஒன்றியம் கோரிக்கை –

(15.07.01)

அப்பாவிப் பாடசாலை மாணவர்களை இராணுவமும் பொலீஸாரும் வன்முறைக்கு வலிந்து இழுக்கின்றன. ஆகவே மாணவர்கள் எந்த விதமான வன்முறையிலும் ஈடுபட வேண்டாம் அமைதியாக வீட்டில் இருந்து ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டுகின்றோம் என யாழ்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கடந்த வியாழனன்று விடுத்துள்ள அறிக்கையில் கேட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, எமது சக மாணவன் திவ்வியன் விடுதலை செய்யப்படும் வரை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கால வரையற்ற பகிஸ்கரிப்பைத் தொடர்ந்து வருகிறார்கள். மாணவர்களின் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்கின்ற முயற்சியை விடுத்து மாணவர்களின் நியாயமான போராட்டத்தினை நசுக்குகின்ற நோக்கோடு பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளது. பகிஸ்கரிப்பைக் கைவிட்டால்தான் உடனடியாகப் பல்கலைக்கழகத்தை மீண்டும் திறக்க முடியும் எனத் துணை வேந்தர் கூறிவருகின்றார்.

பல்கலைகழகத்தில் தனிப்பட்ட ஒரு மாணவனின் உயிருக்குப் பாதுகாப்பு இல்லை எனில், அந்தப் பல்கலைக்கழகம் தொடர்ந்தும் இயங்கி வருவது, இங்கே நிர்வாகங்கள் சுமுகமாக இயங்கி வருகின்றதென வெளி உலகிற்கு பிரசாரப்படுத்தவே உதவும். சிறீலங்கா அரசின் அந்த முயற்சிக்கு நாம் முண்டுகொடுக்கத் தயாரில்லை. திவ்வியனின் விடுதலை கிட்டும்வரை மாணவர்களாகிய நாம் பகிஸ்கரிப்பைக் கைவிடப்போவதுமில்லை, பல்கலைக்கழகத்தைத் திறக்க அனுமதிக்கப்போவதுமில்லை. இன்று பல்கலைக்கழக மாணவர்களுக்குச் சம்பவித்திருக்கின்ற கோரமான மனித உரிமை மீறல்கள் நாளை தமக்கும் இடம்பெறலாம் என்ற அச்சத்துடன் தமக்காகக் குரல் கொடுத்துவந்த மாணவனின் விடுதலைக்காக குடாநாட்டுப் பாடசாலை மாணவர்களும் பாடசாலையைப் புறக்கணித்து பகிஸ்கரித்து வருகின்றனர். ஆனால் இன்றையதினம் (12-07-2001) பாடசாலையைப் பகிஸ்கரித்து வீடுதிரும்பிக் கொண்டிருந்த பாடசாலை மாணவர்கள் பொலீஸாரினாலும் ஆயுதப்படையினராலும் கொக்குவில் பகுதியிலும் வேம்படிப் பகுதியிலும் வைத்துத் தாக்கப்பட்டு அவர்களின் அடையாள அட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதேபோன்று பாடசாலைக்குச் செல்லாது வீடுதிரும்பிக் கொண்டிருந்த மாணவன் ஒருவன் சென்.ஜோன்ஸ் பாடசாலை அருகில் படையினரால் தாக்கப்பட்டு பின் கைது செய்யப்பட்டுள்ளார். குடாநாட்டின் பெரும்பான்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

ஆலங்கேணியில் பொலிஸ் அதிகாரி சுட்டுக் கொலை

(16.07.01)

திருமலை கிண்ணியா ஆலங்கேணியில் சிறீலங்காப் பொலிஸ் அதிகாரி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். நேற்றுக் காலை எட்டு மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. ஆலங்கேணி கிராமத்தில் உள்ள சிறீலங்கா பொலிஸ் காவலரணுக்கு பொறுப்பாக இருந்த பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் அன்வர்கான் லியாகத் அலி என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவர் என்று சிறீலங்கா பொலிஸ் தரப்பு கூறியுள்ளது. கடமை முடிந்து கிண்ணியாவில் உள்ள தனது சொந்த ஊரான குறிஞ்சாக்கேணிக்கு திரும்பிக் கொண்டிருந்தபோதே இவர் விடுதலைப் புலிகளின் பிஸ்டல் அணியினரால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

98ம் ஆண்டு உப்பாறு தமிழ்க் கிராமத்தில் உள்ள தமிழ் மக்கள் இராணுவத்தினரின் உத்தரவின்மீது சொந்த வீடு வாசல்களைவிட்டு வெளியேறி ஆலங்கேணிக்கிராமத்தில் நலன்புரி நிலையங்களில் வசித்து வருகின்றார்கள். அதனை அடுத்து ஆலங்கேணியில் பொலிஸ் காவல் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டது என்பதும் அங்குள்ள மக்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக இப் பொலிஸ் நிலையம் அமைந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

Southharrow Food & Wines
234 & 236 Northolt Road, South Harrow, HA2 8DU
Tel: 020 8423 6321
உங்கள் அன்றாட அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்துகொள்ள நாடவேண்டிய ஒரே நிறுவனம்
Southharrow Food & Wines
★ வாரம் ஏழு நாட்களும் இரவு 11 மணி வரையும் திறந்திருக்கும்
Pub